## கோயமுத்தூரிலிருந்து ட்ரங்க்கால்

அன்புக்குரிய வாசக நெஞ்சங்களே!

வணக்கம்.

சென்ற மாதம் வெளிவந்த க்ரைம் நாவல் ஸ்பெஷல் 'திக் திக் திலகா!' விலை ரூ.15/- என்பதால் வாசகர்களின் நடுவில் அந்த இதழுக்கு வரவேற்பு எப்படி இருக்குமோ என்ற உதறல் என் உள்ளுக்குள் இருந்தது. ஆனால் சேலம் ரயில் நிலையத்தில் உள்ள ஒரு புத்தகக் கடையில் அதன் உரிமையாளரிடம் பேசிவிட்டு ரயிலைப் பிடிப்பதற்காக அடுத்த பிளாட்பாரத்தை நோக்கி நடந்து கொண்டிருந்த போது என் பின்னாலேயே வாசகர் ஒருவர் 'திக் திக் திலகா' புத்தகத்தோடு வேக வேகமாய் வந்து ''ஸார்! ஆட்டோகிராப் ப்ளீஸ்'' என்றார். போட்டுக் கொடுத்தேன். பிறகு கேட்டேன்.

''என்ன... விலை அதிகமா...?''

இந்த கேள்விக்கு அவர் சொன்ன பதில் என்னை மலைக்க வைத்தது. ''க்ரைம் நாவலுக்கு விலை ஏது ஸார்...? பாடாவதி தமிழ் தாதா படங்களுக்கு 50 ரூபாய் கொடுத்து ஹீரோ கையில் இருக்கிற அரிவாளையும், நடிகையோட தொப்புளையும் பார்த்துட்டு வர்றதுக்கு உங்க நாவல் எவ்வளவோ மேல். பொது அறிவு விஷயங்கள் எவ்வளவோ இருக்கு... க்ரைம் நாவல் கையில் இருந்தாலே மனசுக்குள்ளே குபுகுபுவென்று ஒரு தைரியம் வருது ஸார்...!''

வாசகரின் வார்த்தைகள் கொடுத்த சந்தோஷத்தை மனசு பூராவும் நிரப்பிக் கொண்டு அவரிடம் விடைபெற்று (வாசகரின் பெயர் - ரவி விஜய், ஊர் - கிருஷ்ணகிரி.) ஸ்டேஷனில் இருந்த வெயிட்டிங் ரூமுக்கு வந்து ஒரு புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு உட்கார்ந்த போது என் முன்னே யாரோ வந்து நின்றார்கள். நிமிர்ந்தேன். ஒரு பெண். வயது முப்பதுக்குமேல் இருக்கலாம். வெள்ளைச் சேலையில் நீலநிற பார்டர். துடைத்து வைத்த மாதிரி முகம். உடம்பில் ஒரு பொட்டு தங்கம் இல்லை. ஆனால் புன்னகையில் பொன் தெரிந்தது. அந்தப் பெண் புன்முறுவலோடு பேசினாள்.



''ஸார்! நான் தேவகி. பத்து வருஷங்களுக்கு முன்பு நான் உங்கள் தீவிர வாசகி. இப்போ நான் ஒரு கிராம சேவகி. ஒரு தன்னார்வத் தொண்டு

(தொடர்ச்சி 96ம் பக்கத்தில்)

## எடிட்டர் ஏரியா

231
பிப்ரவரி - 2007

ராஜேஷ்குமார் அண்ணன் ஏதாவது ரொம்ப ரொம்ப முக்கியமான நிகழ்ச்சிகள் இருந்தால் தான் சென்னைக்கு வருவார்கள். அவர் அடிக்கடி வராததற்கு முக்கிய காரணம் நாந்தே!

ஆமாங்க. நான் தான் மாசம் ஒரு தபா, ரெண்டு தபா கோவை சென்று விடுகிறேனே. அது இல்லாம நான் அடிக்கடி வெளியூர் சென்றுவிடுவேன். நான் சென்னையில் இல்லை என்றால் அவர் சென்னை வர விரும்புவது இல்லை.

'வீட்டோ பவர்' என்று ஒண்ணு இருக்கு தெரியுமா? இது ஐ.நா சபையின் உச்ச அதிகாரம்.

அமெரிக்கா, ரஷியா, ஜெர்மன், சீனா, ஃப்ரான்ஸ், இங்கிலாந்து உள்ளிட்ட பல நாடுகள் அங்கம் வகிக்கும் அமைப்பு தான் ஐக்கிய நாடுகள் சபை. இது அமெரிக்கா வால் உருவாக்கப்பட்டது. இந்த ஐ.நா.சபையில் அமெரிக்கா, ர[redacted] ஜெர்மன், சீனா, பிரான்ஸ், இங்கிலாந்து இவை[redacted] நாடுகள். இந்த வல்லரசுகள் சேர்ந்துதான் உ[redacted] சட்டதிட்டங்களை இயற்றுவார்கள்; [redacted]

உதாரணமா நம்ம [redacted] நாடுகளின் [redacted] ஆக [redacted] னால் [redacted] சம்மத[redacted] காமல் இரு[redacted] தள்ளிப் போகிற[redacted] போல் ஒரு விஷயம் அனைத்து நாடு களும் சம்மதிக்கிறது என்று வைத்துக் கொள்ளுவோம். உடனே அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பெரியண்ணன் அமெரிக்கா அந்த விஷயத்தில் தனது



(2ஆம் அட்டைத் தொடர்ச்சி) 96

நிறுவனத்தில் வேலை. உங்களைப் பத்து நிமிஷத்துக்கு முந்தி அந்த புத்தகக் கடையில் பார்த்தேன். உங்ககிட்டே ஒரு ரெண்டு நிமிஷம் பேசலாமா?''

''தாராளமா...!''

எனக்கு எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்ட தேவகி சற்றே கோபத்தோடு பேச ஆரம்பித்தார்.

''ஸார்...! சமீப காலங்களில் நடந்த சில குடும்பக் கொலைகளில் பெண்கள் குற்றவாளிகளாய் சேர்க்கப்பட்டு வர்றாங்க...! இதைப் பற்றி நீங்க என்ன நினைக்கறீங்க...?''

''போலீஸ் தகுந்த ஆதாரம் இல்லாமே கைது பண்ண மாட்டாங்களே?''

''அப்படி சொல்லாதீங்க ஸார்...! போலீஸூம் சில நேரங்களில் அவசரப்பட்டு முடிவு எடுத்துப் பெண்களைக் கைது பண்ணிட்றாங்க. இது ஒரு கொடுமை என்றால் இதைவிட ஒரு பெரிய கொடுமை தமிழ்நாட்ல நடந்துட்டு வருது! அது என்னான்னு தெரியுமா ஸார்?''

''சொல்லுங்க தேவகி...!''

''ஒரு பெண் கொலைக் குற்றவாளின்னு செய்தி வெளியே வந்ததுமே அதை இன்றைய பத்திரிகைகளும், டி.வி.மீடியாக்களும் ஒன்றையொன்று போட்டி போட்டுக் கொண்டு அந்தச் செய்தியை ஊதிப் பெரிதாக்கி பரபரப்பாக்குவதிலேயே மும்முரமாய் செயல்படுகின்றன. செய்தி உண்மையா பொய்யா என்று கூட அவர்கள் பார்ப்பதில்லை. ஒரு பெண் குற்றவாளியா இல்லையா என்பது தீவிர விசாரணைக்குப் பிறகே தெரிய வரும். ஆனால் இந்த டி.வி., பத்திரிகை மீடியாக்கள் அதைப் பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை. உதாரணத்திற்கு ஒரு சம்பவம் சொல்லட்டுமா ஸார்?''

''சொல்லுங்க...!''

''ஆறு மாதங்களுக்கு முன்பு கொடைக்கானலுக்கு ஒரு தம்பதி தங்கள் தேனிலவைக் கொண்டாடப் போனார்கள். போன இடத்தில் கணவன் கொலை. கணவன் கொலை செய்யப்பட்டதற்குக் காரணம் அந்த மனைவிதான் என்று போலீசார் முடிவு செய்து அவளைக் கைது செய்து விட்டார்கள். இந்த செய்தி முதன் முதலில் வெறும் இரண்டு பத்திக்கு பத்து செ.மீ. அளவில் வந்த செய்தி. வாசகர் நடுவில் சூடு ஏற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் மறுநாளிலிருந்து அரைப் பக்கம், முழுப் பக்கம் என்று செய்தி

(தொடர்ச்சி 3ஆம் அட்டையில்)

ஜீயே பப்ளிகேஷனுக்காக ஜீயே பப்ளிகேஷனில் அச்சிட்டு (பிரஸ்) வெளியிடுபவர் மற்றும் உரிமையாளர் ஜி. அசோகன். முகவரி: 352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை - 5. தொலைபேசி: 28544294
ஆசிரியர்: ஜி.அசோகன்.

(96ம் பக்கத் தொடர்ச்சி)

பரபரப்பாக்கப்பட்டுள்ளது. அதுவும் அந்தப் பெண்தான் கொலையாளி என்ற பார்வையில்.

உண்மையில் என்ன நடந்து இருக்கும் என்று இப்படி நினைத்துப் பார்ப்போமே? ஒரு அப்பாவி தம்பதி தேனிலவு போய் இருக்க அங்கு வரும் ரவுடிகளால் நகைக்காகவோ அல்லது காமப் பசிக்காகவோ அல்லது அப்பெண்ணை ஒருதலையாய்க் காதலித்த ஒரு ...பராலோ கொலை நடக்கப் போய், தவறான சந்தர்ப்ப ...ழ்நிலையில் அந்தப் பெண் குற்றவாளியாய் ...ாலீசாரின் பார்வைக்குப் பட்டிருந்தால்...? ஆசை ஆசையாய் வளர்த்து ஆளாக்கி திருமணம் செய்து அழகு பார்த்து தேனிலவுக்குப் போய் இருக்கும் தன் அன்பு மகள் கொலையாளி என்று செய்தி வரும் போது அந்தப் பெற்றோர்களின் மனநிலை எப்படி இருக்கும்...?'' - பேச்சை சில விநாடிகள் நிறுத்திவிட்டு தேவகி தொடர்ந்தார்.

''இதில் வேடிக்கை என்னவென்றால் ஒரு கட்டம் வரைக்கும் செய்திகளைப் போடும் பத்திரிகைகளும் டி.வி.மீடியாக்களும் அதற்குப் பிறகு அந்தப் பெண்ணைக் கண்டு கொள்வதே இல்லை. கைது செய்து சிறையில் அடைக்கப்பட்ட அந்தப் பெண் என்ன ஆனாள்...? சம்பவத்துக்கு காதல் பிரச்னைதான் காரணமா...? அந்தப் பெண்ணுக்கு ஜாமீன் கிடைத்ததா? காதலன் என்று சொல்லிக் கொண்டு வந்த நபர் உண்மையிலேயே காதலன்தானா? இது போன்ற கேள்விகளுக்கு பத்திரிகைகள், டி.வி.க்கள், பதில் சொல்லவில்லை. காரணம் அதில் பரபரப்போ விறுவிறுப்போ இல்லை. மாட்டு வண்டி ஓட்டுபவர்கூட செல்போன் வைத்துக் கொள்ளும் அளவுக்கு விஞ்ஞானம் வேண்டுமானால் வளர்ச்சி அடைந்து இருக்கலாம். ஆனால் இன்னமும் பெண்கள் பாதுகாப்பற்ற நிலையில்தான் இந்த சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். உதாரணத்துக்கு 500 பவுன் 'கால் சென்டர்' பெண்கள் படுகொலைகள். 500 பவுன் போட்டு கட்டிக் கொடுத்தாலும் பெண்களின் தற்கொலைகள், துணைவேந்தர் மருமகளும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆகவே...''

''சொல்லுங்கள் தேவகி...!''

''வீரியம் மிக்க உங்களுடைய எழுத்துக்கள் உண்மையின் அடிப்படையில் என்றும் பெண்களுக்கு ஆதரவாகவே இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம். உங்களுடைய பேனா அதற்காக உழைக்குமா?''

''கண்டிப்பாக...!''

''உங்களோட அடுத்த மாச தலைப்பு என்ன ஸார்?''

**''எங்கும் விவேக்!**
**எதிலும் விவேக்!''**

''டொக்!''

**மிக்க அன்புடன்,**
**ராஜேஷ்குமார்.**

நாட்டுக்கு என்ன சாதகம், என்ன பாதகம் என பார்க்கும். ஒரு மாத்து அமெரிக்காவிற்கு பாதகம் என்றாலும் தனது விசுவாசியான ஐ.நா.விடம் கூறி ஐ.நா.வின் உச்சப்பட்ச அதிகாரமான வீட்டோ மூலம் ரத்து செய்து விடும்.

சில சமயம் மற்ற வல்லரசு நாடுகள் ஏற்றுக் கொள்ளாத ஒரு விஷயம், அமெரிக்காவிற்கு சாதகம் என்று இருந்தால் - ஐ.நா.வின் வீட்டோ பவர் மூலம் நிறைவேறும். அதுமாதிரி லேனா தமிழ்வாணன் அண்ணனும், ரவி தமிழ்வாணன் அண்ணனும் தங்களது அன்பு என்ற 'வீட்டோ பவர்' மூலம் - அண்மையில் நடைபெற்ற 30-வது புத்தக கண்காட்சியில் தினம் தினம் ஒரு மணி நேரத்திற்கு ஒரு வி.வி.ஐ.பி. என சிறப்பு விருந்தினராக வரும் நிகழ்ச்சிக்கு - மணிமேகலை பிரசுரம் சார்பில் அண்ணன் ராஜேஷ்குமாரை அழைத்து விட்டார்கள். எங்களுக்கு ஐ.நா. - 'லேனா'. அப்புறம் வராமல் இருப்பாரா ராஜேஷ் அண்ணா?

அண்ணன் ராஜேஷ்குமார் கலந்து கொண்ட போது 'வெயில்' வந்தது. ஆமாங்க... வெயிலில் நடிப்பால் சூடேற்றிய நடிகர் பசுபதி - ஜோதிடர் வரதன் - கவிஞர் விஜய் என ஒவ்வொரு துறையாளர்கள் வந்திருந்தார்கள்.

அண்ணன் ராஜேஷ்குமாரும், 'வெயில்' பசுபதியும் வாசகர்கள் மணிமேகலை பிரசுர அரங்கில் வாங்கிய புத்தகங்களுக்கு கையெழுத்து போட்டார்கள்.

நிகழ்ச்சி முடிந்ததும் லேனா அண்ணன் என்னை அழைத்து அண்ணனுக்கும், பசுபதிக்கும் நூல் ஆடை போர்த்தி, நினைவுப் பரிசு தந்து கூறினார்கள். ரவிதமிழ்வாணன் அண்ணன் சிறப்பு விருந்தினர்களுக்கு லேனா எழுதிய ஒருபக்க கட்டுரைகள் ஆயிரம் அடங்கிய தொகுப்பு நூலைத் தந்தார்கள்.

'சரிங்க [illegible]...! அவர்களுக்கு நூல் ஆடை நினைவுப் பரிசு ஒருபக்க கட்டுரை மெகா தொகுப்பு கொடுத்தார்கள். உங்களுக்கு என்ன கொடுத்தார்கள்?' - என்று தானே கேட்கிறீங்க...

காத கிட்ட கொண்டாங்க. ஒரு சமூசாவும், சூடா ஒரு கப் டீயும்...

இரண்டு நாட்கள் அண்ணனுடன் சென்னையை சுற்றியது. ஜிப்பா ஜட்டி ச்சே - சில்பா ஷெட்டி கூட இங்கிலாந்த சுத்தின சந்தோசம்.

அன்புடன், **ஜி.அசோகன்.**

# அர்த்தமுள்ள அரட்டை

**வி**வேக் தனக்கு வந்த எஸ்.எம்.எஸ். செய்திகளை செல்போனில் பார்த்து அதற்கு பதில் அனுப்பிக் கொண்டிருந்த போது ரூபலா அன்றைய பேப்பரும் கையுமாய் வந்து நின்றாள்.

''என்னங்க...! இந்த பேப்பர்ல வந்த நியூஸைப் பார்த்தீங்களா...?''

''நான் இன்னும் காலையிலிருந்து பேப்பரே பார்க்கலை. என்ன பேப்பர்ல...? தங்கம் பழையபடி பவுன் ரெண்டாயிரம் ரூபாய்க்கு வந்துடுச்சா...?''

''பவுன் ரெண்டாயிரம் ரூபாய்ங்கிறது இருபத்தஞ்சு வருஷத்துக்கு முந்தின விலை. அந்த விலை இனி எந்த ஜென்மத்திலும் வராது.''

''பின்னே என்ன நியூஸ்...?''

''நியூஸோட தலைப்பைப் படிக்கட்டுமா...?''

''படி... படி...!''

''விண்ணில் இருந்து வந்த விருந்தாளி!''

''தலைப்பே ஆர்வத்தைத் தூண்டற மாதிரி இருக்கு...! நியூஸ் என்னான்னு படி ரூபி...!''

ரூபலா படிக்க ஆரம்பித்தாள்.

''அமெரிக்காவில் உள்ள நியூ ஜெர்ஸி மாகாணத்தில் பிரிஹோல்ட் டவுன்ஷிப் என்ற இடத்தில் வசிப்பவர் சீனிவாசன் நாகேஸ்வரன். கம்ப்யூட்டர் என்ஜினியரான இவர் தகவல் தொழில்நுட்ப பணிகளில் ஈடுபடும்

நிறுவனங்களுக்கு ஆலோசனைகள் வழங்கும் நிறுவனத்தை நடத்தி வருகிறார். இவரது மனைவி பெயர் சங்கரி. சீனிவாசன் தன் தாய் மற்றும் மனைவி குழந்தைகளோடு வசித்து வருகிறார். சில தினங்களுக்கு முன்பு இரவில் வீட்டில் உள்ள குளியல் அறையில் முகம் கழுவ தூக்கக் கலக்கத்தில் சென்றார் சீனிவாசன். அப்போது அந்த அறையின் தரையில் சிமெண்ட், செங்கல் மற்றும் கூரைப் பகுதியின் துண்டுகள் சிதறிக் கிடந்தன. உடனே அவர் கூரைப் பகுதியைப் பார்த்த போது அதில் ஓட்டை விழுந்து இருந்தது."

விவேக் குறுக்கிட்டான். ''அடடே...! நியூஸ் ரொம்பவும் இண்ட்ரஸ்டிங்கா இருக்கு... மேல படி... படி...!''

ரூபலா விட்ட இடத்திலிருந்து படிக்க ஆரம்பித்தாள். ''அந்த ஓட்டையைப் பார்த்த சீனிவாசன் அப்போதைக்கு அதை பெரிதாய் எடுத்துக் கொள்ளவில்லை. 'குளியல் அறையின் கூரையில் ஏதேனும் பழுது ஏற்பட்டு இருக்கலாம். எனவே அதில் இருந்து சுவரின் மேல்பகுதி உடைந்து கீழே விழுந்து இருக்கும்' என்று நினைத்துவிட்டு மறுபடியும் தூங்கச் சென்று விட்டார். அடுத்த நாள் காலையில் அவருடைய மனைவி சங்கரி குளியல் அறையை சுத்தம் செய்தார். அப்போது பார்வையில் கருப்பு நிறத்தில் ஒரு கல் பட்டது. அந்தக் கல் ஒரு எஃகு இரும்புத் துண்டைப் போல் கனத்தது. கூரையைப் பிய்த்துக் கொண்டு விழுந்த கல் தரையில் கொஞ்சம் சேதத்தை ஏற்படுத்தி உள்ளது. பின்னர் அந்தக் கல் எகிறி குளியல் அறையின் சுவரையும் லேசாய் பதம் பார்த்துள்ளது. கோல்ஃப் பந்து அளவுள்ள அந்தக் கல்லை அவர் எடுத்துக் கொண்டு கணவரிடம்



வந்தார். இருவரும் சேர்ந்து அதை ஆராய்ந்த போது அது ஒரு விண்கல் என்பதை அறிந்தனர். பின்னர் இது குறித்து அவர்கள் உள்ளூர் போலீசுக்கு தகவல் கொடுத்தனர். போலீசார் உடனே இதுபற்றி அருகில் உள்ள ருட்கார்ஸ் பல்கலைக்கழகத்தின் புவிஇயல் பிரிவு ஆராய்ச்சியாளர்களுக்குத் தகவல் கொடுத்தனர். அவர்கள் அந்தக் கல்லை தங்களுடைய ஆராய்ச்சி கூடத்துக்கு கொண்டு சென்று ஆய்வு செய்து அந்தக் கல் விண்வெளியில் இருந்து விழுந்த கல்தான் என்பதை உறுதி செய்தனர்."

''அவங்க சொன்னா அது சரியாகத்தான் இருக்கும். ம்... அப்புறம்... படி...!''

ரூபலா படிக்க ஆரம்பித்தாள். ''பொதுவாக விண்வெளி கற்களுக்கு அதிக மவுசு உண்டு. இந்த கற்களை சிலர் அதிகமான விலைக்கு விற்பதும் உண்டு. சீனிவாசன் வீட்டில் விழுந்த கல் ஆயிரக்கணக்கான டாலர்கள் விலைக்கு விற்பனையாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இந்த விண்வெளிக் கல்லை விற்கப் போவது இல்லை என்று சீனிவாசன் கூறியுள்ளார். அந்த கல்லுக்கு 'ஃபிரிஹோல்ட் டவுன்ஷிப்' என்று பெயரிட்டு அழைத்து வருகிறார். தற்போது இந்தக் கல்லை உள்ளூர் வங்கி லாக்கரில் பத்திரமாக வைத்து பாதுகாத்து வருகிறார். உறவினர்களும் நண்பர்களும் இந்தக் கல்லை நல்ல விலைக்கு விற்கும்படி ஆலோசனை கூறினாலும் அதை ஏற்க சீனிவாசன் குடும்பத்தினர் மறுத்து விட்டனர். மாணவர்களுக்கும், விண்வெளி ஆய்வுக்கும் பயன்படும் வகையில் அந்தக் கல்லை சம்பந்தப்பட்ட துறையினிடம் ஒப்படைக்க முடிவு செய்துள்ளனர்.

''நல்ல முடிவுதான்...!''

''என்னால இதை நம்ப முடியலைங்க...''

''எதை...?''

''விண்வெளியிலிருந்து எப்படி கல் வரும்? அது ஒரு வெற்று வெளிதானே?''

''ரூபி...! உனக்கு ஒரு உண்மை புரியலை. விண்வெளியில் சூரியன் உட்பட பல்வேறு கோள்கள் மற்றும் நட்சத்திரங்கள் இருக்கிறது உனக்குத் தெரியும். இதே மாதிரி - கோள்கள் மாதிரி இல்லாமல் சிறியது முதல் பெரியது வரை பல பாறைகள், கற்கள், விண்வெளியில் சுற்றி வந்துகிட்டு இருக்கு. அப்படி சுற்றி வரும் போது ஈர்ப்பு விசை காரணமாய் ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்வதும் உண்டு. அப்படி மோதும் போது அவை உடைந்து சிதறி தங்களோட சுற்றுப் பாதையைவிட்டு விலகி பூமியை நோக்கி வர்றதும் உண்டு. ஒரு நாளைக்கு சராசரியாய் 50க்கும் மேற்பட்ட விண்கற்கள் பூமியின் ஈர்ப்பு விசைக்கு உட்பட்டு கீழே வரும். அவற்றில் பெரும்பாலான விண்கற்கள் பூமியை நெருங்கும் போதே காற்று மண்டலத்தின் உராய்வு காரணமாக வெப்பமடைந்து தீப்பிடித்து எரிந்து சாம்பலாக மாறி உதிர்ந்து விடுவது உண்டு. சில பெரிய பாறைகள் மட்டும் காற்று மண்டலத்தின் உராய்வையும் மீறி பயணம் செய்து பூமியை நெருங்கும் போது சிறிய கற்களாக மாறி கீழே விழுவது உண்டு. நமது பூமியில் நான்கில் மூன்று பங்கு கடலாய் இருப்பதால் பெரும்பாலான கற்கள் கடலிலேயே விழுந்து விடும். எப்போதாவது ஒரு தடவை நிலப்பகுதியிலும் விழுவது உண்டு. அது போன்ற ஒரு கல்தான் அமெரிக்காவில் வசிக்கும் சீனிவாசன் வீட்டுக் கூரையைப் பிய்த்துக்கொண்டு



விழுந்துள்ளது.

''அந்தக் கல் மனிதனோட தலைமேல விழுந்தால் என்னாகும்...?''

''கபால மோட்சம்தான்...! ஆனால் பெரும்பாலான விண்கற்கள் ஆட்கள் இல்லாத பகுதியில்தான் விழுகின்றன. லட்சத்தில் ஒரு கல்தான் இப்படி வீட்டில் விழும்.''

''இந்தியாவில் எப்போதாவது இது மாதிரியான விண்கல் விழுந்துள்ளதா...?''

''வீட்டின் மேல் விழுந்தது இல்லை. கண்டிப்பாய் நிலப் பகுதியில் எங்கேயாவது விழுந்து இருக்கும்.!''

''அங்கிள்!''

குரல் கேட்டு வாசல் பக்கம் திரும்பிப் பார்த்தார்கள் விவேக்கும் - ரூபலாவும்.

சந்தேகக்கடல் சங்கீதா நின்றிருந்தாள்.

''வா... சங்கீதா...!''

''அங்கிள்...! இன்னிக்கு எனக்கு பர்த்டே. உங்களுக்கும் ஆன்டிக்கும் சாக்லேட் குடுத்துட்டுப் போலாம்ன்னு வந்தேன்.! வந்ததுக்கு ஒரு நல்ல மெசேஜ் கிடைச்சது. விண்கல்ன்னா என்னாங்கிறதை தெரிஞ்சுகிட்டேன். இருந்தாலும் ஒரு சந்தேகம்...!''

ரூபலா சிரித்தாள்.

''உனக்கு சந்தேகம் வராமல் இருக்காதே...! கேளு...! கேளு...!''

சங்கீதா கேட்டாள்.

''அங்கிள்! **விண்கற்களுக்கு ஆங்கிலத்தில் என்ன பெயர்...?''**

''ரூபலா! உனக்குத் தெரியுமா...?''

''தெரியுமே...! இது ஒரு LKG கேள்வி. இதுக்கு எனக்கு பதில் தெரியாதா என்ன?''

''சொல்லு பார்க்கலாம்!''

ரூபலா பதில் சொல்வதற்குள்-

**வா**சகர்களே!

உங்களுக்கு பதில் தெரியுமா? தெரிந்தால் ஒரு போஸ்ட் கார்டை எடுங்கள். பதில் எழுதி 25-2-2007 தேதிக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள். பரிசு வழக்கம் போல்.

முகவரி:

**அர்த்தமுள்ள அரட்டை**

**க்ரைம் நாவல்,**

**ஜீயே பப்ளிகேஷன்ஸ்,**

352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,

சென்னை - 600 005.

இனி சென்ற மாதம் அர்த்தமுள்ள அரட்டையில் கேட்டிருந்த கேள்வியும் அதற்கான பதிலும்:

கேள்வி: ஹூண்டாய், சாண்ட்ரோ, மாருதி போன்ற கார்களில் பொருத்தப்படும் A.C. எவ்வளவு திறன் கொண்டது?

*பதில்: 1/2 டன். (அரை டன்) திறன் கொண்டவை.*

சரியான பதில் எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்து எடுக்கப்பட்ட 5 பேர்.

**1. ஏ.கலாதரன் - திருச்சூர்-1.**
**2. மா.சுப்ரமணியன் - நாங்குனேரி.**
**3. சபரி.கண்ணன் - சென்னை - 33.**
**4. ஈ.முஸ்தபா - கோவை -2.**
**5. எஸ்.பாபுராம் - சிம்மக்கல். (மதுரை).**

# வாசகர் கடிதம்




**நா**ன் நளினா நள்ளிரவு' நாவலில் வருவது போல் நடவடிக்கை எடுத்தால் நாடு உருப்படும். அர்த்தமுள்ள அரட்டைப் பகுதி பயன் உள்ளதாகவும் அனைவருக்கும் அவசியமானதாகவும் அமைகிறது. நன்றி ஆர்.கே., - ஜீ.யே.வுக்கு.

**- சாது ரவி, ஆரணி.**

'நான் நளினா நள்ளிரவு' நாவலைப் படித்து மகிழ்ந்தேன். சிறப்பாக இருந்தது. அட்டையில் மண்டையோட்டை வெளியிட்ட ஜீயே அவர்களுக்கும், கதையை எழுதிய ஆர்.கே.அவர்களுக்கும் நன்றி கலந்த பாராட்டுக்கள்.

**- மா.மோகனராசன், காமநாயக்கன்பாளையம்.**

திரு.ராஜேஷ்குமார் அவர்களைக் கவர்ந்த 'ஒரு மனிதனின் பிறப்பு சம்பவமாக இருக்கலாம். ஆனால் அவனுடைய இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்' என்ற வாசகம் என் மனதில் ஃபெவிக்கால் போல ஒட்டிக் கொண்டது. சமுதாயச் சீர்திருத்தக் கேடுகளை யாருக்கும் அஞ்சாமல் வெளியிட்டு வாசகர்களைத் தெளிந்த சிந்தனையாளனாகவும், சீர்திருத்தவாதியாகவும் மாற்றும் க்ரைம் குழுவின் சேவைக்கு மனம் நெகிழும் நன்றிகள்.

**- வி.பெரியசாமி, அரியலூர்.**

கேள்வி - பதில் பகுதியில், 'எங்கள் ஊரான தூத்துக்குடியில் முத்துக் குளிப்பதைப் பார்த்து இருக்கிறீர்களா?' என்ற கேள்விக்கு நையாண்டி, நக்கல் பதிலைத் தந்தது எங்களையெல்லாம் 'குபீர்' சிரிப்பு சிரிக்க வைத்தது.

**- ஜெ.குமார், குமணன்சாவடி.**

2007-ம் ஆண்டின் முதல் நாவலான 'நான் நளினா நள்ளிரவு' மிக அருமை. என்னதான் பெண்கள் அனைத்துத் துறைகளிலும் முன்னேறி இருந்தாலும், காதல் என்று வரும் போது அபிஷேக் போன்றவர்களிடம் ஏமாந்து விடுகிறார்கள் என்பதை சுட்டிக் காட்டிய ஆர்.கே.வுக்கு பாராட்டுகள்.

**- மு.பரத்வாஜ், திருச்சி.**

பெற்றோர்களை ஏமாற்றி விட்டுக் காதலனை சந்திக்கச் செல்லும் பெண்களுக்கு எப்படியெல்லாம் ஆபத்து நிகழ்கின்றது என்பதை எத்தனை கதைகளில் படித்தாலும் திருந்தாத ஜென்மங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனாலும் தவறினை உணர்ந்து திருந்திய நளினாவின் மரணம் மறக்க முடியாதது.

**- பா.ஆறுமுகம், தஞ்சாவூர்.**

# ராஜேஷ்குமாரிடம் கேளுங்கள்

★ பிரச்னைகளை யாரிடம் சொன்னால் தேவலை - மனைவியிடமா... நண்பனிடமா?

(கே.விஸ்வநாத், பெங்களூர்-38.)

★★ ஒரு பிரச்னையைப் புரிந்து கொள்வதற்கும் அறிந்து கொள்வதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. நம்முடைய பிரச்னைகளை நம்மைப் பிடிக்காதவர்களிடம்தான் சொல்ல வேண்டும். அவர்கள்தான் நம்முடைய பிரச்னைகளைக் கேட்க விரும்புவார்கள். நம் அப்துல்கலாம் என்ன சொல்லியிருக்கார் தெரியுமோ? 'ஒவ்வொரு மனிதனுக்கும் ஏதாவது பிரச்னைகள் இருக்க வேண்டும். பிரச்னைகளை எதிர்கொள்ளும் பக்குவம் வந்து விட்டால் அதை யாரிடமும் சொல்லாமலேயே தீர்த்துக் கொள்ளும் திறமை நமக்கு வந்து விடும். வியர்வைத் துளிகள் உப்பாக இருக்கலாம். ஆனால் அவைதான் வாழ்க்கையை இனிப்பாக மாற்றும். உழைப்பதற்கு கற்றுக் கொள்ளுங்கள். பிரச்னைகள் உங்களிடம் இருந்து விலகி தொலைவில் கைகட்டி நிற்கும்.'

★ எழுத்தாளர்; டாக்டர் - இருவர்க்கும் என்ன வித்தியாசம்?

(மா.மோகனராசன், காமநாயக்கன்பாளையம்.)

★★ எழுத்தாளர் கதை எழுதுவார். டாக்டரோ கதையை முடிப்பார்.

★ காந்தி மீண்டும் பிறந்து வந்தால்...?

(வீ.பெரியசாமி, அரியலூர்.)



★★ அக்டோபர் 2-ம் தேதி லீவு இருக்காது.

★ உங்களை ஒரே ஒருநாள் ஜனாதிபதி ஆக்கினால்...?

(அஸீமா அக்பர், மார்த்தாண்டம்.)

★★ நீங்கள்தான் துணை ஜனாதிபதி.

## பரிசுக்குரிய கேள்வி

★ என்னுடைய நண்பன் தற்கொலை செய்ய முயன்று பிழைத்துக் கொண்டவன். அவனுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்...?

(வெ.கபிலன், பள்ளிப்பட்டு.)

★★ மக்களில் 90 சதவீதம் பேர் ஏதாவது ஒரு மனக் கஷ்டத்துடன்தான் வாழ்ந்து வருகிறார்கள். அது வீட்டுப் பிரச்னையாக இருக்கலாம். அலுவலகப் பிரச்னையாக இருக்கலாம். ஏதாவது நோய் இருக்கலாம். எத்தனை கஷ்டம் வந்தாலும் அத்தனையையும் சமாளிக்கிறோம். கஷ்டங்களிலிருந்து தப்பித்துக் கொள்ள ஒரே வழி, நமக்கு எதுமாதிரியான கஷ்டம் வந்தாலும் சரி அதை இறைவனிடம் ஒப்படைத்துவிட்டு வாழ்க்கையை நடத்த வேண்டும். ஊருக்கு செல்வதற்காக ஒருவன் ரயிலில் ஏறிப் பயணம் செய்தான். வீட்டுக்கு விரைவாக செல்ல வேண்டும் என்ற ஆசையில் பெட்டிக்குள் வேகவேகமாய் அங்கும் இங்கும் நடந்தான். அப்படி அவன் நடந்தால் வீட்டை அடைய முடியுமா...? அந்த ரயில் எப்போது போய்ச் சேர்கிறதோ அப்போதுதான் அவன் வீட்டுக்குப் போய்ச் சேர முடியும். இதுதான் நியதி. அதுபோல்தான் நாம் எல்லாவற்றுக்கும் அவசரப்படுகிறோம். ஆசைப்படுகிறோம். பாம்புப் புற்றின் அருகில் படுத்து தூங்கினால்

நமக்குத் தூக்கம் வருமா...? பாம்பு தூங்கிவிடும். ஆனால் நாம் தூங்க மாட்டோம். எதிர்காலத்தைப் பற்றி கனவு காணாமல் நிகழ்காலத்தை மனதில் கொண்டு நமக்கு கிடைக்கும் நேரத்தை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு முன்னேற வேண்டும். அதுதான் வாழ்க்கை. அடுத்த நிமிடம் நாம் மூச்சு விடுகிறோமா என்று நமக்குத் தெரியாது. அது இறைவனின் செயல். இறைவனின் விருப்பப்படிதான் எதுவும் நடக்கும். எந்தக் காரியத்திலும் இறைவனின் கருணை வேண்டும். (உங்கள் நண்பரிடம் இதைப் படித்துக் காட்டுங்கள். அவர் மனதில் உட்கார்ந்து இருக்கும் தற்கொலை எண்ணம் காணாமல் போய் இருக்கும்.)

---

**★ 'சினிமாவில் நடிக்க வராமல் இருந்தால் டாக்டராகி இருப்பேன்' என்று சில நடிகைகள் பேட்டி கொடுப்பது பற்றி?**

**(எம்.பார்த்திபன், தென்காசி.)**

★★ யார் செய்த புண்ணியமோ அவர்கள் டாக்டர் ஆகாமல் நடிகைகள் ஆனார்கள். மக்கள் தப்பித்தார்கள்.

**★ பேனா முனை; வாள் முனை - இவைகளில் வலிமை வாய்ந்தது எது?**

**(பா.காசிராஜன், சிவந்திபூர்.)**

★★ மனிதனின் நாக்கை போட்டியில் சேர்த்துக் கொள்ள மாட்டீர்களா? (ஒரு மனிதனின் கௌரவம் எங்கே இருக்கிறது தெரியுமா? அவனுடைய நுனி நாக்கில்.)

**★ நொய்டா...?**

**(து.சத்தியநாராயணன், அயன்புரம்.)**



★★ இன்னொரு சுனாமி.

**★ மாதா, பிதா, குரு, தெய்வம் - இந்த வரிசையில் தெய்வத்துக்கு ஏன் கடைசி இடம்...?**

**(ரா.வசந்தி, பெருந்துறை.)**

★★ மாதா, பிதா, குரு - இந்த மூன்று பேரையும் மனிதன் பார்க்கலாம். அவர்களோடு வாழலாம். ஆனால் தெய்வத்தைப் பார்க்க முடியாது. உணர மட்டுமே முடியும் என்பதால் கடைசி இடம். அந்த கடைசி இடத்தையும் இறைவனே விரும்பி ஏற்றுக் கொண்டதுதான்!

**★ சாய்பாபா - கலைஞர் சந்திப்பு...?**

**(து.ஜெயகாந்தன், புளியம்பட்டி)**

★★ எட்டாவது அதிசயம்! ஆந்திராவைத் தாயகமாகக் கொண்ட சாய்பாபா தமிழ்நாட்டின் தண்ணீர் தேவைக்காக 200 கோடி ரூபாயை அள்ளிக் கொடுத்த பெருந்தன்மை ஒரு ஒன்பதாவது அதிசயம். (அந்த பெருந்தன்மையைக் கர்நாடகா கற்றுக் கொள்ள வேண்டும்.) நாத்திகவாதிகளையும் 'வாழ்க!' கோஷம் போட வைத்து இருக்கிறார் சத்ய சாய்பாபா. ஆத்திகவாதிகளையும் புன்னகை பூக்க வைத்து இருக்கிறார் கலைஞர். தொடரட்டும் இந்த கூட்டணி.

**★ கடிதம் எழுத நேரமேயில்லை என்று சொல்பவர்களைப் பற்றி...?**

**(பி.எஸ்.தேவராஜ், கோவை.)**

★★ ராஜாஜி அவர்கள் இளைஞர் ஒருவரிடம் பொறுப்பான வேலையொன்றைக் கொடுத்து மும்பைக்கு அனுப்பி வைத்தார். மும்பை போய்ச் சேர்ந்ததும் கடிதம் எழுதும்படி சொன்னார். அந்த இளைஞர் மும்பை போய்ச் சேர்ந்து ஒரு வாரமாகியும் கடிதம் எழுதவில்லை. ஒரு வாரம்

கழித்து அந்த இளைஞர் மும்பையிலிருந்து திரும்பி வந்தார். ராஜாஜி கேட்டார்.

''மும்பை போய்ச் சேர்ந்ததும் எனக்கு கடிதம் எழுதச் சொன்னேனே... ஏன் எழுதவில்லை.''

அந்த இளைஞன் சொன்னான். ''ஒரு நிமிடம்கூட ஓய்வு கிடைக்கவில்லை.''

''ராத்திரி எத்தனை மணிக்கு படுக்க போனீர்கள்?''

''பதினோரு மணிக்கு.''

''ஒரு கார்டு எழுத மூன்று நிமிடம் போதுமே! அதை எழுதிவிட்டு பதினொன்று மூன்றுக்கு படுத்து இருக்கலாமே?''

**★ மகாத்மா காந்தியை இன்னமும் சிலர் திட்டிக் கொண்டு இருக்கிறார்களே... அதைப்பற்றி உங்கள் கருத்து என்ன...?**

**(வி.புகழேந்தி, பொன்னகரம்.)**

★★ ஷேக்ஸ்பியர் என்ன சொல்லியிருக்கிறார் என்று பார்க்கலாமா...? ROSE BY ANY NAME WILL SMELL SWEET. இதன் தமிழாக்கம்: **ரோஜா மலரை எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் அது மணக்கும்.** (யார் போற்றினாலும் சரி; தூற்றினாலும் சரி... அவர் மகாத்மாதான்.)

**★ ஒரு குடும்பம் எப்போது கோவிலாகிறது...?**

**(டி.மனோபாரதி, சென்னை - 20.)**

★★ அந்தக் குடும்பத்தில் உள்ள அம்மாவையும் அப்பாவையும் வணங்கும் போது.

**★ திரிஷா, அசின், பூஜா, சிநேகா, ஸ்ரேயா - இவர்களில் யார் அழகு...?**

**(எம்.ஜானகிராமன், கோவை-2.)**

★★ ஜானகிராமன் என்று பெயர் வைத்துக் கொண்டு இப்படியொரு கேள்வியைக் கேட்பது



உங்களுக்கு எந்தவிதத்தில் அழகு...?

**★ ஒரு சீரியஸ் கவிதை - ஒரு குறும்புக் கவிதை ப்ளீஸ்!**

**(டி.எல்.நாகராஜன், ஊட்டி.)**

★★ முதலில் சீரியஸ் கவிதை.

**உயிர் கொடுக்க**
**உயிர் விட்டது**
**தீக்குச்சி!**
**அதை நினைத்து**
**உருகி,**
**கண்ணீர் விட்டது**
**மெழுகுவர்த்தி!**

அடுத்தது குறும்புக்கவிதை:

**அது இன்பமோ துன்பமோ**
**எதுவாக இருந்தாலும் சரி!**
**நீ எப்போதும்**
**சிரித்துக் கொண்டே**
**இருக்க வேண்டும்.**
**அப்போதுதான்**
**உன்னை**
**லூசு என்று எல்லோரும்**
**நம்புவார்கள்.**

---

**கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

**ராஜேஷ்குமாரிடம் கேளுங்கள்**

**க்ரைம் நாவல், ஜீயே பப்ளிகேஷன்ஸ்,**
**352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை - 5.**




# 1

**உ**லகின் பலம் வாய்ந்த நாடுகளில் நம் இந்தியாவும் ஒன்று. ஆனால் வளர்ந்து வரும் நம் நாட்டுக்கு பெரிய பிரச்னையாக உள்ள ஒரு விஷயம் எரிசக்தி. பிரதான எரிபொருளான பெட்ரோலியப் பொருட்களுக்கு வளைகுடா நாடுகளையே நாம் பெரிதும் நம்பி இருக்கிறோம். இதற்காக கோடிக்கணக்கான ரூபாய்களை வாரி இறைத்து அந்த எரிசக்தியைப் பெறுகிறோம். நம் நாட்டின் நீர், நிலக்கரி வளங்களும் நாளுக்கு நாள் தேய்கிறது. 2050-வது ஆண்டில் ஒரு துளி பெட்ரோல் கூட கிடைக்காமல் போகக் கூடிய ஒரு அபாயம் உருவாகி வருவதாக விஞ்ஞானிகள் சொல்லியுள்ளனர். இந்த அபாயத்திலிருந்து தப்பிக்க ஒரே வழிதான் உள்ளது. அது என்ன வழி? இரண்டாவது அத்தியாயத்தில் பார்ப்போம்.

**க**ர்நாடக மாநிலம். ஹுப்ளி. காலை ஏழு மணி.

இன்ஸ்பெக்டர் மல்லய்யா ராத்திரி ட்யூட்டி பார்த்து விட்டு இனி வீட்டுக்கு கிளம்பிப் போய் ஒரு தூக்கம் போடலாம் என்று நினைத்த வேளையில் அழுக்கான மேஜையின் மேல் இருந்த டெலிபோன் மணியடித்து கூப்பிட்டது.

மல்லய்யா இரண்டு கைகளையும் உயர்த்தி சோம்பல் முறித்துக் கொண்டே போய் ரிசீவரை எடுத்தார்.

''எஸ்...''

மறுமுனையில் கமிஷனர் ஆபீஸிலிருந்து அஸிஸ்டண்ட் கமிஷனர் கங்கோத்ரி பேசினார். கரகரப்பான கன்னடக் குரல்.

''மிஸ்டர் மல்லய்யா...?''

''குட்மார்னிங்... சார்...!''

''நீங்கள் இப்போது ஃப்ரீயா?''

''நேற்று இரவு எனக்கு ட்யூட்டி ஸார்... 'தாவண்கரே' ஹைவேஸ் ரோட்டில் விடிய விடிய வாகன சோதனைகளை மேற்கொண்டிருந்துவிட்டு இப்போதுதான் ஸ்டேஷனுக்குத் திரும்பினேன்...!''

''அப்படியென்றால் இப்போது களைப்பாய் இருப்பீர்கள். ஓ.கே... மிஸ்டர் மல்லய்யா. நீங்கள் வீட்டுக்குப் போய் ஓய்வு எடுத்துக் கொண்டு காலை பத்து மணி சுமார்க்கு கமிஷனர் ஆபீஸ் வர முடியுமா?''

''எனக்கொன்றும் களைப்பில்லை சார்...! இப்போதே நான் வரத்தயார்.''

''உங்களுக்கு உடல் உபாதையும் சிரமமும் இல்லையென்றால் வாருங்கள்...!''

''இதோ... புறப்பட்டேன் ஸார்.''

''தேங்க்யூ... ஃபார் யுவர் ரெஸ்பான்ஸ்.'' அஸிஸ்டெண்ட் கமிஷனர் கங்கோத்ரி மறுமுனையில் இணைப்பைத் துண்டித்துவிட, மல்லய்யா ரிஸீவரை வைத்துவிட்டு பக்கத்தில் நின்றிருந்த சப்-இன்ஸ்பெக்டர் கௌடாவை ஏறிட்டார்.

''ஏ.சி. கூப்பிடறார்... போயிட்டு வந்துடறேன்.''

''சார்...! டீ!''

''வேண்டாம்...''

''ரொம்பவும் டயர்டா இருக்கீங்க ஸார்... வீட்டுக்குப் போய் குளிச்சு ரெஸ்ட் எடுத்துட்டு போலாம் ஸார்.''

''ஏ.சி. கங்கோத்ரி காரணம் இல்லாமல் இவ்வளவு காலையில் என்னைக் கூப்பிட மாட்டார். வர்றேன்.! லாக்கப்ல எத்தனை பேர் இருக்காங்க...?''

''ஏழு பேர் ஸார்...!''

''ஏழு பேரையும் விசாரிச்சு வையுங்க போதும். அவசரப்பட்டு எஃப்.ஐ.ஆர். போட்டுட வேண்டாம்.''

சப்-இன்ஸ்பெக்டர் கௌடா தலையாட்டிக் கொண்டு இருக்கும் போதே மல்லய்யா தன்



தலையில் இருந்த தொப்பியை சரியாய் பொருத்திக் கொண்டு ஸ்டேஷன் வாசலில் நின்றிருந்த ஜீப்பை நோக்கிப் போனார்.

ஜீப்பில் பதினைந்து நிமிஷப் பயணம். ஹுப்ளி நகரின் குளிரான அந்தக் காலை வேளையில் போக்குவரத்தற்ற சாலைகளில் பயணம் செய்து பிராட்வே ரோட்டில் இருந்த கமிஷனர் அலுவலகத்தை தொட்டார். வயர்லஸ் அறைக்கு முன்பாக ஏ.சி. கங்கோத்ரி சற்று பதட்டத்தோடு நின்றிருக்க, மல்லய்யா அவர்க்கு முன்பாய்ப் போய் நின்று சல்யூட் வைத்து தளர்ந்தார். சல்யூட்டை தலையசைப்பால் ஏற்றுக் கொண்ட கங்கோத்ரி புன்னகைத்தார்.

''விஷயம் மிக மிக முக்கியமான ஒன்றாக இருந்த காரணத்தால்தான் உங்களைக் கூப்பிட வேண்டியதாயிற்று...''

''வெல்கம் ஸார்.''

''வாருங்கள்... என்னுடைய அறைக்குப் போவோம்.''

போனார்கள்.

செவ்வக கண்ணாடி ஜன்னல் வழியாக காலை நேர வெளிச்சம் பளிச்சென்று பாய்ந்திருக்க நாற்காலிகளில் எதிர் எதிரே உட்கார்ந்தார்கள். கங்கோத்ரி சில விநாடிகள் மௌனமாய் இருந்து விட்டு மெல்ல பேச்சை ஆரம்பித்தார்.

''நீங்கள் ஐந்து வருடங்களுக்கு முன்னால் மாரன்னஹள்ளி ஏரியா போலீஸ் ஸ்டேஷனில் சப்-இன்ஸ்பெக்டராய் இருந்த போது ஒரு புகார் வந்தது. அந்தப் புகாரை தமிழ்நாடு சென்னையைச் சேர்ந்த சௌந்தரா என்கிற பெண் ஒருத்தி கொடுத்து இருந்தாள். அந்தப் புகாரில் தன்னுடைய கணவரான துரைபாண்டியன் டயோட்டா காரில் பெங்களூரிலிருந்து புறப்பட்டு ஹுப்ளி வந்ததாகவும், ஹுப்ளி வந்த பிறகு அவரிடமிருந்து எந்த தகவலும் இல்லையென்றும், அவர் காரோடு காணாமல் போய் விட்டதாகவும், அவரைக் கண்டுபிடித்து தரும்படியும் சொல்லியிருந்தாள்.

அந்த கேஸை நீங்கள்தான் கையாண்டீர்கள். ஞாபகம் இருக்கிறதா?''

''நன்றாகவே ஞாபகம் இருக்கிறது சார்... சென்னையைச் சேர்ந்த பெரிய தொழிலதிபர் துரைபாண்டியன். ஐந்து வருடங்களுக்கு முன்பு ஒரு பிசினஸ் விஷயமாய் தன்னுடைய டயோட்டா காரில் ஹாப்ளி வந்தார். காரை அவருடைய டிரைவர் ஓட்டி வந்தார். ஒரு ஹோட்டலில் அறை எடுத்து தங்கியிருந்த துரைபாண்டியன் பெல்காமில் உள்ள ஒரு நண்பரைப் பார்க்க காரில் போனார். போனவர் போனவர்தான். திரும்பவேயில்லை. ஹாப்ளி, பெல்காம் இந்த இரண்டு நகரங்களையும் சல்லடை போட்டு தேடிப் பார்த்தும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஐந்து வருஷ காலமும் ஓடிவிட்டது.''

ஏ.சி. கங்கோத்ரி புன்னகைத்தார். ''இப்போது அந்தப் பிரச்னைக்கு தீர்வு கிடைத்து இருக்கிறது.''

மல்லய்யா நிமிர்ந்தார்.

''சார்...! அந்த துரைபாண்டியன் கிடைத்து விட்டாரா...? அவர் எந்த ஊரில் இருந்தார்...?''

''இந்த போட்டோக்களைப் பாருங்கள். அவர் எங்கே இருந்தார் என்று தெரியும்...'' சொன்ன ஏ.சி. தன் மேஜையின் இழுப்பறையைத் திறந்து நான்கைந்து போட்டோக்களை எடுத்து மல்லய்யாவிடம் நீட்டினார். அவர் வாங்கிப் பார்த்தார்.

முதல் போட்டோ அடர்த்தியான ஒரு காட்டுப்பகுதியில் எடுக்கப்பட்டு இருந்தது. சேறும் சகதியுமாய் இருந்த ஒரு குளத்திலிருந்து கிரேனின் உதவியால் கார் ஒன்று தூக்கப்பட்ட நிலையில் போலீஸ், ஃபாரஸ்ட் அதிகாரிகள் தெரிந்தார்கள்.

இரண்டாவது போட்டோ சேறும் சகதியுமாய் இருந்த காரை க்ளோசப்பில் காட்டியது. காரின் பின்சீட்டில் ஒரு எலும்புக்கூடும், முன்சீட்டில் ஒரு எலும்புக்கூடும் கன்னங்கரேலென்று சேறு அப்பி தெரிந்தது.

மூன்றாவது போட்டோவில் அந்த



எலும்புக்கூடுகள் காரினின்றும் இறக்கி கீழே வைக்கப்பட்டிருக்க, வெள்ளை கோட் அணிந்த டாக்டர்கள் இருவர் அதை ஸ்பாட் போஸ்மார்ட்டம் செய்து கொண்டு இருந்தார்கள்.

நான்காவது போட்டோவும், ஐந்தாவது போட்டோவும் அந்த எலும்புக் கூட்டின் வெவ்வேறு தோற்றங்களைக் காட்டின.

மல்லய்யா திகைப்போடு ஏ.சி.யை ஏறிட்டார்.

''சார்... இது...?''

''துரைபாண்டியனின் டயோட்டா கார் கட்டபிரபா காட்டுப் பகுதியில் இருந்த ஒரு ஆழமான குளத்துக்குள் விழுந்துள்ளது. இந்த எலும்புக் கூடுகளில் ஒன்று துரைபாண்டியன். இன்னொன்று டிரைவர் காளியப்பன். டயோட்டா காரின் ஆர்.சி.புத்தகம் ஒரு பிளாஸ்டிக் பைக்குள் இருந்ததால் அது அழியாமல் பாதுகாப்பாய் கிடைத்துள்ளது.

''சார்...! கட்டபிரபா ஃபாரஸ்ட் ஒரு அடர்த்தியான காட்டுப்பகுதி. அந்தக் காட்டுப் பகுதியில் இருந்த குளத்துக்குள் இந்த கார் விழுந்து இருப்பதை யார் கண்டுபிடித்தார்கள்?''

''ஃபாரஸ்ட் ரேஞ்சர்ஸ். காட்டிலுள்ள இந்த குளத்தின் பெயர் **யானை விழுங்கி குளம்**. இது எப்பவும் சேறும் சகதியுமாய் இருப்பதால் காட்டு மிருகங்கள் இந்த குளத்துக்கு வருவது இல்லை. சமீபத்தில் ஒரு யானை குளத்துக்குப் பக்கமாய் வந்த போது தவறிப் போய் அதில் விழுந்து இருக்கிறது. அதனுடைய பிளிறல் சத்தம் கேட்டு ஃபாரஸ்ட் அதிகாரிகள் போய்ப் பார்த்து இருக்கிறார்கள். கயிறுகளைக் கட்டி அதை வெளியே எடுக்க முயற்சி செய்த போதுதான் குளத்துக்குள் வேறு எதுவோ விழுந்து இருப்பது தெரிந்தது. உடனே ஒரு நீளமான இரும்புக் கம்பியை உள்ளே விட்டு குத்திப் பார்த்து இருக்கிறார்கள். ஏதோ ஒரு உலோகத்தோடு மோதுவது போல் சத்தம் கேட்கவே கிரேனை வரவழைத்து கொக்கியை மாட்டி தூக்கிப் பார்த்து

இருக்கிறார்கள். அது ஒரு கார் என்று தெரிந்ததும் போலீசுக்கு தகவல் கொடுத்து விட்டார்கள். காரை வெளியே எடுத்து பார்த்த போதுதான் அது டயோட்டா கார் என்பதும், ஆர்.சி.புக்கை வைத்து அது துரைபாண்டியனின் கார் என்பதையும் கண்டுபிடித்தோம். துரைபாண்டியன் இறந்ததுகூட வெளியே தெரியக் கூடாது என்பதற்காக கொலையாளிகள் திட்டம் போட்டு இப்படியொரு படுபாதகத்தைச் செய்து இருக்கிறார்கள். அந்தக் கொலையாளிகள் யார் என்பதை நாம் கண்டுபிடிக்க வேண்டும். இது நம் ஊட்டி போலீசுக்கு விடப்பட்ட சவால்...! உங்களால் இந்த கேஸை இன்வெஸ்டிகேட் செய்ய முடியுமா மிஸ்டர் மல்லய்யா...!''

''எஸ்... ஸார்... ஐ... கேன்...!''

''இதோ பாருங்கள் மிஸ்டர் மல்லய்யா...! நான் ஏதோ கேட்டு விட்டேனே என்பதற்காக நீங்கள் 'எஸ்' என்று சொல்லி தலையாட்டக் கூடாது. இதில் நிறைய நெகட்டீவ் பாயிண்ட்கள் உள்ளன. முதல் பாயிண்ட்: சம்பவம் நடந்து ஐந்து வருடங்கள் ஓடிவிட்டன. இரண்டாவது பாயிண்ட்: கொலை செய்யப்பட்ட நபர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். மூன்றாவது பாயிண்ட்: காருக்குள் இரண்டு எலும்புக் கூடுகள் கிடைத்துள்ளன. இதில் ஒன்று துரைபாண்டியனுடையது, இன்னொன்று டிரைவர் காளியப்பனுடையது என்று நினைக்கிறோம். இந்த நினைப்பு சரிதானா என்று தெரியாது. இந்த நினைப்பு ஒருவேளை உண்மையாகவும் இருக்கலாம்... அல்லது பொய்யாகக் கூட இருக்கலாம். நான்காவது பாயிண்ட்...''

ஏ.சி. கங்கோத்ரி சொல்லிக் கொண்டிருக்கும் போதே அறை வாசலில் நிழலாடியது. நிமிர்ந்தார்.

செண்ட்ரி ஒருவர் நின்றிருந்தார்.

''எஸ்...''

''ஃபாரஸ்ட் ரேஞ்சர் மிஸ்டர் மொய்லி உங்களைப் பார்ப்பதற்காக வந்து இருக்கிறார். அனுப்பலாமா ஸார்...?''



''அனுப்பு...''

செண்ட்ரி தலை மறைந்த அடுத்த நிமிஷம் ஃபாரஸ்ட் ரேஞ்சர் மொய்லி அறைக் கதவைத் தட்டி விட்டு உள்ளே வந்தார். கையில் ஒரு தோல் பை. மொய்லி மெல்ல பக்கத்தில் வந்தார்.

''குட்மார்னிங் சார்...! ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்''

''நோ பிராப்ளம் மிஸ்டர் மொய்லி... ப்ளீஸ் கம். நானே உங்களுக்கு போன் செய்து பேசலாம் என்று இருந்தேன். பீ... ஸீட்டட் ப்ளீஸ்...'' கை காட்டினார்.

மொய்லி மல்லய்யாவுக்குப் பக்கத்தில் காலியாய் இருந்த நாற்காலியில் உட்கார, ஏ.சி. கங்கோத்ரி அவரை அறிமுகப்படுத்தினார்.

''இவர் மிஸ்டர் மல்லய்யா...! இன்ஸ்பெக்டர் ஆஃப் போலீஸ். அந்த எலும்புக்கூடுகள் கேஸை இவர்தான் டீல் பண்ணப் போகிறார். இவர் சிறந்த போலீஸ் அதிகாரியாக சென்ற ஆண்டு முதலமைச்சர் விருதுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர். ஹி கேன் டூ வொண்டர்ஸ்...''

மல்லய்யாவிடம் ஃபாரஸ்ட் ரேஞ்சர் மொய்லி கை குலுக்கிவிட்டு ஏ.சி. கங்கோத்ரியை ஏறிட்டார். தயக்கமான குரலில் சொன்னார்.

''சார்...! உங்களிடம் ஒரு முக்கியமான விஷயத்தை சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன்.!''

''என்ன...?''

''குளத்தில் விழுந்து இறந்த அந்தக் காரை வெளியே எடுத்து ஒரு மெக்கானிக்கை வைத்துப் பிரித்துப் பார்த்ததில் ஒரு விபரீதமான தடயம் கிடைத்தது... ஸார்...''

''விபரீதமான தடயமா...?'' - ஏ.சி. நெற்றி சுருங்கியது.

''எஸ்...!'' - என்று சொன்ன மொய்லி தான் கொண்டு வந்து இருந்த அந்த தோல்பையைப் பிரித்து அந்த குரங்கு பொம்மைகளை எடுத்து

வைத்தார்.

மொத்தம் நான்கு குரங்குகள் கட்டை விரல் உயரத்துக்கு இருந்தன.

ஒரு குரங்கு வாயைப் பொத்தியிருக்க-

இரண்டாவது குரங்கு கண்களை மூடியிருக்க-

மூன்றாவது குரங்கு காதுகளை மூடியிருக்க-

நான்காவது குரங்கு தன் இரண்டு கைகளையும் உயர்த்தியிருந்தது. வலது கையில் துப்பாக்கி! இடது கையில் கத்தி.

## 2

இந்தியா, மக்கள் தொகையில் இரண்டாவது பெரிய நாடு. இங்கே எரிபொருள் தேவை மிக மிக அதிகம். பெட்ரோலிய பொருட்களுக்கு மாற்று எரிபொருள் எதுவும் இல்லாத இந்த நிலையில் நமக்கு உள்ள ஒரே வழி அணு ஆற்றலை உபயோகப்படுத்துவதுதான். அளப்பரிய அணு ஆற்றலை நாம் தங்கு தடையின்றிப் பெற வேண்டுமானால் நமக்கு அமெரிக்காவின் ஒத்துழைப்பு வேண்டும். இந்த ஒத்துழைப்பு கிடைக்க நாம் அமெரிக்காவோடு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். இந்த ஒப்பந்தத்துக்குப் பெயர் 123.

சென்னை. சாலி கிராமம். தேரு வீதி. காலை ஏழு மணி.

பூஜையறையிலிருந்து வெளிப்பட்டார் மாத்ருபூதம். வயது ஐம்பத்தைந்து. ஆனாலும் தளராத உடம்பு. வெற்று மார்பில் பூசியிருந்த சந்தனம் மணக்க, நெற்றியில் குங்குமப் பொட்டு விபூதி வரிகளுக்கு இடையே பிரகாசித்தது. கொடியில் கிடந்த துண்டை எடுத்துப் போர்த்திக் கொண்டவர் பக்கத்து அறையை எட்டிப் பார்த்து



குரல் கொடுத்தார்.

''பாண்டுரங்கா...!''

பக்கத்து அறையிலிருந்து உதவியாளர் பாண்டு ரங்கன் ஓட்டமும், நடையுமாய் வந்தார்.

''அய்யா...!''

''என்னைப் பார்க்கிறதுக்காக ஹால்ல எத்தனை பேர் வந்து காத்துட்டிருக்காங்க...?''

''ரெண்டு பேர்ங்கய்யா...''

''யார் யாரு...?''

''வர்ணஜாலம் சில்க் சென்டர் ஓனர் ரவிவர்மாவும், மாம்பலம் மார்க்கெட் பொன்னய்யாவும் வந்து இருக்காங்கய்யா.''

''மொதல்ல வந்தது யாரு...?''

''ரவி வர்மா...''

''பொன்னய்யாவை நாளைக்கு வரும்படியா சொல்லிடு. ரவிவர்மாவை மட்டும் இருக்க வை.''

''சரிங்கய்யா...'' பாண்டுரங்கன் பவ்யமாய் நகர்ந்து போனதும், மாத்ருபூதம் அறையின் மூலையில் இருந்த வார்ட்ரோப்புக்கு போய் அதைத் திறந்து உள்ளேயிருந்த கண்ணாடி ஜாடியை எடுத்தார். ஜாடி முழுவதும் தண்ணீர் நிரம்பியிருக்க - அதில் பச்சை நிற தவளை ஒன்று சுண்டு விரல் பருமனில் நீந்திக் கொண்டிருந்தது. ஜாடியை வெளியே எடுத்து அதில் இருந்த தண்ணீரை ஒரு டம்ளரில் ஊற்றி அதைக் கையில் எடுத்துக் கொண்டு உதட்டுக்கு கொண்டு போனார்.

பின்பக்கம் அந்தக் குரல் கேட்டது.

''வேண்டாங்க...!''

திரும்பிப் பார்த்தார்.

அவருடைய மனைவி துர்க்கா நின்றிருந்தாள். தவிப்பான குரலில் சொன்னாள்.

''யாரோ சொன்னாங்கன்னு அதையெல்லாம் குடிக்காதீங்க. உடம்புக்கு ஏதாவது வந்துடப் போவுது...''

மாத்ருபூதம் அவளை எரிச்சலாய்ப் பார்த்தார்.

''ஒவ்வொரு தடவையும் இப்படி சொல்றதே உனக்கு வாடிக்கையா போச்சுடி. இந்தப் பச்சைத்

தவளையைப் பற்றி உனக்கு என்னடி தெரியும்...! செடி கொடிகளில் மூலிகை இருக்கிற மாதிரி தவளை வகைகளில் இது மருத்துவ குணம் நிரம்பிய தவளை. இதனோட உடம்புல பட்ட தண்ணியைக் குடிச்சால் உடம்புக்கு போதையும் கிடைக்கும். ஆரோக்கியமும் கிடைக்கும். ஒரு ரெண்டு மணி நேரத்துக்கு மனசு சந்தோஷமாய் இருக்கும். விஸ்கி, பிராந்தின்னு குடிச்சு உடம்பைக் கெடுத்துக்கறதைக் காட்டிலும் இந்த தவளை உடம்புல பட்ட தண்ணியைக் குடிக்கறது எவ்வளவோ நல்லது. போய்... உன்னோட வேலை என்னவோ அதை மட்டும் பாரு. இது மாதிரியான விஷயங்களை கண்டுக்காதே.'' சொன்னவர் தன் கையில் இருந்த டம்ளர் தண்ணியை ஒரே மூச்சில் குடித்துவிட்டு வார்ட்ரோப்பைச் சாத்தினார். மனைவியை ஒரு புழுவைப்போல் பார்த்துவிட்டு ஹாலை நோக்கி நடந்தார். வயிற்றுக்குள் இறங்கிய தண்ணீர் உடனே ரத்த ஓட்டத்தில் கலந்து உடம்பை இலவம்பஞ்சு போல் லேசாக்கியது.

ஹாலுக்குள் நுழைந்தார்.

ஒரு சூட்கேஸை மடியில் வைத்துக் கொண்டு சோபாவின் மூலைக்கு ஒண்டியபடி உட்கார்ந்திருந்த வர்ணஜாலம் சில்க் சென்டர் ஓனர் ரவிவர்மா எழுந்து நின்று கும்பிடு போட்டார்.

''அய்யா... வணக்கம்...!''

''என்ன வர்மா... ரொம்ப நாளைக்கப்புறம் என்னைப் பார்க்க வந்திருக்கே...?''

''அய்யா... அது... வந்து...''

''சொல்லு... ஏதாவது பிரச்னையா?''

''ஆமாங்கய்யா...''

''என்ன...?'' - ரவிவர்மாவுக்கு முன்பாய் வந்து உட்கார்ந்தார் மாத்ருபூதம்.

''அய்யா... நம்ம ஜவுளிக்கடைக்குப் பக்கத்துல அச்சுதன் நாயர்ன்னு ஒரு மலையாளி, மெஸ் ஒன்னை வெச்சு நடத்திட்டு வர்றான். அந்த மெஸ் சரியா ஓடறது இல்லை. நான் அந்த இடத்தை விலைக்கு கேட்டேன். நம்ம ஜவுளிக் கடைக்கு வர்ற



கஸ்டமர்ஸ் காரை நிறுத்த சரியான பார்க்கிங் வசதி இல்லாததனால அந்த இடத்தை வாங்கி அதை பார்க்கிங்கா மாத்திடலாம்ன்னு நினைச்சு அந்த நாயர்கிட்டே பேசிப் பார்த்தேன். மொதல்ல சரின்னு சொன்னவன் ரெண்டு நாள் கழிச்சு 'நானே இடத்தை விக்கப் பிரியப்படலை'ன்னு சொல்லிட்டான்.''

மாத்ருபூதம் குறுக்கிட்டார்.

''இப்ப உனக்கு அந்த இடம் வேணும்...?''

''ஆமாங்கய்யா...!''

''மொதல்ல சரின்னு சொன்னவன் அப்புறம் ஏன் தரமாட்டேன்னு சொன்னான்...?''

''தெரியலைங்கய்யா...!''

''சரி... அந்த மெஸ் இருக்கிற இடம் மொத்தம் எவ்வளவு கிரவுண்டு...?''

''ரெண்டு கிரவுண்டு...!''

''நீ என்ன விலைக்கு கேட்டே...?''

''இருபது லட்சத்துக்கு...''

''அது சரியான விலையா...?''

''மார்க்கெட் ரேட்டை விட ரெண்டு லட்சம் அதிகம்ய்யா!''

''பின்னே ஏன் மாட்டேன்னு சொல்றான்...?''

''தெரியலைங்கய்யா...''

''வேற எவனாவது விலை பேசறானா?''

''அது மாதிரியும் தெரியலைங்கய்யா...!''

''இப்ப உனக்கு அந்த இடம் வேணும். அவ்வளவுதானே?''

''ஆமாங்கய்யா...!''

''எனக்கு என்ன கொண்டு வந்திருக்கே...?''

ரவிவர்மா தன் கையில் இருந்த சூட்கேஸை மாத்ருபூதத்துக்கு முன்பாய் இருந்த டீபாயின் மேல் வைத்தார்.

''எவ்வளவு இருக்கு...?''

''அஞ்சு லட்சம்...''

''பாண்டுரங்கா...!''

பாண்டுரங்கன் எட்டிப் பார்த்தார்.

''அய்யா...!''

''இந்த பணத்தைக் கொண்டு போய் உள்ளே வை...!''

பாண்டுரங்கன் அதை எடுத்துக் கொண்டு போக, மாத்ருபூதம் ரவிவர்மாவை ஏறிட்டார்.

''அந்த மலையாளியோட பேர் என்னான்னு சொன்னே?''

''அச்சுதன் நாயர்...!''

''இந்த மாசத்துல நல்ல நாள் எது...?''

''நாளன்னிக்கு நல்ல நாள். இருபத்தேழாம் தேதி, புதன்கிழமை...!''

''சரி...! அன்னிக்கே ரெஜிஸ்ட்ரேசனை வெச்சுக்க...''

...

## 3

அமெரிக்காவுடன் நாம் செய்து கொண்டுள்ள அணு சம்பந்தமான ஒப்பந்தத்துக்கு 123 ஒப்பந்தம் என்று பெயர். இந்த '123 ஒப்பந்தம்' என்பது பெரும்பாலும் இந்தியாவுக்கு தொழில்நுட்பத்தை ஏற்றுமதி செய்வதற்கு தடை விதிக்கும் கடுமையான உள்ளூர் சட்டங்களைப் போன்றதே! இந்த ஒப்பந்தம் நிறைவேற்றப் பட்டால் யுரேனியம் செறிவூட்டுதல், அணுக்கழிவுகளை மீண்டும் பயன்படுத்துவது, கனநீர் உற்பத்தி ஆகியவற்றுக்கான தொழில் நுட்பங்களை இரட்டை பயன்பாட்டுடன் வழங்க வகை செய்யும். இது இந்தியாவுக்கு சாதகமான விஷயம் அல்ல, எனவேதான் இந்தியாவில் உள்ள எதிர்க்கட்சிகள் இந்த ஒப்பந்தம் வேண்டாம் என்று கூக்குரல் இடுகின்றன.

அஸிஸ்டெண்ட் கமிஷனர் கங்கோத்ரியும், இன்ஸ்பெக்டர் மல்லய்யாவும் மொய்லி எடுத்துக் காட்டிய அந்த நான்கு குரங்கு பொம்மைகளையும் அதிர்ச்சியாய்ப் பார்த்தார்கள். பித்தளை



உலோகத்தாலான அந்த நான்கு குரங்குகளும் தண்ணீரிலேயே இருந்ததால் பாசி பிடித்துப் போயிருந்தது.

ஏ.சி., மொய்லியிடம் கேட்டார். ''இந்த குரங்கு பொம்மைகளைத் தவிர வேறு ஏதாவது கார்க்குள் இருந்ததா...?''

''இல்லை சார்... இது மட்டும் ஒரு ப்ளாஸ்டிக் பையில் சுற்றி வைக்கப்பட்டு இருந்தது.''

''பொதுவாக மூன்று குரங்கு பொம்மைகள்தான் இருக்கும். இதென்ன நான்காவது குரங்கு...? அதுவும் அந்த குரங்கின் கைகளில் கத்தியும், துப்பாக்கியும்...! மிஸ்டர் மல்லய்யா! உங்களுக்கு இந்த நான்காவது குரங்கைப் பார்க்கும் போது என்ன தோன்றுகிறது...?''

''சார்...! முதல் குரங்கு நீயதைப் பேசாதே என்று சொல்கிறது. இரண்டாவது குரங்கு நீயதைப் பார்க்காதே என்று சொல்கிறது. மூன்றாவது குரங்கு நீயதைக் கேட்காதே என்று சொல்கிறது. ஆனால் நான்காவது குரங்கு ஒரு கையில் கத்தியையும், இன்னொரு குரங்கு துப்பாக்கியையும் வைத்து இருப்பதைப் பார்க்கும் போது...''

''பார்க்கும் போது...?''

''இது ஏதோ ஒரு தீவிரவாத கும்பலின் சிம்பலாகக்கூட இருக்கலாம். சென்னையைச் சேர்ந்த தொழிலதிபர் துரைபாண்டியனை காரில் வைத்து கொலை செய்து கட்டபிரபா காட்டுப் பகுதியில் உள்ள குளத்தில் காரோடு சேர்த்துத் தள்ளியது அந்த கும்பலாகக்கூட இருக்கலாம்.''

ஃபாரஸ்ட் ரேஞ்சர் மொய்லி குறுக்கிட்டார்.

''நான் ஒரு விளக்கம் சொல்லலாமா சார்?''

''ப்ளீஸ்...''

''ஹுப்ளிக்குப் பக்கத்தில் உள்ள கார்வார் என்ற கிராமத்தில் பித்தளை உலோகத்தாலான மிருகங்களையும் பறவைகளையும் செய்யக்கூடிய ஒரு குடும்பம் இருக்கிறது. அந்த குடும்பத் தலைவன் பெயர் வீரண்ணா. வெளி மாநிலங்களில் இருந்து வருபவர்கள் அந்த கிராமத்திற்கு சென்று

உலோக பொம்மைகளை வாங்கிக் கொண்டு போவது வழக்கம். அது மாதிரி துரைபாண்டியனும் அந்த கார்வார் கிராமத்துக்குப் போய் வீரண்ணாவிடம் அந்த குரங்கு பொம்மைகளை ஊர்க்குக் கொண்டு போக வாங்கியிருக்கலாம். இல்லையா...?''

''மே... பி...! பட்... ஒரு சந்தேகம்...''

''என்ன...?''

''பொதுவாக மூன்று குரங்கு பொம்மைகளைத்தான் தயாரிப்பார்கள். எதற்காக இப்படி ஒரு விபரீத கற்பனையோடு குரங்கு பொம்மையைத் தயாரிக்க வேண்டும்...?''

''பொம்மைகளைத் தயாரிக்கும் வீரண்ணாவோட ஸ்பெஷாலிடியே அந்த விபரீத கற்பனைகளோடு தயாராகும் பொம்மைகள் தானே...?''

''எனக்குப் புரியவில்லை...''

''சார்...! நான் அந்த கார்வார் கிராமத்துக்குப் போயிருக்கிறேன். வீரண்ணாவின் வீட்டுக்குப் போய் அவர்கள் தயாரித்து வைத்து இருக்கும் பொம்மைகளையும் பார்த்து இருக்கிறேன். பொதுவாக சமாதானப் புறா பொம்மையின் வாயில் ஒரு துப்பாக்கித் தோட்டா இருக்கும். அதேபோல் ஒரு புலியிடம் ஆட்டுக்குட்டி பால் குடிக்கும். ஒரு முதலையின் வாய்க்குள் முயல் குட்டி உட்கார்ந்து இருக்கும். ஒரு எலி துரத்த ஒரு பூனை ஓடும். இப்படி எல்லாமே இயற்கைக்கு மாறுபட்ட விதத்தில் பொம்மைகள் இருக்கும்.''

''இந்த நான்காவது குரங்கு பொம்மையையும் அந்த வீரண்ணா தான் தயாரித்து இருக்க வேண்டும். அதை துரைபாண்டியன் வாங்கி கார்க்குள் வைத்து இருக்க வேண்டும் என்று சொல்ல வருகிறீர்கள். இல்லையா...?''

''ஆமாம்...''

''அப்படி வாங்கியிருந்தால் அது ஐந்து வருடங்களுக்கு முன்பு நடந்த சம்பவம். துரைபாண்டியனை அந்த வீரண்ணாவுக்கு ஞாபகம்



இருக்குமா?''

''எதற்கும் கார்வார் கிராமத்திற்குப் போய் துரைபாண்டியனின் போட்டோவை வீரண்ணாவிடம் காட்டி கேட்டுப் பார்த்துவிடலாம் சார். சிலர் எளிதில் எதையும் மறக்க மாட்டார்கள். ஒருவேளை வீரண்ணாவுக்கு துரைபாண்டியனை ஞாபகம் இருக்கலாம்.

''ஹுப்ளியிலிருந்து கார்வார் கிராமம் எவ்வளவு தூரம்?''

''பதினைந்து கிலோ மீட்டர்... அரை மணி நேரத்திற்குள் போய் விடலாம்...!''

''இப்போதே புறப்பட்டுப் போய் அந்த வீரண்ணாவைப் பார்த்து விசாரித்துவிட்டு வந்து விடுங்களேன்.''

''எஸ்... சார்...!''

''மிஸ்டர் மல்லைய்யா..! நீங்களும் மொய்லியோடு அந்த கார்வார் கிராமத்துக்குப் போகிறீர்களா? ஏனென்றால் இந்த கேஸை டீல் செய்யப் போகிறவர் நீங்கள்...!''

''ஐ... வில் சார்...''

''குட்...! இந்தாருங்கள்... துரைபாண்டியனின் போட்டோ. இது டிரைவர் காளியப்பனின் போட்டோ. இந்த இரண்டு போட்டோக்களையும் அந்த வீரண்ணாவிடம் காட்டுங்கள்.''

மொய்லி அந்த போட்டோக்களை வாங்கி தான் கொண்டு வந்திருந்த தோல் பையில் பத்திரப்படுத்திக் கொண்டிருக்கும் போதே ஏ.ஜி. கங்கோத்ரியின் செல்போன் அழைத்தது.

எடுத்தார். மறுமுனையில் பேசியது ஜி.ஹெச்சின் தலைமை டாக்டர் ஷெட்டி.

''மிஸ்டர் கங்கோத்ரி...!''

''சொல்லுங்கள் டாக்டர்...!''

''கட்டபிரபா காட்டுப்பகுதி குளத்தில் கார்க்குள் இருந்த எலும்புத் துண்டுகளை பி.எம். செய்து பார்த்ததில் அதில் ஒரு பெண்ணின் எலும்புகளும் கலந்து இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.''

''பெண்ணா...?''

''ம்... அதுவும் ஒரு இளம்பெண்...''

## 4

வளர்ந்த நாடுகள் கூட இன்னமும் யுரேனியத்தைப் பயன்படுத்தி அணுசக்தியைத் தயாரித்துக் கொண்டு இருக்கும் நிலையில் நம் விஞ்ஞானிகள் புளூட்டோனியத்தைப் பயன்படுத்தும் தொழில்நுட்ப அளவுக்கு சென்று விட்டனர். அணுசக்தியை தயாரிக்க உதவும் மூலப் பொருளான யுரேனியம் இந்தியாவில் குறைவாக இருப்பதாகவும் ஒப்பந்தத்துக்கு இதுவும் ஒரு காரணம் என்றும் கூறப்படுகிறது. ஆனால் இந்தியாவுக்கு அணு மூலப் பொருட்களை வழங்குவதாக உறுதியளித்துள்ள அமெரிக்காவில் உண்மையிலேயே யுரேனிய வளம் குறைவாக உள்ளது. இப்படி நிலைமை இருக்கும் பொழுது அமெரிக்கா எப்படி அணு மூலப் பொருட்களை இந்தியாவுக்கு சப்ளை செய்யும்? அதற்கும் ஒரு வழியை அமெரிக்கா யோசித்து வைத்துள்ளது. அதாவது N.C.G. எனப்படும் அணுசக்தி எரிபொருள் சப்ளை நாடுகள் மூலம் நம் இந்தியாவுக்குத் தேவையான அணு மூலப் பொருட்களை சப்ளை செய்ய வைப்பதின் மூலம் ஒப்பந்தத்தை உயிர்ப்புள்ளதாக மாற்ற முடியும். இதற்கு இந்தியா ஒப்புதல் தெரிவிக்க வேண்டும் என்று அமெரிக்கா எதிர்பார்க்கிறது.

''அய்யா...!''

பாண்டுரங்களின் குரல் கேட்டு மாத்ருபூதம் பார்த்துக் கொண்டிருந்த டி.வி. நியூஸிலிருந்து திரும்பினார்.



''என்ன...?''

''அந்த அச்சுதன் நாயரைக் கூட்டிட்டு வந்துட்டேன். நீங்க வந்து ஒரு வார்த்தை பேசிட்டீங்கன்னா பரவாயில்லை...!''

''ஆள் எப்படி...? பயந்த சுபாவமா... இல்லை தெனாவெட்டா...?''

''ரொம்பவும் தெனாவெட்டுய்யா! உங்க பேரைச் சொல்லி கூப்பிட்டதாய் சொன்னதும் 'என்ன கட்டப் பஞ்சாயத்தா...? இதுக்கெல்லாம் பயப்படற ஆள் நான் கிடையாது. என் பக்கம் நியாயம் இருக்கிறதால நானே உங்க அய்யாகிட்ட வந்து பேசறேன்'னு சொன்னார்.''

மாத்ருபூதம் டி.வி.யை அணைத்து விட்டு எழுந்தார். அறையினின்றும் வெளிப்பட்டு ஹாலுக்குள் நுழைந்தார். கவரோரமாய் இறுகிய முகத்தோடு நின்றிருந்த அச்சுதன் நாயர் அவரைப் பார்த்ததும் ஒரு கும்பிடு போட்டார்.

''அய்யா! வணக்கம்...!''

நாயரின் வணக்கத்தைப் பொருட்படுத்தாமல் ஹாலில் இருந்த ஒரு பெரிய சோபாவுக்குப் போய்ச் சாய்ந்த மாத்ருபூதம் தனக்கு பக்கத்தில் இருந்த ஒரு நாற்காலியைக் காட்டினார்.

''உட்கார்ங்க...!''

''பரவாயில்லீங்கய்யா...!''

''அட... சும்மா... உட்கார்ங்க...!''

நாயர் தயங்கிக் கொண்டே உட்கார்ந்தார். மாத்ருபூதம் திரும்பி பாண்டுரங்களைப் பார்க்க, அவர் உள்ளே போய் இரண்டு அட்டைப் பெட்டிகளைக் கொண்டு வந்து டீபாயின் மேல் வைத்தார் நாயர் குழப்பமாய் அந்த அட்டைப் பெட்டிகளைப் பார்த்துக் கொண்டு இருக்கும் போதே மாத்ருபூதம் சொன்னார்.

''நாயர்...! ஒரு நிமிஷம் செலவு பண்ணி இந்த் இரண்டு அட்டைப் பெட்டிகளையும் கொஞ்சம் திறந்து பாருங்க...!''

நாயர் அந்த அட்டைப் பெட்டிகளையே பார்த்துக்

கொண்டிருக்க, மாத்ருபூதம் சிரித்தார்.

''ம்... திறந்து பாருங்க.!''

சில விநாடி தயக்கத்துக்குப் பிறகு நாயர் ஒரு அட்டைப் பெட்டியை எடுத்து திறந்து பார்த்தார். உள்ளே அடையார் அஜந்தா ஸ்வீட்ஸ் ஒரு கிலோ பாக்கெட் ஒன்றும் அதன் மேல் ரப்பர் பேண்டால் சுற்றப்பட்ட கடிதக் கவர் ஒன்றும் இருந்தது.

''நாயர்...! கையோடு கையாய் அந்தக் கவரையும் பிரிச்சு பார்த்துடுங்க...''

''இ... இ... இது என்ன...?''

''பிரிச்சுப் பாருங்க... தெரியும்...''

நாயர் பிரித்துப் பார்த்தார். உள்ளேயிருந்து ஒரு செக் வெளிப்பட்டது. நாயரின் பெயர்க்கு இருபது லட்ச ரூபாய்க்கான செக்.

''அய்யா! என்ன இது?''

''செக்...! வர்ணஜாலம் சில்க் சென்டர்க்குப் பக்கத்தில் உங்களுக்கு சொந்தமான ரெண்டு கிரௌண்ட் நிலம் இருக்கே. அந்த நிலத்தோட மதிப்புக்கான செக்." செக்கையும் ஸ்வீட் பாக்கெட்டையும் எடுத்துக்குங்க. என்னிக்கு ரெஜிஸ்ட்ரேஷன் வெச்சுக்கலாம். சொல்லுங்க.!''

''அய்யா...! அந்த இடத்தை நான் யார்க்கும் விக்கிற மாதிரி இல்லை. அதை வித்துத்தான் தீரணும்ங்கிற நிலைமையும் எனக்கு இல்லை.!''

''இதுதான் உங்க முடிவா... நாயரே?''

''ஆமாங்கய்யா...! நான் பிறப்பாலே மலையாளிதான். ஆனாலும் பிறந்து, வளர்ந்தது எல்லாமே இந்த தமிழ்நாட்டில்தான். அந்த ரெண்டு கிரவுண்டு நிலம் என்னோட இருதயம் மாதிரி.''

''அப்படீன்னா... நீங்க அந்த நிலத்தை விக்க மாட்டீங்க?''

''விக்கமாட்டேன்ய்யா...!''

''இதுதான் உங்க முடிவான பதிலா?''

''ஆமாங்கய்யா...!''

''சரி...! அந்த ரெண்டாவது அட்டைப் பெட்டியைத் திறந்து பாருங்க...!''



நாயர் திறந்தார்.

அட்டைப் பெட்டிக்குள்ளே ஒரு துப்பாக்கி ஒருக்களித்துப் படுத்து இருந்தது. நாயர் அதை அதிர்ச்சியாய்ப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே மாத்ருபூதம் சட்டென்று எடுத்துக் கொண்டார்.

''நாயர்...! நான் கட்டப் பஞ்சாயத்து பண்ணினாலும் அதில் ஒரு நியாயம் தர்மம் இருக்கும். உங்க ரெண்டு கிரவுண்டு நிலத்துக்கு இப்போதைய மார்க்கெட் ரேட் இருபது லட்சம். அது உங்களுக்கு கிடைக்கும் போது ஏன் வேண்டாம்ன்னு சொல்றீங்க...? பணத்தை வாங்கி பேங்க்ல போட்டுட்டு நிம்மதியா வட்டியை வாங்கி சாப்ட்டுட்டு இருக்க வேண்டியதுதானே...?''

''வட்டியை வாங்கி சாப்பிடற நிலைமையில் நான் இல்லீங்கய்யா...! கடவுள் என்னை ஓரளவு வசதியாவே வெச்சிருக்கார்.''

''நீங்க அந்த ஸ்வீட் பாக்கெட்டையும் செக்கையும் எடுத்துக்கலைன்னா நான் இந்த துப்பாக்கிக்கு வேலை கொடுக்க வேண்டியிருக்கும்.''

''அதாவது நீங்க என்னைக் கொன்னுடுவீங்க?''

''ஆமா...!''

நாயர் சில விநாடி யோசிப்புக்குப்பின் அந்த ஸ்வீட் பாக்கெட்டையும் செக்கையும் எடுத்துக் கொண்டார். மாத்ருபூதம் சிரித்தார்.

நாயர் குறுக்கிட்டார்.

''அய்யா! ஒரு நிமிஷம்...!''

''என்ன...?''

''இந்த ஸ்வீட் பாக்கெட் உங்க வீட்டு அல்சேஷன் நாய்க்கு! இந்த செக் அந்த குப்பைக் கூடைக்கு...!''

நாயர் சொல்ல - மாத்ருபூதத்தின் கையிலிருந்த துப்பாக்கி ஒரு பாம்பைப்போல் தலையை உயர்த்தி நாயரின் மார்பைப் பார்த்தது.

# 5

ஒரு காலத்தில் அணுசக்தி வல்லரசு நாடுகளின் கைகளில் மட்டும் இருந்தது. கடந்த 1974-ம் ஆண்டு இந்தியா முதன் முறையாக அணுகுண்டு வெடித்து வெற்றிகரமாக சோதனை நடத்தி வல்லரசு நாடுகளை வியப்பில் ஆழ்த்தியது. அதுமுதல் ஆக்கப்பூர்வமான பணிகளுக்காகவும், தற்காப்புக்காகவும் அணுசக்தியை இந்தியா பயன்படுத்த ஆரம்பித்தது. உடனே அமெரிக்காவுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. அந்த கோபத்தில் அது என்ன செய்தது தெரியுமா? 6-வது அத்தியாயத்தில் பார்ப்போம்.

ஹம்ப்ளிக்கு பதினைந்து கிலோ மீட்டர் தூரத்தில் இயற்கையன்னையின் மடியில் உட்கார்ந்திருந்த அந்த கார்வார் கிராமத்துக்கு மல்லய்யாவும், மொய்லியும் போய்ச் சேர்ந்த போது மதியம் மூன்று மணி.

ஒரு தோப்பின் நடுவில் இருந்தது வீரண்ணாவின் பித்தளை உலோக சிற்பக்கூடம். பத்துக்கும் மேற்பட்டவர்கள் உலோக சிற்பங்களை உருவாக்குவதில் உன்னிப்பாய் ஈடுபட்டு இருக்க, வெளிநாட்டு டூரிஸ்ட்கள் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மல்லய்யா வேலையாள் ஒருவனின் தோளைத் தொட்டார். கன்னடத்தில் கேட்டார்.

''வீரண்ணா எங்கேயிருக்கார்...?''

அந்த ஆள் சந்தேகத்தோடு ''எதுக்கு...?'' - என்று கேட்டான்.

''அவர்கிட்டே பேசணும்.''

''நீங்க யாரு... பத்திரிக்கைக்காரங்களா?''

''இல்லை...! போலீஸ்.''



அவன் பார்த்துக் கொண்டிருந்த வேலையை விட்டுவிட்டு மிரட்சியோடு அவர்களைப் பார்த்தான். ''போ... போலீசா... என்ன... விஷயமாய்...?''

''வீரண்ணா எங்கே...? அதைச் சொல்லு...!''

''அதோ... அந்தக் குடிசையில்...!'' - அவன் கைகாட்டிய திசையில் சற்றுத் தூரத்தில் தென்னை மரங்களுக்கு நடுவில் பனையோலைகளால் வேயப்பட்ட குடிசை தெரிய மல்லய்யாவும் மொய்லியும் அதை நோக்கிப் போனார்கள்.

குடிசையின் வாசலிலேயே கயிற்றுக் கட்டிலில் வீரண்ணா உட்கார்ந்து தட்டில் எதையோ வைத்துக் கொண்டு சாப்பிட்டுக் கொண்டிருக்க - பக்கத்தில் அவருடைய மனைவி. வீரண்ணாவுக்கு எழுபது வயது இருக்கலாம். உடம்பு வெகுவாய் தளர்ந்து போயிருந்தது. மல்லய்யாவையும் மொய்லியையும் பார்த்ததும் தட்டை வைத்து விட்டு குழப்பமாய் நிமிர்ந்தார். கன்னடத்தில் கேட்டார்.

''யாரு...?''

மல்லய்யா பக்கத்தில் வந்து அவருடைய தோள்களைப பற்றினார். ''அய்யா! அப்படியே உட்கார்ங்க... நாங்க போலீஸ். ஹம்ப்ளியிலிருந்து வர்றோம். ஒரு கேஸ் விஷயமாய் உங்ககிட்டே விசாரணை.''

''கேஸா...? என்ன... கேஸ்...?''

''பித்தளை உலோகத்தால் வடிவமைக்கப்பட்ட இந்த நான்கு குரங்குகளைப் பாருங்க.''

அவர் பார்த்தார். பிறகு குழப்பமான குரலில் கேட்டார்.

''என்ன இதுக்கு...?''

''இந்த குரங்கு சிற்பங்களைச் செய்தது உங்களோட சிற்பக்கலைக் கூடத்தில்தானே?''

''இல்லை...''

''நல்லாப் பார்த்து சொல்லுங்கய்யா...''

அவர் மெல்லச் சிரித்தார். ''இதுல நல்லாப் பார்த்து சொல்றதுக்கு என்ன இருக்கு...?

என்னோட கை வண்ணத்துல உருவான சிற்பங்களைப் பற்றி எனக்குத் தெரியாதா என்ன? இந்த நாலு குரங்குகளையும் செய்தது நானில்லை. இப்படியொரு கற்பனை வந்து இருந்தால் கூட நான் இந்த நான்காவது குரங்கை செய்து இருக்க மாட்டேன். காரணம் காந்திஜியோட கொள்கைகளை போதிக்கிற உன்னதமான மூன்று குரங்குகளை நான் கொச்சைப்படுத்த விரும்பி இருக்க மாட்டேன்."

"இதே மாதிரி சிற்பக் கலைக்கூடம் ஹாஃப்ளியில் வேறு ஏதாவது இருக்கா...?"

"எனக்குத் தெரிஞ்சு இல்லை..."

"சரி...! இந்த போட்டோவில் இருக்கிற நபரை உங்களுக்குத் தெரியுமா...?" மல்லய்யா சொல்லிக் கொண்டே தன் சட்டைப் பாக்கெட்டில் வைத்து இருந்த துரைபாண்டியனின் போட்டோவைக் காட்டினார்.

வீரண்ணா பார்த்துவிட்டு நெற்றிப் பரப்பை இடது கை விரல்களால் தேய்க்க - மல்லய்யா சொன்னார்.

"இவர் பேர் துரைபாண்டியன்...! சென்னையைச் சேர்ந்த பெரிய தொழில் அதிபர். ஐந்து வருடங்களுக்கு முன்னால் ஹாஃப்ளிக்கு காரில் வந்தார். வந்தவர் காணாமல் போயிட்டார். இப்போ அஞ்சு வருஷத்துக்கு அப்புறம் கட்ட பிரபா காட்டுப் பகுதியில் சேறும் சகதியுமாய் இருந்த குளத்தில் துரைபாண்டியனின் காரும் அந்த கார்க்குள் இரண்டு எலும்புக் கூடுகளும் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கு... அந்தக் காரை வெளியே எடுத்து மேலும் சோதனை செய்து பார்த்ததில் பித்தளையாலான நான்கு குரங்கு பொம்மைகளும் கிடைச்சது. இந்த பொம்மையை துரைபாண்டியன் ஒருவேளை உங்களுடைய சிற்பக் கூடத்திலிருந்து வாங்கிட்டுப் போயிருக்கலாம்ங்கிற எண்ணத்துலதான் இங்கே விசாரிக்க வந்தோம்..."



"இவரோட பேர் என்ன சொன்னீங்க?"

"துரைப்பாண்டியன்..."

வீரண்ணா திரும்பி தனக்குப் பக்கத்தில் உட்கார்ந்து இருந்த மனைவியைப் பார்த்தார். கன்னடத்தில் சொன்னார்.

"புட்டம்மா...! போய்... அந்தப் பரணில் இருக்கிற ட்ரங்க் பெட்டியைக் கொண்டா...!"

அந்த அம்மாள் எழுந்து போய் ட்ரங்க் பெட்டியைக் கொண்டு வந்து கொடுக்க, அதை வாங்கி மடியில் வைத்துக் கொண்ட வீரண்ணா திறந்து அதில் இருந்த காகிதக் கற்றைகளைக் கிளறி ஒரு விசிட்டிங் கார்டை எடுத்தார். மல்லய்யாவிடம் நீட்டினார்.

"அந்தக் கார்டில் என்ன பேர் எழுதியிருக்குன்னு பாருங்க."

மல்லய்யா வாங்கிப் பார்த்தார்.

நீள் செவ்வகமான அந்த விசிட்டிங் கார்டில் சில்வர் வர்ண எழுத்துக்கள் மின்னின.

**P.DURAI PANDIAN**
**(MANAGING DIRECTOR)**
**DURAI EXPORTS.**
**No.27, HENRY STREET,**
**ADAYAR - CHENNAI-20.**

மல்லய்யா அந்த விசிட்டிங் கார்டைப் பார்த்துவிட்டு வியப்போடு வீரண்ணாவை ஏறிட்டார். "இந்த துரைபாண்டியன் உங்களைப் பார்க்க வந்தாரா...?"

"ம்... வந்தார்... ஆனா... முகம் ஞாபகம் இல்லை. அதுவும் அவர் வந்தது ஒரு ராத்திரிவேளையில்...!"

"எதுக்காக வந்தார்...?"

வீரண்ணா சில விநாடிகள் மௌனமாய் இருந்து விட்டு சொன்னார். "அந்த துரைபாண்டியன் ஒரு விபரீதத் திட்டத்தோடு வந்திருந்தார்."

# 6

**1974**-ம் ஆண்டில் இந்தியா அணுகுண்டு வெடித்தது அமெரிக்காவுக்கு கோபத்தை வரவழைத்தது. அந்த கோபத்தில் அமெரிக்கா இந்தியாவுக்கு எதிராக ஒரு சட்டத்தை இயற்றியது. இந்தியாவுக்கு இனிமேல் அணுசக்தி மூலப் பொருட்கள், அணு உலைகள் மற்றும் தொழில் நுட்பம் ஆகியவைகளைக் கிடைக்க விடாமல் செய்யும் சட்டம் அது. இந்த சட்டத்தின் அடிப்படையில் அமெரிக்காவுக்கு ஜால்ரா போடும் மற்ற நாடுகளும் இந்தியாவுக்கு உதவாமல் ஒதுங்கிக் கொண்டன. இதற்காக இந்தியா துவண்டு போய்விடவில்லை. அது என்ன செய்தது தெரியுமா...?

அச்சுதன் நாயர் தன் மார்பைக் குறிபார்த்த துப்பாக்கியை ஒரு அரைப் புன்னகையோடு பார்த்து விட்டு மீதி அரைப் புன்னகையோடு மாத்ருபூதத்தை ஏறிட்டார்.

''அய்யா...! நீங்க ஒரு கட்டப் பஞ்சாயத்து நீதிபதி. உங்ககிட்டே ஒரு வேண்டுகோள். அதைக் கேட்டுட்டு நீங்க என்னை சுடலாமே...''

''என்ன...?''

''வர்ணஜாலம் சில்க் சென்டர் உரிமையாளர் ரவிவர்மா உங்ககிட்டே வந்து என்னோட நிலத்தை வாங்கிக் கொடுக்கும்படியா சொல்லவும், நீங்களும் ஒரு அஞ்சு லட்ச ரூபாயைக் கமிஷனாய் வாங்கிகிட்டு சரின்னு சொல்லிட்டீங்க. வாங்கின பணத்துக்காக என்னை மிரட்டிப் பணிய வைக்கவும் முயற்சி பண்ணிட்டு இருக்கீங்க. நான் உங்களுக்கு பதினைஞ்சு லட்சம் கமிஷனாத் தர்றேன். ரவிவர்மாவோட இடத்தை எனக்கு



வாங்கித் தர முடியுமா...?''

மாத்ருபூதத்தின் வாய் லேசாய் பிளந்தது.

''என்னது...! கமிஷன் பதினைஞ்சு லட்ச ரூபாயா?''

''ஏன் போதாதா...? போதாதுன்னா சொல்லுங்க...! இன்னும் ஒரு அஞ்சு லட்சம் சேர்த்துத் தர்றேன்...''

மாத்ருபூதத்தின் கையில் இருந்த துப்பாக்கி கீழே தாழ்ந்தது.

''இருபது லட்சமா...?''

''சந்தேகமே வேண்டாம். ஒரு மெஸ் நடத்தற என்னால இவ்வளவு பெரிய தொகையை எப்படி கொடுக்க முடியும்ன்னு நீங்க யோசனை பண்ணலாம். எனக்கு ரெண்டு மகன்கள் இருக்கிறதும், அவங்க ரெண்டு பேரும் அமெரிக்காவில் சாஃப்ட்வேர் என்ஜினியர்களாய் இருக்கிறதும் லட்சக் கணக்கில் டாலர் சம்பாதிக்கிறதும் உங்களுக்குத் தெரியாது. இன்னிக்கு நான் இருக்கிற நிலைமையில் எவ்வளவு பெரிய சொத்தையும் வாங்க முடியும். வர்ணஜாலம் ஜவுளிக்கடையை ஒரு கோடி ரூபாய்க்கு நான் வாங்கிக்கத் தயார். உங்களால அதை எனக்கு வாங்கிக் கொடுக்க முடியுமா...? அப்படி நீங்க வாங்கிக் குடுத்துட்டா உங்களுக்கு கமிஷன் இருபது லட்ச ரூபாய்.''

மாத்ருபூதம் பாண்டுரங்கனைப் பார்த்தார்.

''பாண்டு! என்ன செய்யலாம்...?''

''ஏத்துக்கலாம்ய்யா...!''

''சரி...! அந்த ரவிவர்மாவுக்கு போன் போடு...!''

பாண்டுரங்கன் தன் கையில் வைத்து இருந்த செல்போனில் ரவிவர்மாவைப் பிடித்துக் கொடுத்தான். ரவிவர்மா போனில் குழைத்தார்.

''அய்யா...! வணக்கம்...!

''வணக்கம்... வர்மா...! இப்ப... நீ எங்கே இருக்கே? வீடா... இல்லை... கடையா...?''

''ரெண்டும் இல்லீங்கய்யா...! கிளப்.''

''ஓ...! தண்ணி போட்டுகிட்டு இருக்கியா...''

''அது... அது... சும்மா... பீர்தாங்கய்யா...''

''சரி... இப்ப.. நீ நிதானத்துலதானே இருக்கே?''

''தெளிவாயிருக்கேன்ய்யா...!''

''உன்னோட வர்ணஜாலம் ஜவுளிக்கடை எப்படி போயிட்டிருக்கு...?''

''நல்லாவே போயிட்டிருக்கய்யா...''

''உன்னோட இடத்துக்கு இப்போ என்ன வேல்யூ...?''

''எண்பது லட்சம் வரை இருக்குங்கய்யா...''

''நான் ஒரு கோடி ரூபாய் வாங்கித்தர்றேன். நீ அந்த இடத்தை விட்டுட்டு வேற இடத்துக்குப் போயிடேன்.''

''அய்யா...! நீங்க என்ன சொல்றீங்க...? என்னோட இடத்தை நான் எதுக்காக விக்கணும்...? நானே நாயரோட இடம் கிடைச்சா கடையைப் பெரிசு பண்ணலாம்னு இருக்கேன்...''

''இதோ பார் வர்மா...! உன்னோட இடத்துக்கு எண்பது லட்ச ரூபாய் மதிப்புன்னு நீயே சொல்லிட்டே... கூட இருபது லட்ச ரூபாய் லாபம் கிடைக்குது. பேசாமே வித்துட்டு வேற ஏரியாப் பக்கமாய் போய் ஒரு நல்ல இடமாப் பார்த்து...''

''அய்யா...! நீங்க பேசறது உங்களுக்கே சரியாப் படுதா...? நீங்க அந்த நாயரைப் பார்த்துப் பேசி பஞ்சாயத்து பண்ணி இடம் வாங்கித் தருவீங்கன்னு பார்த்தா என்னோட இடத்தை விக்கறதுக்கு முயற்சி பண்றீங்களே...? நீங்க இப்படி பேசறது ஆச்சர்யமாய் இருக்கய்யா.''

மாத்ருபூதம் சிரித்தார். ''இதோ பார் வர்மா...! அநியாயத்தைப் பற்றி நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம். பேசாமே அச்சுதன் நாயர்க்கு உன்னோட இடத்தைக் கொடுத்துட்டு வேற பக்கம் போயிடு...! நான் வேணும்ன்னா உனக்கு இடம் பார்த்துத் தர்றேன்...!''

''இல்லீங்கய்யா...!''

''என்ன இல்ல...?''

''என்னோட இடத்தை நான் யார்க்கும் கொடுக்க



மாட்டேன்...!''

''நான் முடிவு பண்ணிட்டேன். நீ கொடுத்து ஆகணும்.''

''மாட்டேன்ய்யா...''

''உனக்கு முழுசா ஒரு நாள் டயம்... அதுக்குள்ளே நீ உன்னோட இடத்தை தர்றேன்னு சொல்லணும். இல்லேன்னா உன்னோட அஸ்தியைக் கடல்ல கரைக்க வேண்டியிருக்கும்.

## 7

**வ**ளர்ந்த நாடுகள் கூட இன்னமும் யுரேனியத்தைப் பயன்படுத்தி அணுசக்தியைத் தயாரித்துக் கொண்டிருக்கும் நிலையில் நம் நாட்டு விஞ்ஞானிகள் புளுட்டோனியத்தைப் பயன்படுத்தும் தொழில்நுட்ப அளவுக்கு சென்று விட்டனர். தகவல் தொழில் நுட்பம், விண்வெளி, பொருளாதாரம், அணுசக்தி என பல துறைகளில் வல்லரசு நாடுகளுக்கு சவால் விடும் வகையில் இந்தியா வளர்ந்து வருகிறது. இதன் மூலம் இந்தியா உலகின் தவிர்க்க முடியாத ஒரு சக்தியாக உருவாகி விட்டது. இதனால் அமெரிக்காவும் தன் மனதை மாற்றிக் கொண்டது. பல நாடுகள் ஆச்சர்யப்படும் வகையில் இந்தியாவுடன் சிவில் அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தம் செய்தது. இதற்கான ஒப்பந்தம் கடந்த 2005 ஜூலை 18-ம் தேதி கையெழுத்தானது.

''விபரீதத் திட்டமா?'' மல்லய்யா திகைக்க வீரண்ணா ஒரு புன்னகையோடு சொன்னார்.

''துரை பாண்டியன் தன் கையோடு ஒரு ஆல்பத்தை கொண்டு வந்து இருந்தார். அந்த ஆல்பம் நிறைய போட்டோக்கள். எல்லாமே பழங்கால கடவுள் உருவ சிற்பங்கள். அந்த

சிற்பங்களைக் காட்டி 'இது மாதிரியான சிற்பங்களை ஐம்பொன்னால் 'செய்ய முடியுமா'ன்னு கேட்டார். நான் செய்ய முடியும்'-ன்னு சொன்னேன். சொல்லிவிட்டு 'எதுக்காக இந்த சிற்பங்கள்? ஏதாவது கோயில் கட்டப் போறீங்களா'ன்னு கேட்டேன். அவர் அதுக்கு 'ஆமா'ன்னு சொன்னார். 'எந்த இடத்துல கோயில் கட்டறீங்க'ன்னு நான் கேட்டதுக்கு அவர் பதில் சொல்லத் திணறினார். எனக்கு சந்தேகம் வந்தது. சிலைகள் செய்து கொடுக்க முடியாதுன்னு நான் சொன்னதும் கடைசியில் உண்மையை ஒத்துக்கிட்டார்.''

''என்ன உண்மை அது...?''

''நான் தயாரிச்சு தர்ற ஐம்பொன் சிலைகளை பூமிக்கடியில் ஒரு ஆறு மாதம் புதைச்சு வெச்சிருந்து பிறகு அதைத் தோண்டி எடுத்து பழங்கால சிலைகள்ன்னு சொல்லி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி பண்ணப் போறதாய் சொன்னார்.''

''அது பெரிய மோசடியாச்சே...?''

''நானும் அதைத்தான் சொன்னேன். துரைபாண்டியன் அதுக்கு ஒத்துக்கலை. அது மோசடி கிடையாது. எல்லா பிசினஸ் மாதிரி அதுவும் ஒரு பிசினஸ்தான்னு சொன்னார். நான் அதுக்கு ஒத்துக்கலை. பணம் எவ்வளவு வேணும்ன்னாலும் தர்றேன்னு சொன்னார். எனக்கு கோபம் வந்தது. 'நீயாச்சு உன்னோட பணமுமாச்சு. மொதல்ல இடத்தை காலி பண்ணு'ன்னு சொன்னேன். கொஞ்ச நேரம் என்கிட்டே பணிவாகவும், இதமாகவும் பேசிப் பார்த்தார். நான் பிடிவாதமாய் முடியாதுன்னு சொல்லவே கிளம்பிப் போயிட்டார். இது நடந்து ஒரு அஞ்சு வருஷம் இருக்கும். நான் அந்த சம்பவத்தை மறந்தே போயிட்டேன். இப்போ நீங்க போட்டோ காட்டினதும்தான் எனக்கு ஞாபகம் வந்தது.''

''அதுக்கப்புறம்... துரைபாண்டியன் உங்களைத் தேடி வந்தாரா?''



''வரலை...!''

''நல்லா ஞாபகப்படுத்திப் பாருங்க... உங்ககிட்டே மறுபடியும் பேசிப் பார்க்க வந்து இருப்பார்...''

''இல்லை... வரலை...!'' வீரண்ணா தலையாட்டிக் கொண்டிருக்கும் போதே அவருடைய மனைவி குறுக்கிட்டாள். மல்லய்யாவை ஏறிட்டபடி சொன்னாள். ''அய்யா...! ஒரு விஷயம்...?''

மல்லய்யா வியப்போடு ''சொல்லுங்கம்மா...!'' - என்றார்.

''அஞ்சு வருஷத்துக்கு முந்தி அந்த துரைபாண்டியன் இங்கே வந்து என் கணவரிடம் பேசிகிட்டு இருந்த போது நானும் இருந்தேன். என் கணவர் அவர்கிட்டே கோபமாய் பேசிட்டு குடிசைக்குள்ளே போயிட்டார். துரைபாண்டியன் கொஞ்ச நேரம் மௌனமாய் இருந்துட்டு தன்னோட காரை நோக்கிப் போனார். நான் இதே குடிசைவாசல்ல நின்னு அவரைப் பார்த்துட்டி ருந்தேன்... அப்போ...''

''அப்போ...?'' - மல்லய்யாவும் மொய்லியும் ஆர்வமானார்கள்.

வீரண்ணாவின் மனைவி தொடர்ந்தாள். ''துரைபாண்டியன் கார்ல ஏறப் போகும் போது நாகப்பா அவரைப் போய்ப் பார்த்தான்.''

''நாகப்பாவா... யாரது...?''

''இதே சிற்பக் கலைக்கூடத்துல வேலை பார்த்துட்டு இருக்கிறவன்தான். அவன் அவர்கிட்டே என்ன பேசினான்னு எனக்குத் தெரியாது. ஆனா அடுத்த வாரத்திலிருந்து அந்த நாகப்பா இங்கே வேலைக்கு வரலை... இப்ப நீங்க சொல்ற விஷயங்களை வெச்சுப் பார்க்கும் போது துரைபாண்டியனுக்கும் நாகப்பாவுக்கும் ஏதோ ஒரு தொடர்பு ஏற்பட்டிருக்கணும்.''

''இந்த விஷயத்தை நீங்க உங்க கணவர்கிட்டே சொல்லலையா...?''

''சொல்லலை...''

''ஏன்...?''

''அந்த சமயத்துல அது எனக்கு ஒரு முக்கியமான விஷயமாய் படலை.''

''அந்த நாகப்பா இப்போ எங்கே?''

''மொதல்ல அவன் குடியிருந்த இடம் தொட்டஹள்ளி. அது ஒரு கிராமம். இங்கிருந்து ஏழு கிலோமீட்டர்.''

''சரியான அட்ரஸை சொல்லுங்கம்மா.''

''அது ஒரு சின்ன கிராமம். 'தாடி நாகப்பன் வீடு எது'ன்னு கேட்டா யாரும் வீட்டை அடையாளம் காட்டுவாங்க...!''

மல்லய்யா மேற்கொண்டு பேசும் முன்பு அவருடைய செல்போன் மெலிதாய் சிணுங்கிக் கூப்பிட்டது. எடுத்து அழைப்பது யார் என்று பார்த்தார். அஸிஸ்டெண்ட் கமிஷனர் கங்கோத்ரி.

''ஸார்...''

''மிஸ்டர் மல்லய்யா...! வீரண்ணாவைப் பார்த்து பேசிட்டீங்களா?''

''பேசிட்டோம் ஸார்.''

''எனி யூஸ்ஃபுல் க்ளூ...?''

''காட் இட் ஸார்... வீரண்ணாவோட சிற்பக் கலைக்கூடத்தில் வேலை பார்த்துட்டிருந்த நாகப்பா என்கிற ஒருத்தன் கடைசியாய் துரைபாண்டியனைப் பார்த்து இருக்கான். அந்த நாகப்பா இப்போ சிற்பக் கலைக்கூடத்தில் வேலையில் இல்லை. அவன் இங்கிருந்து ஏழு கிலோ மீட்டர் தள்ளி தொட்ட ஹள்ளி என்கிற கிராமத்தில் இருக்கிறதாய் வீரண்ணாவோட மனைவி சொல்லியிருக்கா. அவனைப் பார்க்கத்தான் நாங்க போயிட்டிருக்கோம்.''

''ஓ.கே... நீங்க அந்த நாகப்பாவைப் பார்த்து விசாரணையை முடிச்சுகிட்டு நேரே கமிஷனர் ஆபீஸ்க்கு வந்துடுங்க. துரைபாண்டியனின் மனைவி சௌந்தரா சென்னையிலிருந்து இங்கே வந்துட்டாங்க. அவங்க சொல்ற ஒரு தகவல் குழப்பமாய் இருக்கு...''

''குழப்பமான தகவலா...?''



''எஸ்...! கட்டபிரபா ஃபாரஸ்டில் உள்ள யானை விழுங்கி குளத்தில் கண்டு எடுக்கப்பட்ட கார்க்குள் இரண்டு எலும்புக் கூடுகள் இருந்ததைப் பற்றியும் அந்த இரண்டு எலும்புக் கூடுகளில் ஒன்று இளம்பெண் ஒருத்தியின் எலும்புக்கூடு என்றும், இன்னொரு எலும்புக்கூடு துரைபாண்டியனுடைய எலும்புக்கூடாக இருக்கலாம் என்றும் சௌந்தராவிடம் சொன்ன போது சௌந்தரா ஒப்புக் கொள்ளவில்லை.''

''எதை ஒப்புக் கொள்ளவில்லை சார்...?''

''அது துரைபாண்டியனின் எலும்புக் கூடாய் இருக்காதுன்னு சௌந்தரா சொல்றாங்க.''

''எதை அடிப்படையா வெச்சு அப்படி சொல்றாங்க?''

''துரைபாண்டியன் உயிரோடுதான் இருக்காராம். மாசத்துக்கு ஒரு தடவை செல்போன்ல பேசிட்டிருக்காராம்.''

## 8

அணு ஆயுத விஷயத்தில் நம் இந்திய விஞ்ஞானிகள் யார்க்கும் சளைத்தவர்கள் அல்ல. ஆரம்பத்தில் அமெரிக்கா என்னதான் தடைகளை விதித்த போதிலும் நம் இந்தியா அதையும் மீறி அணு ஆயுத வல்லமை பெற்றுள்ளது. பல்வேறு அணுசக்தி திட்டங்களையும் வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கிறோம். சுருக்கமாக சொல்லப் போனால் அணு ஆற்றல் விஷயத்தில் இதுவரை தனிக்காட்டு ராஜாவாக ஆட்சி செய்து வருகிறோம்.

''அய்யா...!''

உள்ளே போயிருந்த அரைபாட்டில் 'ஷிவாஸ் ரீகல்' விஸ்கி தாலாட்டிக் கொண்டிருக்க கண்களை மெல்லத் திறந்தார் மாத்ருபூதம். எதிரே உதவியாளர்

பாண்டுரங்கன்.

''என்ன பாண்டு...?''

''பி - த்ரீ ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர் தட்சிணாமூர்த்தி வந்திருக்கார்.''

''என்னவாம்...?''

''உங்களைப் பார்க்கணுமாம்.''

''விஷயம் என்னான்னு கேட்டியா...?''

''கேட்டேன்... உங்ககிட்டதான் பேசணுமாம்...''

''தட்சிணா காரணம் இல்லாமே வரமாட்டான். மாமூல் எல்லாம் அவனுக்கு ஒழுங்காப் போகுதா...?''

''அதெல்லாம் ஒண்ணாந்தேதியானா கரெக்டா போயிரும்ய்யா. நான்தானே வீட்டுக்குக் கொண்டு போய் குடுத்துட்டு வர்றேன்.''

''சரி... உள்ளார வரச்சொல்லு...!'' மாத்ருபூதம் சொல்லிவிட்டு கண்களை மூடிக் கொள்ள- பாண்டுரங்கன் வெளியேறினார்.

அந்த நிமிஷம் முழுதாய் கரைவதற்குள் இன்ஸ்பெக்டர் தட்சிணாமூர்த்தி மஃப்டி ட்ரஸ்ஸில் உள்ளே வந்தார். நாற்பது வயது. திடகாத்ர உடம்பு.

''அய்யா... வணக்கம்...!''

''வா தட்சிணா...! என்ன வராத ஆள் வந்து இருக்கே. ஏதாவது முக்கியமான விஷயமா...?''

''ஆமாங்கய்யா...!''

''கொஞ்சம் ரீகல் சாப்பிடறியா?''

''வேண்டாங்கய்யா... இன்னும் ஒரு மணி நேரத்துல ட்யூட்டிக்குப் போகணும்.''

''அப்படியா...! சரி விஷயத்தைச் சொல்லு...''

''அய்யா...! நான் சொல்றேன்னு தப்பா நினைச்சுக்காதீங்க. கொஞ்ச நாளைக்கு இந்த கட்டப் பஞ்சாயத்தையெல்லாம் நடத்த வேண்டாம்.''

''ஏன்... உன்னோட டிபார்ட்மெண்ட்ல எவனாவது துள்ளாட்டம் போடறானா...?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லீங்கய்யா.!''



''பின்னே என்ன...?''

''கட்டப் பஞ்சாயத்து, பெண்களின்மேல் வன்கொடுமை இந்த குற்றங்களை யார் பண்ணினாலும் அவங்க மேல குண்டர் சட்டம் பாய தயாராய் இருக்கு. சட்டசபையில் இதுக்கான சட்ட திருத்தம் கொண்டு வரப்போறாங்களாம்.''

மாத்ருபூதம் சிரித்தார்.

''இதோ பார் தட்சிணா... இந்த சட்ட திருத்தம், குண்டர் சட்டம், இதெல்லாம் எனக்கு பஞ்சு மிட்டாய் மாதிரி. சட்டம் ஏமாந்தவன்கிட்டேதான் போகும். என்னை மாதிரியான ஆட்கள்கிட்டே வராது.''

''அய்யா...! நீங்க எதுக்கும் கொஞ்சம் எச்சரிக்கையாய் இருக்கிறது நல்லது...!''

''இதைத்தான் நீ சொல்ல வந்தியா?''

''ஆமாங்கய்யா...''

''சொல்லியாச்சில்ல... போய்கிட்டேயிரு...! பொண்ணு இப்ப என்ன படிக்குது...?''

''ப்ளஸ் டூ...''

''நல்லாப் படிக்க வைய்யி...! பாண்டு...!''

பாண்டுரங்கன் வெளியே இருந்து எட்டிப் பார்த்தார்.

''அய்யா...!''

''தட்சிணாமூர்த்திக்கு ஒரு ஐயாயிரம் கொடுத்து அனுப்பு.''

தட்சிணாமூர்த்தி கும்பிட்டு வெளியேறிக் கொண்டு இருக்கும் போதே செல்போன் கூப்பிட்டது. எடுத்தார்.

''ஹலோ...''

''அய்யா... நான் அச்சுதன் நாயர்...!''

''என்னாச்சு நாயர்...?''

''ரவிவர்மா வர்ணஜாலம் ஜவுளிக்கடையை காலி பண்ணிட்டார். எனக்கு விற்கவும் சம்மதம்ன்னு சொல்லிட்டார்.''

''அக்ரிமெண்ட் எப்போ...?''

''வர்ற புதன்கிழமை...''

''நீங்க எனக்குப் பேசின கமிஷன் எப்ப என்

கைக்கு வரும் நாயர்?''

''அக்ரிமெண்ட் போட்டு முடிச்சதுமே...!''

''வர்மாவோட இடத்தை வாங்கி நீங்க என்ன பண்ணப் போறீங்க...?''

''ஒரு ஹோட்டல் கட்டலாம்ன்னு...! பசங்க ஃபாரினிலிருந்து வந்ததுமே வேலையை ஆரம்பிச்சுடுவோம்.''

''சரி...! சாயந்தரமா வந்து என்னைப் பார்த்துட்டு போங்க.''

''சரிங்கய்யா...''

மாத்ருபூதம் தன்னுடைய செல்போனை அணைத்து இடது உள்ளங்கையில் அடக்கிக் கொண்ட விநாடி-

பாண்டுரங்கன் உள்ளே வந்தார். கையில் ஒரு சிறிய அட்டைப் பெட்டி. மாத்ருபூதத்தின் புருவங்கள் உயர்ந்தன.

''என்ன பாண்டு இது...?''

''அய்யா! இந்த பெட்டி கூரியர் தபாலில் வந்தது.''

''தட்சிணா போயிட்டானா?''

''ம்... போயிட்டார்.''

''பணத்தைக் கொடுத்துட்டியா?''

''ம்...''

''சரி... கூரியரை யார் அனுப்பிச்சிருக்காங்கன்னு பார்த்தாயா?''

''பார்த்தேன்யா...! பேரு ஜம்புநாதன், 108, மாருதி நகர், நங்கநல்லூர்!''

''ஜம்புநாதனா...? யாரது...? அந்தப் பேர்ல ஒருத்தரையும் எனக்குத் தெரியாதே...?''

''அய்யா! உள்ளே என்ன இருக்குன்னு பிரிச்சு பார்த்துடலாங்களா...?''

''ம்... பிரி... பிரி...''

பாண்டுரங்கன் ஒரு கத்திரிக்கோலின் உதவியால் அந்தச் சிறிய அட்டைப் பெட்டியை பரபரவென்று பிரித்தார்.

முப்பதே விநாடிகள்!

அட்டைப் பெட்டியினின்றும் அது



வெளிப்பட்டது.

நான்கு குரங்கு பொம்மைகள்.

ஒன்று கைகளால் வாயைப் பொத்தியிருக்க-

இரண்டாவது கண்களை மூடியிருக்க-

மூன்றாவது காதுகளைப் பொத்தியிருக்க-

நான்காவது குரங்கு வலது கையில் துப்பாக்கியையும் இடது கையில் கத்தியையும் பிடித்தபடி நின்றிருந்தது.

## 9

அமெரிக்காவோடு நாம் செய்து கொண்ட அணுசக்தி ஒப்பந்தம் மூலம் நமது பெருமைக்கும் கௌரவத்திற்கும் இம்மிளவு பாதிப்பு கூட வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மாறாக வீட்டின் பின்பக்கம் உள்ள புறக்கடை வழியாக திருடன் உள்ளே நுழைவது போல் ஒப்பந்தம் என்ற பெயரில் நம் நாட்டின் சுயாட்சிக்கு எந்த நிலையிலும் பாதிப்பு ஏற்பட அனுமதிக்கக் கூடாது என்பது எதிர்ப்பாளர்களின் கவலை. சரி அமெரிக்கா நிறைவேற்றியுள்ள அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் என்னென்ன விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்கலாமா...? அமெரிக்க சட்டம் என்ன சொல்கிறது? அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

இன்ஸ்பெக்டர் மல்லய்யாவும் மொய்லியும் ஹாஃபனி கமிஷனர் ஆபீஸ் போய் சேர்ந்த போது அஸிஸ்டண்ட் கமிஷனர் கங்கோத்ரி அந்த நடுத்தர வயதுப் பெண்ணோடு உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார். இரண்டு பேர்களையும் பார்த்ததும் பேச்சை நிறுத்திக் கொண்டு மல்லய்யாவை ஏறிட்டார்.

''மிஸ்டர் மல்லய்யா...! ஷி... சுஸ்... சௌந்தரா..

ஒய்ஃப் ஆஃப் துரைபாண்டியன்.''

இருவரும் வணக்கம் தெரிவித்துவிட்டு பக்கத்து காலியான இருக்கைகளில் உட்கார்ந்தார்கள்.

''மிஸஸ் சௌந்தரா...! இவங்க ரெண்டு பேரும்தான் உங்க கணவர் சம்பந்தப்பட்ட கேஸை இன்வெஸ்டிகேட் பண்ணிட்டிருக்காங்க.''

சௌந்தரா அவர்களிடம் திரும்பினாள்.

''சார்..! என்னோட கணவர் துரைபாண்டியன் உயிரோடுதான் இருக்கார். ஏதோ ஒரு வெளிநாட்டில் இருந்துகிட்டு மாதம் ஒரு தடவையாவது என்னோடு பேசிடறார்.''

மல்லய்யா கேட்டார்.

''அவர் காணாமே போனதா ரிப்போர்ட் கொடுத்தது நீங்கதானே...?''

''ஆமா...''

''அவர் உயிரோடு இருக்கிறதாய் இப்ப சொல்றீங்க. ஏன் முன்னாடியே போலீசில் சொல்லலை?''

''அது வந்து... என்னோட கணவர் அவர் உயிரோடு இருக்கிறது வெளியே யார்க்கும் தெரிய வேண்டாம்ன்னு சொல்லிட்டார்.''

''காரணம் என்ன...?''

''நான் காரணத்தைக் கேட்டப்ப அவர் சொல்லலை. 'சில வருஷங்கள் நான் அஞ்ஞாத வாசம் பண்ண வேண்டியிருக்கு'ன்னு மாத்திரம் சொன்னார்.''

''இந்த அஞ்சு வருஷத்துல அவர் எப்பவாவது வந்து உங்களைப் பார்த்து இருக்காரா...?''

''இல்லை...!''

''அவர் நேர்ல வராதபோது உங்களோடு மாசத்துக்கு ஒரு தடவை போன்ல பேசறவர் உங்க கணவராய்த்தான் இருக்கும்ன்னு எப்படி நம்பறீங்க...?''

''என்னங்க இது...! அவரோட குரல் எனக்குத் தெரியாதா...?''

''ஏன்... யாராவது 'மிமிக்ரி' மூலம் உங்க கணவர் மாதிரியே பேசியிருக்க முடியாதா?''



''சார்...! ஒரு விதண்டாவாதத்துக்கு நீங்க இப்படி பேசலாம். பட், ஒரு மனைவிக்கு கணவரோட குரல் தெரியாமே போயிடுமா...?''

''அவர் எந்த வெளிநாட்டில் இருக்கார்ன்னு தெரியுமா?''

''தெரியாது. செல் நெம்பரையும் அடிக்கடி மாத்திக்கிட்டு இருப்பார்.''

''சரி... கட்டபிரபா காட்டில் உள்ள குளத்தில் அவர் கார் எப்படி விழுந்தது?''

''அது பற்றி எனக்குத் தெரியாது. பட், என்னோட கணவர்கிட்ட 'நம்ம கார் எங்கே'ன்னு கேட்ட போது அவர் 'அது திருட்டு போயிருச்சி'ன்னு சொன்னார். யாரோ திருடிட்டு போனவங்கதான் அந்தக் காரை தேவையான அளவுக்கு உபயோகப் படுத்தி அப்புறம் கட்டபிரபா காட்டுப் பகுதிக்கு கொண்டு போய் அந்த யானை விழுங்கி குளத்துல தள்ளி டிஸ்போஸ் பண்ணியிருக்கணும்.''

''கார்க்குள்ளே ரெண்டு எலும்புக் கூடுகள் இருந்து இருக்கு. ஒரு எலும்புக் கூடு ஒரு இளம் பெண்ணுக்குரியது. இன்னொன்று-

நடுத்தர ஆண் ஒருத்தர்க்கு சொந்தமானது. அந்த ஆண் யார்?''

''தெரியாது...! பட்... நிச்சயமா அது என்னோட கணவர் இல்லை...''

''இதோ பாருங்க சௌந்தரா... நீங்க பேசறது எதுவுமே தெளிவாயில்லை... உங்க கணவர் உயிரோடு இருக்கிறதாய் நீங்க நினைக்கறீங்க... அப்படி அவர் உயிரோடு இருந்திருந்தா இந்த அஞ்சு வருஷ காலத்தில் ஒரு தடவையாவது அவர் உங்களைப் பார்க்க வந்து இருப்பார். ஏன் வரலை...?''

''அவர் உயிரோடு இருக்கிறது வெளியே தெரிஞ்சா புல பிரச்னைகள் வரும்ன்னு சொன்னார்.''

''அப்படி என்ன பிரச்னைகள்?''

''அதுபற்றி எனக்குத் தெரியாது. என்னோட கணவர் பேசற பேச்சும் சரி; செய்யற செயலும் சரி எப்பவுமே சரியாத்தான் இருக்கும்...''

''சரி...! உங்க கணவர் துரைபாண்டியன் கடைசியாய் எப்ப உங்ககிட்டே பேசினார்...?''

''இருபது நாளைக்கு முன்னாடி...''

''என்ன பேசினார்?''

''வழக்கம்போல 'தைரியமாய் இரு சௌந்தரா... இந்த அஞ்ஞாதவாசம் கொஞ்ச நாளைக்குத்தான். பிரச்னைகள் எல்லாம் ஒரு முடிவுக்கு வரும் போது நான் உன் முன்னாடி இருப்பேன்'னு சொன்னார்.''

''அப்படின்னா இறந்தது உங்க கணவர் இல்லை?''

''இல்லை... இல்லை... இல்லை...!''

''ஓ.கே...! இனிமே உங்களை விசாரிக்கிறதுல எந்த பிரயோஜனமும் இல்லை. சொன்னதையே சொல்லிட்டுத்தான் இருக்கப் போறீங்க...'' என்று சொன்ன கங்கோத்ரி மல்லய்யாவை ஏறிட்டார்.

''தொட்ட ஹள்ளி கிராமத்துக்குப் போய் அந்த நாகப்பாவைப் பார்த்தீங்களா மிஸ்டர் மல்லய்யா...?''

''அந்த கிராமத்துக்குப் போய் விசாரிச்சோம் ஸார். இப்ப நாகப்பா அந்த கிராமத்துல இல்லை. பெங்களூர் போயிட்டதா உள்ளூர் போஸ்ட்மேன் சொன்னார்.''

''அட்ரஸ் கேட்டீங்களா?''

''கேட்டோம். தெரியலைன்னு சொல்லிட்டார்.''

''நாகப்பா எப்போ பெங்களூர் போனான்?''

''ரெண்டு வருஷத்துக்கு முந்தி...''

''பெங்களூர்க்கு போயிட்ட அவனை அவ்வளவு பெரிய சிட்டியில் எப்படி கண்டுபிடிக்கப் போறீங்க...?''

''ஒரு ஏற்பாடு பண்ணிட்டு வந்து இருக்கோம் ஸார்.''

''என்ன ஏற்பாடு...?''

''நாகப்பா கல்யாணமானவன். ரெண்டு குழந்தைகளும் உண்டு. ஒரு குடும்பம்ன்னு ஆயிட்ட பிறகு அவனுக்கு எப்படியும் ஒரு ரேஷன் கார்டு இருக்கும். நாகப்பா தொட்டஹள்ளி



கிராமத்தை விட்டு பெங்களூர்க்கு குடிபோகும் போது சேஞ்ச் ஆஃப் அட்ரஸ் கொடுத்து ரேஷன் கார்டை கண்டிப்பாய் மாற்றி இருப்பான். அதனால ரேஷன்கார்டு விநியோக மண்டலத்தில் நாகப்பா எழுதிக் கொடுத்த அப்ளிகேஷனில் சேஞ்ச் ஆஃப் அட்ரஸ் இருக்கான்னு பார்க்கச் சொல்லியிருக்கோம்.''

''குட் மூவ்! பலன் கிடைக்குமா...?''

''நாகப்பா தன்னோட ரேஷன் கார்டை பெங்களூர் அட்ரஸுக்கு மாத்தியிருந்தா கண்டிப்பா நம்மகிட்டே மாட்டிக்குவான் ஸார்!''

மல்லய்யா சொல்லிக் கொண்டிருக்கும் போதே மேஜை மேல் இருந்த இண்டர்காம் கூப்பிட்டது. கங்கோத்ரி எடுத்து ''எஸ்'' என்றார். உதவியாளர் பேசினார்.

''ஸார்...! கார்க்குள் கிடைத்த எலும்புக்கூடுகளை போஸ்ட்மார்ட்டம் செய்த டாக்டர்களில் ஒருவரான டாக்டர் குருபிரசாத் உங்களைப் பார்க்க வந்துள்ளார்.''

''அனுப்பு...!''

''ஸார்! உங்களிடம் பர்சனலாக அவர் பேச வேண்டும் என்று சொன்னார்...!''

''அனுப்பு... நான் பேசிக் கொள்கிறேன்...!'' கங்கோத்ரி ரிசீவரை வைத்து விட்டு சௌந்தராவை ஏறிட்டார்.

''ஓ.கே... மேடம்...' நீங்க இந்த ஹுப்ளியில் இன்னமும் ஒருவார காலத்துக்காவது தங்கியிருக்க வேண்டும். உங்க கணவர் துரைபாண்டியன் உயிரோடுதான் இருக்கார்ன்னு சொல்றீங்க. நீங்க அதை ப்ரூஃப் பண்ணாத வரைக்கும் நாங்க அதை நம்ப முடியாது. இப்ப நீங்க கிளம்பலாம். நாளைக்குக் காலையில் பத்து மணிக்கு மறுபடியும் என்னை வந்து பாருங்க...!''

சௌந்தரா எழுந்து கொண்டாள். ''என்னோட கணவர் உயிரோடு இருக்கிறதை நான் ப்ரூஃப் பண்றேன் சார். நான் எதுக்காகவும் யார்க்காகவும் பொய் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.''

முகம் சிவக்க கோபமாய் பேசிய சௌந்தரா இளம்பிப் போன பிறகு கங்கோத்ரி மல்லய்யாவிடம் திரும்பினார். ''கார்க்குள் இருந்த எலும்புக் கூடுகளை போஸ்ட்மாட்டம் செய்த டாக்டர்களில் ஒருத்தரான குருபிரசாத் என்கிட்டே ஏதோ பர்சனலா பேச வர்றார். நீங்களும் மிஸ்டர் மொய்லியும் பக்கத்து ரூம்ல வெயிட் பண்ணுங்க. குருபிரசாத்கிட்டே பேசிட்டு உங்களை நான் கூப்பிடறேன்...!''

இருவரும் தலைகளை ஆட்டிவிட்டு எழுந்து அறையைவிட்டு வெளியேற - அடுத்த நிமிஷத்தின் ஆரம்பத்தில் டாக்டர் குருபிரசாத் உள்ளே வந்தார். மாடிப்படிகள் ஏறி வந்ததில் வழுக்கைத்தலை வியர்த்து வியர்வைத்துளிகள் முத்து முத்தாய் நின்றன.

''ஹலோ டாக்டர்... ப்ளீஸ்... கம்...!''

''உங்களுடைய வேலை நேரத்தில் தொந்தரவு தர்றேனா?''

''நோ... நோ...! உங்களை மாதிரியான நபர்களைப் பார்க்கிறதுதான் என்னோட வேலையே! உட்காருங்க டாக்டர்.''

''தேங்க்யூ...!'' குருபிரசாத் நாற்காலியின் முனையில் உட்கார்ந்து தன்னுடைய இரண்டு கைகளையும் மேஜையின் மேல் ஊன்றிக் கொண்டார். ''இப்போ யாரும் வரமாட்டாங்களே...! ஒரு பத்து நிமிஷம் பேசலாமா...?''

''யாரும் வரமாட்டார்கள். தாராளமாய் பேசலாம்.''

குருபிரசாத் பத்து விநாடிகள் மௌனமாய் இருந்து விட்டு மெல்ல பேச்சை ஆரம்பித்தார்.

''அந்த ரெண்டு எலும்புக்கூடுகளின் போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டைப் பார்த்தீங்களா...?''

''ம்... பார்த்தேன்...! ஒரு எலும்புக்கூடு ஒரு இளம்பெண்ணாக இருக்கலாம். இன்னொன்று நடுத்தர வயதைத் தாண்டிய ஒரு ஆணாக



இருக்கலாம்னு ரிப்போர்ட்ல மென்ஷன் பண்ணியிருந்தீங்க...''

''மரணம் எப்படி? துப்பாக்கியா... கத்தியா... விஷமா அல்லது வேறு ஏதாவது முறையா...? என்ற கேள்விக்கு நேராய் என்ன பதில் போடப்பட்டிருக்குன்னு பார்த்தீங்களா...?''

''பார்த்தேன்...! UN KNOWN ன்னு போட்டிருக்கு.''

''அதாவது... தெரியலை...?''

''எஸ்...!''

''சம்பவம் நடந்து ஐந்து வருடங்களாகி விட்டதாலும், வெறும் எலும்புகள் மட்டும் கிடைத்ததாலும் மரணம் எப்படி ஏற்பட்டு இருக்கும் என்கிற கேள்விக்கு கண்டுபிடிக்க முடியவில்லைன்னு ரிப்போர்ட்ல மென்ஷன் பண்ணியிருக்காங்க... இல்லையா...?''

''ஆமாம்...!''

''என்னைப் பொறுத்தவரைக்கும் அது பொய் சார்...!''

''என்னது பொய்யா...?''

''எஸ்...! போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டோடு எலும்புக்கூடுகளின் போட்டோக்களையும் இணைச்சிருந்தோம். அந்தப் போட்டோக்களை ஒரு நிமிஷம் எடுக்கறீங்களா...''

கங்கோத்ரி குழப்பமாய் மேஜையின் இழுப்பறையைத் திறந்து அந்த ப்ரௌன் நிறக் கவரை எடுத்து போட்டோக்களையும் ரிப்போர்ட்டையும் எடுத்தார். குருபிரசாத் அவைகளை வாங்கி பரபரவென்று பிரித்துப் பார்த்து அதில் இரண்டு போட்டோக்களை உருவி மேஜையின் மேல் வைத்தார்.

இரண்டுமே மண்டையோட்டு போட்டோக்கள்.

''கார்க்குள் இருந்த இரண்டு மண்டையோடுகளின் போட்டோக்கள் இது. இதை கொஞ்சம் உற்றுப் பாருங்க...'' குருபிரசாத் சொல்ல கங்கோத்ரி அந்த போட்டோக்களை கையில் எடுத்துக் கொண்டு உற்றுப் பார்த்தார்.

''இந்த போட்டோக்களில் ஏதாவது உங்களுக்கு

வித்தியாசமாய் இருக்கிற மாதிரி தெரியுதா...?''

கங்கோத்ரி உதட்டைப் பிதுக்கினார்.

''தெரியலையே...?''

''கொஞ்சம் கண்டுபிடிக்கிறது கஷ்டம்...! நானே சொல்லிடறேன். ரெண்டு மண்டையோடுகளின் உச்சியில் பட்டாணி சைஸ் அளவுக்கு இரண்டு கரும்புள்ளிகள் தெரியுதே... பார்க்க முடியுதா...?''

''எஸ்... ஐ கேன் ஸி...!''

''அது என்னவாக இருக்கும்னு நினைக்கறீங்க...?''

''சாரி... டாக்டர்... என்னால் கெஸ் பண்ண முடியலை!''

''நான் சொல்லட்டுமா?''

''சொல்லுங்க டாக்டர்...''

''கொலை செய்யப்பட்ட ரெண்டு பேர் தலையிலேயும் ஆறு அங்குல ஆணியை அடிச்சு இறக்கியிருக்காங்க...''

**10**

அமெரிக்கா - இந்தியா அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ள முக்கியமான - சட்டதிட்டங்கள் இதோ:

1.அணு ஆயுத பரவல் தடை சட்டத்தை இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் கடுமையாகவும் முழுமையாகவும் கடைப்பிடிக்க வேண்டும்.

2. இந்தியாவின் அணுசக்தி குறித்த ரகசியங்கள், ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டங்கள், ஒழுங்கு நெறிமுறைகள், ஆஸ்திரேலியாவோடு இணைந்து செயல்படுவது பற்றிய விஷயங்களில் தனது முடிவுகள் போன்றவற்றை இந்தியா பகிரங்கமாய் அறிவிக்க வேண்டும். எந்த ஒரு விஷயத்திலும் ஒளிவு மறைவு இருக்கக் கூடாது.



மாத்ருபூதம் பங்களா.

போர்டிகோவில் போலீஸ் ஜீப் நின்றிருக்க, ஹாலில் டெப்டி கமிஷனர் ரவிகுமார் மாத்ருபூதத்துக்கு முன்பாய் சோபாவில் உட்கார்ந்திருந்தார். டீபாயின் மேல் அந்த நான்காவது குரங்கு பொம்மை.

''மிஸ்டர் மாத்ருபூதம்...! நீங்க எதுக்கும் கவலைப்பட வேண்டாம். யாரோ உங்களை பயமுறுத்துறதுக்காக இப்படியொரு பொம்மையை அனுப்பியிருக்காங்க...! அவங்க யார்ங்கிறதை இன்னும் 24 மணி நேரத்துக்குள்ளே நாங்க கண்டுபிடிச்சுடுவோம்...''

மாத்ருபூதம் சிரித்தார்.

''டி.ஸி. சார்! உங்களுக்கு அந்த சிரமம் எல்லாம் வேண்டாம். என்னி பனிரெண்டு மணி நேரத்துல அந்த ஜம்புநாதன் யார்ங்கிறதை நான் கண்டுபிடிக்கிறேன். பாம்போட கால் பாம்புக்குத்தான் தெரியும்.''

''அந்த ஜம்புநாதன் பேரும் அட்ரஸும் போகஸ். அப்படியொரு அட்ரஸ் இல்லைன்னு கூரியர் சர்வீஸ்லே சொல்லிட்டாங்க. நீங்க இந்த விஷயத்துல அலட்சியமாய் இருக்கக் கூடாது மிஸ்டர் மாத்ருபூதம்.! இந்த நான்காவது குரங்கு பொம்மை கொஞ்சம் விபரீதமானது...''

''விபரீதமானதா...?''

''ம்...''

''எப்படி சொல்றீங்க...?''

''ஹாப்ளிக்குப் பக்கத்தில் இருக்கிற கட்டபிரபா ஃபாரஸ்ட் பகுதியில் ஐந்து வருஷங்களுக்கு முன்னாடி அந்தக் காட்டுப் பகுதியில் இருந்த குளத்துக்குள்ளே ஒரு கார் விழுந்ததை போன வாரம்தான் ஃபாரஸ்ட் ரேஞ்சர்ஸ் கண்டுபிடிச்சாங்க. காரை வெளியே எடுத்துப் பார்த்த போது கார்க்குள்ளே ரெண்டு எலும்புக்கூடுகள். ஒரு எலும்புக்கூடு இளம் பெண்ணோடது. ரெண்டாவது எலும்புக்கூடு ஒரு நடுத்தர வயது நபருடையது

என்கிற உண்மைகள் பி.எம்.ரிப்போர்ட் மூலமா கிடைச்சிருக்கு. குளத்திலிருந்து வெளியே எடுத்த காரை மேலும் சோதனை போட்டதில் அந்த கார்க்குள்ளே பித்தளை உலோகத்தாலான நான்காவது குரங்கு பொம்மையும் இருந்தது.''

மாத்ருபூதம் சட்டென்று முகம் மாறி வாய் உலர்ந்து போய் நெற்றியில் வியர்த்தார்.

''டி.சி... ஸார்! எ... என்ன சொன்னீங்க? ரெண்டு எலும்புக்கூடுகளுக்குப் பக்கத்தில் நான்காவது குரங்கு பொம்மை இருந்ததா?''

''ம்...!'' என்று தலையாட்டிய டி.சி.ரவிகுமார், குரலைத் தாழ்த்திக் கொண்டார். ''ஹூப்ளியில் கண்டுபிடிச்ச அந்த நான்காவது குரங்கு மேட்டரை கர்நாடகா போலீஸூம் சரி; தமிழ்நாடு போலீஸூம் சரி; இதுவரைக்கும் வெளியே சொல்லலை. அந்த குரங்கு பொம்மைகளை செய்தது யார்ன்னு கண்டுபிடிக்கிற முயற்சியில் ஹூப்ளி அஸிஸ்டெண்ட் போலீஸ் கமிஷனர் கங்கோத்ரியும், இன்ஸ்பெக்டர் மல்லையய்யாவும் மும்முரமா ஈடுபட்டிருக்காங்க...! அப்படி அவங்க ஒரு முயற்சியில் ஈடுபட்டிருக்கிற இந்த நிலைமையில்தான் உங்களுக்கு இந்த நான்கு குரங்கு பொம்மைகளையும் ஜம்புநாதன் என்கிற பெயரில் கூரியர் தபாலில் யாரோ அனுப்பிச்சிருக்காங்க. ஜம்பு என்கிற பெயர் பொதுவாய் ஆஞ்சநேயரைத்தான் குறிக்கும். அதே மாதிரி அட்ரஸில் இருக்கிற 'மாருதி' என்கிற வார்த்தையும் ஆஞ்சநேயரைத்தான் குறிக்கும். 108 என்கிற எண் கூட ஆஞ்சநேயருக்கு சாத்தற வடைமாலையை ஞாபகப்படுத்துது.''

மாத்ருபூதம் இப்போது வியர்வை மழையில் நனைந்து குரல் குழறிக் கொண்டே ரவிகுமாரைக் கேட்டார்.

''அந்த எலும்புக்கூடுகள் யாரோடது டி.சி. சார்?''

''யாரோடதுன்னு தெரியலை. பட், அந்தக் கார் சென்னையைச் சேர்ந்த துரைபாண்டியன் என்கிற



தொழிலதிபரோடது! உங்களுக்கு துரைபாண்டியன் தெரியுமா?''

''தெரியாது...''

''பேரையாவது கேள்விப்பட்டு இருக்கீங்களா?''

''இல்ல சார்...! அந்த துரைபாண்டியன் எந்த ஏரியா...?''

''அடையார்...''

''எனக்குத் தெரியலை...! கார்க்குள்ளே இறந்து எலும்புக்கூடாய் மாறியிருந்தது அவர்தானா...?''

''போலீசுக்கு அந்த சந்தேகம் இருக்கு. காரணம் துரைபாண்டியனை அஞ்சு வருஷமாய் யாரும் பார்க்கலை. பட் அவரோட ஒய்ஃப் சௌந்தரா 'அந்த எலும்புக்கூடு என் கணவரோடதாய் இருக்க முடியாது. அவர் உயிரோடுதான் இருக்கார். மாசத்துக்கு ஒருதடவை என்னோடு பேசிட்டுத்தான் இருக்கார்'ன்னு ஆணித்தரமாய் சொல்றாங்க. போலீஸார்க்கு இப்போ எதை நம்பறதுன்னு தெரியலை. இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் உங்களுக்கு கூரியர் தபாலில் இந்த குரங்கு பொம்மைகள் வந்திருக்கு. இப்ப சொல்லுங்க மிஸ்டர் மாத்ருபூதம். இது விபரீதமா... இல்லையா...?''

மாத்ருபூதம் கலக்கத்தோடு தன் முக வியர்வையை வழித்துக் கொண்டார். ''கொஞ்சம் விவகாரமாத்தான் இருக்கு...''

''கொஞ்சமில்லை... நிறையவே...! அது ஒருவகையான அச்சுறுத்தல்... ஐ... மீன்... கொலை மிரட்டல்.''

மாத்ருபூதம் எழுந்தார். டி.சி. கேட்டார்.

''என்ன எந்திரிச்சுட்டீங்க மாத்ருபூதம்?''

''அடி வயித்தைக் கலக்குது. இருங்க... டாய்லெட்டுக்குப் போயிட்டு வந்துடறேன்.'' - மாத்ருபூதம் டாய்லெட்டை நோக்கிப் போக, டி.சி.யின் செல்போன் அழைத்தது. எடுத்து காதுக்கு வைத்தார்.

''எஸ்...!''

''சார்... நான் இன்ஸ்பெக்டர் அன்வர்.''

''சொல்லுங்கள் அன்வர்...''

''சார்...! பெரம்பூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு நீங்க புறப்பட்டு வர முடியுமா?''

''எனிதிங்க் இம்பார்ட்டன்ட்...?''

''எஸ்... சார்...''

''என்ன...?''

இன்ஸ்பெக்டர் அன்வர் மறுமுனையில் விபரம் சொல்ல - சோபாவில் அலட்சியமாய் சாய்ந்திருந்த ரவிகுமாரின் உடல் தன்னிச்சையாய் எழுந்து நின்றது. முகம் வெளிறிப் போனது.

''ஈஸிட்...? இப்பவே புறப்பட்டு வர்றேன்.!''

## 11

அணு ஆயுத ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டால் அமெரிக்க சட்டப்படி இந்தியாவுக்கு அணு மூலப் பொருட்கள், தொழில்நுட்பம் போன்றவற்றை வழங்குவது நிறுத்தப்படும் பட்சத்தில் மற்ற நாடுகள் இந்தியாவுக்குத் தொடர்ந்து அணு மூலப் பொருட்களை ஏற்றுமதி செய்ய அமெரிக்கா உதவி செய்யவோ அல்லது ஊக்கப்படுத்தும் முயற்சியிலோ ஈடுபடாது. தெற்காசியாவில் அணு ஆயுதங்கள் அதிகரிப்பதை நிறுத்தவும் அல்லது ஆயுத உற்பத்தியை தடை செய்யவும் அமெரிக்கா வலியுறுத்தும். அதேபோல் பாதுகாப்பு இல்லாத வசதிகளின் கீழ் அணுப் பொருட்கள் உற்பத்தியை அதிகரிக்கக் கூடாது என்று அமெரிக்கா இந்தியாவை கேட்டுக் கொள்ளும்.

கங்கோத்ரி அதிர்ச்சியோடு நிமிர்ந்து உட்கார்ந்தார். குருபிரசாத்தை சிறிது பயத்தோடு பார்த்தார். ''டாக்டர்! நீங்க என்ன சொல்றீங்க...? தலையில் ஆறு அங்குல நீள ஆணியை அடிச்சு



இறக்கியிருக்காங்களா?''

''எஸ்...!''

''பிறகு ஏன் அதை போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டில் சொல்லலை?''

டாக்டர் குருபிரசாத் குரலைத் தாழ்த்தினார். மெல்லிய குரலில் சொன்னார். ''எ.சி... சார்...! கார்க்குள் கிடந்த அந்த இரண்டு மண்டையோடுகளையும், மற்ற எலும்புகளையும் நாங்கள் மூன்று பேர் அடங்கிய டாக்டர் குழு ஒன்று போஸ்ட் மார்ட்டம் செய்த போது எனக்கு ஒரு போன் கால் வந்தது. போனில் பேசிய ஒரு நபர் என்னை மிரட்டினான். 'போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் நான் சொல்ற மாதிரித்தான் இருக்கணும். ஒரு எலும்புக்கூடு இளம்பெண்ணோடதுன்னும் இன்னொரு எலும்புக்கூடு நடுத்தர வயது நபரோடதுன்னும் எழுதணும். இதைத் தவிர வேற எதுவும் ரிப்போர்ட்ல இருக்கக் கூடாது. இருந்தால் டாக்டர்களாகிய உங்க மூணு பேர் உடம்பிலும் உயிர் இருக்காது.' இப்படி ஒரு மிரட்டல் எனக்கு வந்ததை மற்ற ரெண்டு டாக்டர்கள்கிட்டே சொன்னதும் அவங்க பயந்து போயிட்டாங்க. போன்ல மிரட்டினவன் எப்படி சொன்னானோ அப்படியே போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்ல எழுதிட்டு போயிடலாம்னு அவங்க சொல்லவே நானும் அப்படியே எழுதிட்டேன். அதுக்கப்புறம் எனக்கு மனசு கேட்கலை. நேத்து ராத்திரி முழுவதும் என்னால தூங்க முடியலை. எனக்குள்ளே இருந்த குற்ற உணர்ச்சி என்னோட மனசாட்சியை அரிச்சுக்கிட்டே இருந்தது. கொலையாளிகள் யாராயிருந்தாலும் சரி; அவங்க தப்பி விடக் கூடாதுங்கிற எண்ணத்துல உங்ககிட்ட இப்போ உண்மையைச் சொல்லிட்டிருக்கேன்.''

''தேங்க்யூ டாக்டர்...! உங்களுடைய தைரியத்துக்கு என்னோட பாராட்டுக்கள். பை... த... பை... அந்த இரண்டு எலும்புக்கூடுகள் சம்பந்தப்பட்ட உண்மையான போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்தான் என்ன?''

''அந்த இரண்டுமே இரண்டு ஆண்களோட எலும்புக்கூடுகள்தான். பெல்விக் போன் குறுகலாய் இருக்கிறதால அது பெண்ணாய் இருக்க முடியாது. எலும்புகளை ஆஸ்டியோ டெஸ்ட்டுக்கு உட்படுத்திப் பார்த்ததில் ஒருவர்க்கு ஐம்பது வயதிலிருந்து ஐம்பத்தி ஐந்து வயதுக்குள்ளும், இன்னொருவர்க்கு நாற்பது வயதும் இருக்கலாம். காரை சேற்றுக் குளத்தில் தள்ளுவதற்கு முன்பு தலையில் ஆணியை அடித்து கொடூரமான முறையில் கொலை செய்திருக்க வேண்டும்.''

''டாக்டர்! உங்களை டெலிபோனில் மிரட்டிய நபரின் குரல் எப்படியிருந்தது... எனி பெக்குலியார்ட்டி?''

''நோ... நார்மல் வாய்ஸ்...'' டாக்டர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே கங்கோத்ரியின் உதவியாளர் உள்ளே பதட்டத்தோடு நுழைந்தார்.

''ச... சார்...!''

''என்ன...?''

''கொஞ்ச நேரத்துக்கு முந்தி இங்கே வந்து உங்களைப் பார்த்து பேசிட்டுப் போன... அந்த சௌந்தராவை...''

''சௌந்தராவை...?'' திகைத்துப் போய் நிமிர்ந்தார் கங்கோத்ரி. ''கார்ல போகும் போது யாரோ... சுட்டுட்டாங்க... ஸார்...''

''மை குட்னஸ்...'' கங்கோத்ரியின் நாற்காலி அதிர்ச்சியோடு பின்னுக்கு இழுபட்டது.

**12**

இந்தியாவில் 14 சிவில் அணு உலைகள் உள்ளன. அமெரிக்காவோடு நாம் அணு ஆயுத ஒப்பந்தம் செய்து கொண்டால் அந்த 14 சிவில் அணு உலைகளும் சர்வதேச ஆய்வுக்கு உட்படுத்தப்படும். அதே நேரத்தில் ராணுவத்தின் வசம் உள்ள அணு உலைகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட மாட்டாது.



பெரம்பூர் ரயில்வே ஸ்டேஷன் பதட்டத்தோடு காணப்பட்டது.

டெப்டி கமிஷனர் ரவிகுமார் ஜீப்பை விட்டு இறங்கி ஸ்டேஷன் படிகளில் ஏற - இன்ஸ்பெக்டர் அன்வர் எதிர்கொண்டார்.

''சார்...!''

ரவிகுமார் நடந்துகொண்டே அன்வரிடம் கேட்டார். ''எந்த ட்ரெயின்?''

''பொகாரோ ஸ்டீல் சிட்டி எக்ஸ்பிரஸ் சார்.''

''எந்த பிளாட்ஃபாரம்?''

''ரெண்டாவது ஸார்...!''

''மொதல்ல பார்த்தது யாரு...?''

''ஒரு சக பயணி சார்...''

''போகியை செபரேட் பண்ணிட்டீங்களா?''

''பண்ணிட்டோம் ஸார்...''

''டாக் ட்ரெய்னர் ஜார்ஜ்க்கு தகவல் கொடுத்திட்டீங்களா?''

''ஹி ஈஸ் ஆன் த வே ஸார்...''

''ஆள் யாரு...?''

''தெரியலை ஸார்... கல்லால் அடிச்சு முகத்தை சிதைச்சிருக்காங்க...!''

''பாடி என்ன ஸ்டேஜ்...?''

''லேசா டீ கம்போஸிங்...! ஸ்பாட் போஸ்ட்மார்ட்டம் பண்ணிடறது பெட்டர்ன்னு டாக்டர்க்கு போன் பண்ணிட்டேன். ஹி ஈஸ் ஆல்ஸோ ஆன் த வே...'' இன்ஸ்பெக்டர் அன்வர் சொல்லிக் கொண்டே ஸ்டேஷனின் இரண்டாவது பிளாட்பாரத்துக்கு வந்தார். தனியாய் கழட்டி விடப்பட்டு இருந்த போகிக்குள் நுழைந்தார். உள்ளே இருந்த கான்ஸ்டபிள்கள் வழிவிட்டு நின்றார்கள்.

டி.சி. ரவிகுமார் அன்வரைப் பின்தொடர போகியின் மையத்தில் அந்தப் பெரிய சூட்கேஸ் வைக்கப்பட்டு இருந்தது. சுற்றிலும் ஈக்கள் பறந்து கொண்டிருக்க, அருகே இருந்த கான்ஸ்டபிளுக்கு அன்வர் கண்ணைக் காட்ட, அவர் அந்த

சூட்கேஸைத் திறந்தார்.

உள்ளே-

கைகளும் கால்களும் கட்டப்பட்ட நிலையில் ஒரு ஆணின் உடல் மடித்து வைக்கப்பட்டு இருந்தது. தலையிலும் முகத்திலும் உறைந்து போன ரத்தம். ஒரு பக்க முகம் நசுங்கியிருந்தது.

''அன்வர்...!''

''ஸார்...!''

''பாடியை வெளியே எடுத்து கிடத்தச் சொல்லுங்க...''

இரண்டு கான்ஸ்டபிள்கள் கைகளுக்கு கர்ச்சீப் சுற்றிக் கொண்டு பாடியை சூட்கேஸினின்றும் வெளியே எடுத்து கிடத்த சூட்கேஸின் உள்ளே ஒரு பிளாஸ்டிக் பை சுருட்டி வைக்கப்பட்டு இருந்தது.

ரவிகுமார் அந்த வெளியே எடுத்து பிரித்தார். பிரிக்க பிரிக்கவே ரவிகுமார்க்கு புரிந்து போயிற்று.

உள்ளே - நான்கு குரங்கு பொம்மைகள்.

ரவிகுமார் அந்தப் பார்த்து திகைத்து திணறிக் கொண்டு இருக்கும் போதே அன்வர் குரல் கொடுத்தார்.

''ஸார்...! டாக்டர் வந்துட்டார். ஸ்பாட் பி.எம். பண்ணிடலாமா...?''

ஃபாரன்சிக் டாக்டர் விஜயராகவன் ஒரு தோல்பையைச் சுமந்து கொண்டு உள்ளே வர-ரவிகுமார் தலையசைத்தார்.

''லெட் ஹிம் டு ஹிஸ் ஒர்க்...''

டாக்டர் விஜயராகவன் தான் கொண்டு வந்திருந்த பையைப் பிரித்து தேவையான உபகரணங்களை எடுத்துக் கொண்டு ஸ்பாட் பி.எம்.மை ஆரம்பித்தார்.

இரண்டே நிமிடங்கள்!

திகில் படர்ந்த விழிகளோடு டி.சி. ரவிகுமாரை ஏறிட்டார். ''ஸார்... இட் ஈஸ் வெரிக்ருயல் அண்ட் ப்ருடல் மர்டர்...''

''எப்படி...?''

''தலையில் ஆணியை அடிச்சு தொண்டை வரை இறக்கியிருக்காங்க. அதுக்கப்புறம் முகத்தைக் கல்லால் அடிச்சு சேதப்படுத்தியிருக்காங்க.''



ரவிகுமாரின் இருதயச் சுவர்கள் அதிர்ந்தன.

## 13

அமெரிக்காவுடனான நம் அணுசக்தி ஒப்பந்தம் பற்றி எதிர்க்கட்சிகள் பல்வேறு சந்தேகங்களைக் கிளப்பினாலும் அதில் நன்மைகளும் இல்லாமல் இல்லை. அணுசக்தி விஷயத்தில் நம்மிடம் எவ்வளவு தொழில் நுட்பங்கள் இருந்தாலும் அமெரிக்காவோடு அதை ஒப்பிடும்போது சற்று குறைவுதான். எனவே அமெரிக்காவோடு நாம் ஒப்பந்தம் வைத்துக் கொண்டால் அமெரிக்கா இந்தியாவுக்கு அணு பொருட்கள், அணு உலைகள் மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்கும். இரண்டாவதாக இந்தியாவின் எரிசக்தி பூர்த்தியடையும். இந்தியாவில் வேலைவாய்ப்புகள் பெருகி பொருளாதாரம் வளர்ச்சி காணும்.

ஹாப்னியின் போக்குவரத்து மிக்க பிராட்வே ரோட்டில் போலீஸ் ஜீப் தலைதெறிக்கிற வேகத்தில் போய் அதன் கோடியில் இருந்த ஜி.ஹெச்சுக்குள் நுழைந்து பார்க்கிங்கில் நின்றது.

அஸிஸ்டண்ட் கமிஷனர் கங்கோத்ரி ஜீப்பினின்றும் இறங்கி நெற்றியில் துளிர்த்து இருந்த வியர்வையை ஒற்றிக் கொண்டே ஹாஸ்பிடலுக்குள் நுழைந்தார். இன்ஸ்பெக்டர் மல்லய்யா எதிர்பட்டார்.

''மல்லய்யா! ஹௌ ஈஸ் ஷி...?''

''சௌந்தராவுக்கு இன்னமும் உடம்பில் உயிர் இருக்கு ஸார். டாக்டர்கள் உள்ளே கொண்டு போயிருக்காங்க...''

''சம்பவம் எப்படி... யார் சுட்டது...?''

''ஸார்...! சௌந்தரா கமிஷனர் ஆபீஸை விட்டு

வாடகைக் காரில் கிளம்பி தான் தங்கியிருந்த ஹோட்டலை நோக்கிப் போய்க்கிட்டு இருந்த போது வழியில் இளநீர் சாப்பிட ஒரு மரத்துக்குக் கீழே காரை நிறுத்தியிருக்காங்க. அந்த சமயத்துலதான் அவங்க சுடப்பட்டு இருக்காங்க. தோட்டாக்கள் எந்த திசையிலிருந்து எப்படி வந்ததுன்னு சம்பவத்தைப் பார்த்த யார்க்கும் தெரியலை. சைலன்ஸர் வெச்ச பிஸ்டலால் சுட்டிருக்காங்க. சத்தம் துளியும் கேட்கலை. ரத்த வெள்ளத்துல அவங்க சாயும் போதுதான் பக்கத்தில் இருக்கிறவங்களுக்குத் தெரிஞ்சு இருக்கு.''

கங்கோத்ரி அனலாய் பெருமூச்சு விட்டார்.

''துரைபாண்டியன் விவகாரமே இன்னமும் குழப்பமாய் இருக்கும் போது சௌந்தரா சுடப்பட்டு இருக்கிறது குழப்பத்தை இன்னமும் அதிகமாக்கும். சௌந்தரா உயிர் பிழைக்க வாய்ப்பு இருக்கா...?''

''டாக்டர்கிட்டே கேட்டேன் ஸார்...! அவர் எந்த பதிலையும் சொல்லாமே ஐ.ஸி.யூக்குள்ளே போயிட்டார்.''

''சௌந்தரா உயிர் பிழைக்கணும்... கண்டிப்பாய் உயிர் பிழைக்கணும். இங்கே டாக்டர் சீஃப் யாரு...?''

''பிரதாப்சந்த்...!''

''அவரைப் பார்த்துடலாம் வாங்க...!''

சீஃப் டாக்டர் அறையை நோக்கிப் போனார்கள்.

வராந்தாவில் வேக நடை.

சீஃப் டாக்டர் பிரதாப்சந்தின் அறை வந்தது. நோயாளியின் உறவினர் ஒருவரோடு பேசிக் கொண்டிருந்த பிரதாப்சந்த், கங்கோத்ரியைப் பார்த்துப் பக்கத்தில் வந்தார்.

''அந்தப் பெண் சுடப்பட்ட விவகாரம்தானே?''

''எஸ்... டாக்டர்... ஹௌ ஈஸ் ஹர் கண்டிஷன்?''

''ஸீம்ஸ் டு பி க்ரிடிக்கல்... தலையில் ஒரு தோட்டாவும் மார்பில் ஒரு தோட்டாவும் ஆழப் புதைந்துள்ளது. அந்தத் தோட்டாக்களை



ஆப்ரேஷன் செய்து இப்போது அகற்றிக் கொண்டு இருக்கிறார்கள். தோட்டாக்களை அகற்றி போதுமான ரத்தத்தை செலுத்திய பிறகுதான் உயிர் பிழைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறதா இல்லையா என்று சொல்ல முடியும்...!''

''எவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டும்?''

''சுமார் ஒரு மணி நேரம்...''

காத்திருக்க ஆரம்பித்தார்கள்.

ஏதேதோ பேசியபடி நேரம் கரைந்து கொண்டிருக்க சரியாய் நாற்பத்தைந்து நிமிடம். ஐ.ஸி.யூனிட்டிலிருந்து இண்டர்காம் கூப்பிட்டது. டாக்டர் பிரதாப்சந்த் எடுத்து செவிமடுத்துவிட்டு முகம் மாறிப் போனவராய் எழுந்தார்.

''மிஸ்டர் கங்கோத்ரி... கம் வித் மீ...''

''எனிதிங் சீரியஸ்...?''

''எஸ்...! சௌந்தரா பிழைக்க வாய்ப்பு இல்லைன்னு டாக்டர்கள் நினைக்கிறாங்க. அவங்களுக்கு கான்ஷியஸ் இருக்கும் போதே நீங்க பேசி ஏதாவது தகவல் வரவழைக்க முடியுமான்னு பாருங்க... லெட் அஸ் கோ...!''

போனார்கள்.

இரண்டு நிமிட நடையில் ஐ.ஸி.யூனிட் வந்தது. எதிர்பட்ட உதவி டாக்டரிடம் பிரதாப்சந்த் கேட்டார்.

''பொஸிஷன்...?''

''க்ரிடிக்கல் டாக்டர்... தலையில் பாய்ந்த தோட்டா மூளையோட ஸெரிபெல்லம் போர்ஷன்னை சேதம் பண்ணியிருக்கு. அதேபோல் ஹார்ட்டில் பாய்ந்த தோட்டா ரெண்டு வால்வுகளை சிதைச்சிருக்கு... ப்ளட் லாஸ் ஹெவி...! வீ ஆர் ஹெல்ப்லஸ்... ஷி ஈஸ் கௌண்ட்டிங் ஹர் லாஸ்ட் மினிட்ஸ்...!''

''கான்ஷியஸ் இருக்கா...?''

''இருக்கு...''

''பேச முடியுமா...?''

''ஷி கேன் ஸ்பீக்... வித் சம் ட்ரபுள்...''

யூனிட்டுக்குள் நுழைந்தார்கள். சௌந்தரா

பச்சை நிற கவுனில் மல்லாந்து படுத்து மூச்சிரைத்துக் கொண்டிருந்தாள். மார்பு பத்து விநாடிக்கு ஒரு முறை தூக்கிப் போட்டது.

கங்கோத்ரியும் மல்லய்யாவும் அவளுக்குப் பக்கத்தில் போய் குனிந்தார்கள்.

''மிஸஸ் சௌந்தரா...!''

சௌந்தராவின் கண்ணின் பாவைகள் மெல்ல ஸ்லோமோஷனில் கங்கோத்ரியின் பக்கம் திரும்பியது. உதடுகள் சட்டென்று கோணி குழறியது. குரல் ஈனஸ்வரத்தோடு ''ச... சார்...'' என்று வெளிப்பட்டது. வலது கை மெல்ல உயர்ந்து கங்கோத்ரியின் மணிக்கட்டைப் பற்றிக் கொண்டது.

''நா... நான்... பொ... பொய்... சொ... சொ... சொல்லிட்டேன்.. எ... என்னை ம... ம... மன்னிச்சு...''

''பொய்யா...! என்ன பொய்...?''

''எ... எ... என்... க... க... கணவர்... உ.... உ... உயிரோடு இருக்கிறதாய் நா... நா... நான் சொ... சொன்னது பொய்...! அ... அ... அவரை... கொ... கொலை... பண்ணினது... நான்தான்...!''

''எ... என்ன... நீங்களா...?''

''ம்...''

''எதுக்காக அவரைக் கொலை பண்ணீங்க...? கார்ல... இன்னொரு எலும்புக்கூடு இருந்ததே... அது... யாரு...?''

''அ... அது... டிரைவர்... கா... கா.காளியப்பன்!''

''எதுக்காக கொலை...?''

''அது... அது... வந்து...'' சௌந்தராவுக்கு இப்போது மூச்சு பெரிதாய் வெளிப்பட்டது. கூடவே விக்கல்.

மல்லய்யா அவள் காதருகே கத்தினார்.

''உங்களை சுட்டது யாரு...?''

''அ... அ... அவன்...''

''அவன்னா... யாரு... பேர் சொல்லுங்க...''

''ரோ... ரோ... ரோ...'' சௌந்தராவின் நாக்கு



உள்ளே இழுத்துக் கொண்டது.

கங்கோத்ரி பதட்டப்பட்டார்.

''சொல்லுங்கம்மா... அவன் பேர் என்ன...?''

''ரோ... ரோ... ரோ...'' சௌந்தரா வேகமாய் பேச முயன்று சட்டென்று கண்கள் நிலைத்தாள். உடம்பின் துடிப்பு மெல்ல மெல்ல அடங்க ஆரம்பித்தது.

## 14

இந்தியாவில் எதிர்காலத்தில் அமைக்கப் படும் அனைத்து சிவில் அணுசக்தி உலைகளும் சர்வதேச பாதுகாப்பு விதிகளின் கட்டுப்பாட்டில் வந்துவிடும். இதன் மூலம் அடுத்த 10 அல்லது 15 ஆண்டுகளில் இந்தியாவில் உள்ள அணு உலைகளில் 90 சதவீதம் சர்வதேச பாதுகாப்பு நெறிமுறைகளில் வரும் என்று அமெரிக்க அரசியல் விவகாரங்களுக்கான வெளியுறவு இணை மந்திரி நிக்கோலஸ் பர்னங்ஸ் கூறியுள்ளார்.

ரவிகுமார் தனக்குள் நிகழ்ந்த அதிர்ச்சியை ஜீரணித்துக் கொண்டு டாக்டர் விஜயராகவனை ஏறிட்டார்.

''இந்த நபர் கொலை செய்யப்பட்டு எத்தனை மணி நேரம் ஆகியிருக்கலாம் டாக்டர்...?''

''கிட்டத்தட்ட இருபது மணி நேரம் ஆகியிருக்கலாம். பாடி உடனடியாய் மக்கிப்போல் ஆகிவிடக்கூடாது என்பதற்காக உடம்பில் பார்மலின் தெளித்து இருக்கிறார்கள்.''

''உடம்பில் வேறு ஏதாவது காயம்?''

''எதுவும் இல்லை...! தலையில் ஆணி அடித்ததாலேயே மரணம்...''

இன்ஸ்பெக்டர் அன்வர் பின்பக்கம் இருந்து குரல் கொடுத்தார். ''சார்! டாக்டர் ரெய்னர்

"வந்தாயிற்று. டாக்கை ஸ்மெல் பண்ண விட்டால் கொலையாளியைப் பற்றிய தடயம் ஏதாவது கிடைக்கலாம்.''

ரவிகுமார் தலையசைக்க, டாக்ட்ரெய்னர் ஜார்ஜ் நாய் சார்லியோடு கம்பார்ட்மெண்ட்டில் ஏறினார்.

''சார்லி! ஸ்மெல்... இட்...!''

சார்லி இரண்டே எட்டில் பாய்ந்து சூட்கேஸையும் டெட்பாடியையும் சுற்றிச் சுற்றி வந்து முகர்ந்துவிட்டு கம்பார்ட்மெண்ட் பூராவும் ஓடி பிளாட்பாரத்தில் குதித்தது.

ஓடியது.

ட்ரெய்னர் ஜார்ஜ் பின்னாலேயே ஓடினார். பிளாட்பாரத்தின் கோடி வரைக்கும் மூச்சிரைக்க ஓடிய சார்லி ஆண்களுக்கான டாய்லெட் பகுதியில் நுழைந்தது.

ஜார்ஜ~ம் நுழைந்தார்.

சின்னச் சின்ன தடுப்புகளோடு இருந்த அந்த டாய்லெட்டுக்குள் ஆட்கள் யாருமே இல்லை. ஒவ்வொரு தடுப்பாய் பார்த்துக் கொண்டு போன சார்லி கடைசித் தடுப்புக்கு போனதும் நின்று குரைத்தது.

ஜார்ஜ் அந்த தடுப்பை எட்டிப் பார்த்தார்.

உள்ளே யாரும் இல்லை.

சார்லி விடாமல் குரைத்தது.

'காரணம் இல்லாமல் சார்லி குரைக்காதே?'

ஜார்ஜ் டாய்லெட்டுக்குள்ளே பார்வையைப் போட்டு உன்னிப்பாக்கினார்.

அரை நிமிடத் தேடலுக்குப் பின்-

பைப் குழாய்க்குப் பக்கத்தில் நான்காய் மடித்த பேப்பர் ஒன்று சொருகி வைக்கப்பட்டு இருந்தது. எடுத்துப் பிரித்தார்.

கோணல் மாணலான கையெழுத்தில் வரிகள் ஓடியிருந்தது.

**சூட்கேஸ~க்குள் இறந்து கிடந்த நபர் யார்?**
**போலீசார் கண்டுபிடிக்க சில க்ளூஸ்.**

முதல் க்ளூ:
உயிரை விட்டவரின் பெயரில் 'மணி' இருக்கும்.



**2-வது க்ளூ:**
ஊர்: பகுத்தறிவு பகலவனின் ஊர்.
**3-வது க்ளூ:**
தொழில்: உன்னதமான தொழில்.
**4-வது க்ளூ:**
முகவரி: காவிரி ஓரம் போய் தேடுங்கள்.
**5-வது க்ளூ:**
மரணத்துக்கு காரணம்: அவன் மனிதனே அல்ல.

-இப்படிக்கு,
**நான்காவது குரங்கு.**

ஜார்ஜ் அந்த காகிதத்தை மடித்து பத்திரப்படுத்திக் கொண்டு வெளியே வந்தார். சார்லி இன்னமும் அந்த டாய்லெட்டைப் பார்த்துக் குரைத்துக் கொண்டிருந்தது.

## 15

அமெரிக்காவோடு நாம் அணு ஆயுத ஒப்பந்தம் செயதுகொண்டால் இந்தியா அமெரிக்காவுக்கு அடிமையாகிவிடும் என்று எதிர்க்கட்சியினர் சொல்லி வருவதை நம் பிரதமர் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தியா எதிர்காலத்தில் ஒரு வல்லரசாக மாற வேண்டுமானால் அணு ஆயுத தொழில் நுட்பத்தில் நாம் நிறைய கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. அந்த கற்றலை அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்தால் மட்டுமே பெற முடியும். இந்தியாவை அடிமைப்படுத்த யாராலும் முடியாது. இந்தியாவிடம் பிரிட்டீஷ் அரசு பாடம் கற்றுக் கொண்டதை யாரால் மறக்க முடியும்?

ஹூப்ளியின் போலீஸ் ஹெட் க்வார்ட்டர்ஸ். போலீஸ் கமிஷனர் பத்ரய்யா முன்பு கங்கோத்ரியும், மல்லய்யாவும் நின்று - அவர்

கோபத்தில் வெடித்த கேள்விகளுக்கு வியர்த்து வழிந்து பதில் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

''சௌந்தராவை ஒருத்தன் பட்டப் பகலில் சுட்டுட்டு போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலையில் தப்பிச்சும் போயிருக்கான். அவனைக் கண்டுபிடிக்க இதுவரைக்கும் என்ன ஸ்டெப்ஸ் எடுத்து இருக்கீங்க...? நீங்க எடுத்த நடவடிக்கைகளுக்கு ஏதாவது பலன் கிடைச்சிருக்கா...?''

கங்கோத்ரி தயக்கமாய் குரலை வெளியிட்டார்.

''ஸாரி சார்...! சௌந்தராவை சுட்ட சம்பவம் கண்ணிமைக்கும் நேரத்துக்குள்ளே நடந்ததால சம்பவத்தை நேர்ல பார்த்தவங்க யாரும் இல்லை. அதுவும் கொலையாளி சைலன்சர் துப்பாக்கியால் சுட்டிருக்கான். சத்தம் கேட்கவும் வாய்ப்பு இல்லை. பட் ஒரே ஒரு விஷயம் மட்டும் நமக்கு சாதகமாய் கிடைச்சிருக்கு சார்.''

''என்ன அது...?''

''சௌந்தரா சுடப்பட்ட இடத்துக்கு எதிரில் ஒரு ஜெராக்ஸ் கடை இருக்கு சார். அந்த ஜெராக்ஸ் கடையில் உட்கார்ந்திருந்த ஊனமுற்ற பெண் ஒருத்தி மரத்துக்கு கொஞ்சம் தள்ளி நின்றிருந்த காரையும் அந்த கார்க்குள் இருந்த ஒரு இளைஞனையும் பார்த்து இருக்கா...! சௌந்தரா சுடப்பட்ட அடுத்த நிமிஷமே அந்த அம்பாஸிடர் கார் வேகமாய் புறப்பட்டுப் போனதையும் அந்தப் பெண் நோட் பண்ணியிருக்கா. அந்த இளைஞன் எப்படியிருந்தான்னு அந்தப் பெண்கிட்டே கேட்டு அந்த அடையாளங்களை கம்ப்யூட்டர்க்கு கொடுத்து இருக்கோம். இன்னும் சில மணி நேரங்களில் புகைப்படங்கள் தயாராகி எங்களுக்கு கிடைக்கும். கொலையாளியைத் தேடற விஷயத்தில் அந்தப் போட்டோக்கள் எங்களுக்கு ஒரு பெரிய உதவியாய் இருக்கும் சார்...''

''மிஸ்டர் கங்கோத்ரி! நீங்க என்ன செய்வீர்களோ ஏது செய்வீர்களோ எனக்குத் தெரியாது. ஐ வாண்ட் ரிசல்ட்... பட்டப் பகலில் ஒரு



பெண்ணை சுட்டுக் கொன்ற சம்பவம் ஹைப்ளி போலீசுக்கு ஒரு இழுக்கு. அந்த இழுக்கைப் போக்கணும்ன்னா கொலையாளி கண்டுபிடிக்கப்படணும்...''

''வி... வில்... டூ... இட் சார்...''

''கோ... அண்ட் ப்ரொஸீட்...! பை... த... பை... ஒன் மோர் கொஸ்டின்...''

''எஸ்... சார்...''

''துரைபாண்டியனையும் கார் டிரைவர் காளியப்பனையும் கொலை செய்தது நான்தான்னு சௌந்தரா ஒப்புக் கொண்டார். பட் அந்தக் கொலைகளுக்கான காரணத்தை அவள் சொன்னாளா?''

''சொல்லலை சார்...! மேற்கொண்டு ஒரு இரண்டு நிமிஷம் உயிரோடு இருந்து இருந்தால் சௌந்தரா எல்லா உண்மைகளையும் சொல்லியிருப்பாள்.'' கங்கோத்ரி சொல்லிக் கொண்டிருக்கும் போதே கமிஷனர் பத்ரய்யாவின் செல்போன் குரல் கொடுத்தது.

எடுத்தார்.

மறுமுனையில் சென்னை போலீஸ் கமிஷனர் மாணிக்கவாசகம் பேசினார்.

''மிஸ்டர் பத்ரய்யா...! சௌந்தராவைக் கொன்ற கொலையாளியைப் பற்றி ஏதாவது க்ளு கிடைத்ததா?''

''நாட் யெட்...! முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். இப்போது கூட அதைப்பற்றித்தான் பேசிக் கொண்டு இருக்கிறோம். கொலையாளியைப் பற்றி ஒரு முக்கியமான தகவல் கிடைத்துள்ளது. அந்த தகவலின் அடிப்படையில் விரைவில் பிடித்து விடுவோம். பிடித்ததும் தகவல் தருகிறோம்...''

''தேங்க்யூ! பை... த... பை... எனக்கு இன்னொரு தகவலும் வேண்டும்.''

''சொல்லுங்கள்...''

''துரைபாண்டியன் கொலை செய்யப்பட்டது தலையில் ஆணி அடித்துதானே...?''

"ஆமாம்..."

"போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டில் அது குறிப்பிடப்பட்டு இருக்கிறதா...?"

"இப்போது குறிப்பிடப்பட்டு இருக்கிறது. எதற்காக கேட்கிறீர்கள்?"

"மிஸ்டர் பத்ரய்யா...! ஐந்தாண்டுகளுக்கு முன் துரைபாண்டியன் எப்படி தலையில் ஆணி அடித்து கொலை செய்யப்பட்டாரோ அதே மாதிரி இப்போது சென்னையில் பெரம்பூர் ரயில்வே ஸ்டேஷனில் ரயிலில் வந்த சூட்கேஸில் ஒரு நபர் கொலை செய்யப்பட்டு அடைக்கப்பட்டிருக்கிறார்... கூடவே சூட்கேஸில் நான்கு குரங்குகளின் பொம்மைகள்."

"தலையில் ஆணியடித்தா...?"

"ஆமாம்...! அதுமட்டும் இல்லை... இங்கே சென்னையில் மிகவும் பிரபலமாக இருக்கும் அரசியல்வாதியும் தாதாவுமான ஒருவர்க்கு கூரியர் தபாலில் நான்கு குரங்கு பொம்மைகள் அனுப்பப்பட்டு இருக்கின்றன. ஐந்து வருஷங்களுக்குப் பிறகு மறுபடியும் அதே பாணியில் கொலை."

"சூட்கேஸில் டெப்பாடி வந்ததா?"

"ஆமாம்..."

"யார் அந்த நபர்...?"

"போலீஸ் நாயை ஸ்மெல் பண்ண விட்டதில் அது ரயில்வே ஸ்டேஷனின் டாய்லெட்டுக்குப் போயிற்று. அங்கேயிருந்த பேப்பரில் இறந்த நபர் யார் என்பதைக் கண்டுபிடிக்க சில க்ளுக்கள் இருந்தன. அதை அடிப்படையாய் வைத்துக் கொண்டு எங்கள் போலீசார் விபரம் சேகரிக்கப் போயிருக்கிறார்கள்.

"என்ன இது புது குழப்பம்....? ஐந்து வருஷங்களுக்கு முன்னால் நடந்த ஒரு கொலையைப் போலவே இப்பவும் ஒரு கொலை. தன்னோட கணவர் துரைபாண்டியனையும், கார் டிரைவர் காளியப்பனையும் கொலை செய்தது சௌந்தரா. அந்த சௌந்தராவும் இப்போது



உயிரோடு இல்லை. சௌந்தரா இல்லையென்றால் வேறு யார்...?"

"மிஸ்டர் பத்ரய்யா...! சௌந்தராவைக் கொலை செய்தது யார் என்பதைக் கண்டுபிடித்து விட்டால் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் கிடைத்து விடும்...!"

"அதற்காகத்தான் இப்போது முயற்சி செய்து கொண்டு இருக்கிறோம். ஒரு ஜெராக்ஸ் கடையில் இருந்த பெண் கொலையாளியைப் பார்த்து இருக்கிறாள். அவள் சொன்ன அடையாளங்களை கம்ப்யூட்டர்க்குக் கொடுத்துள்ளோம். அது கொடுக்கப் போகும் கொலையாளியின் பல்வேறு புகைப்படங்களை வைத்துக் கொண்டு எப்படியும் இரண்டு நாட்களுக்குள் கொலையாளியை கண்டுபிடித்து விடுவோம்."

"கொலையாளியைக் கண்டுபிடித்ததும் எனக்கு உடனடியாய் தகவல் கொடுங்கள்."

"நிச்சயமாய்..."

## 16

இனி வருங்காலத்தில் எல்லாமே அணுசக்திதான். பெட்ரோல், டீசல் போன்ற வார்த்தைகளையெல்லாம் மறந்துவிட வேண்டிவரும். இப்போதுள்ள L.P.G. காஸ் சிலிண்டர்களுக்கு வேலை இருக்காது. அணு சக்தியால் இயங்கும் அடுப்புகள் ஒவ்வொரு வீட்டுக்கும் வந்து விடும். இதெல்லாம் எப்போது நடக்கும். அநேகமாய் 2020-க்குள்!

சென்னை.

டெப்டி கமிஷனர் ரவிகுமாரின் அறைக்குள் வேகநடை போட்டு உள்ளே நுழைந்த இன்ஸ்பெக்டர் அன்வர் சல்யூட் அடித்து விட்டு

நின்றார். ரவிகுமார் பார்த்துக் கொண்டிருந்த ஃபைலை மூடி வைத்து விட்டு அன்வரை ஏறிட்டார்.

''எஸ்...! ஆள்... யார்ங்கிறதை கண்டுபிடிச்சுட்டீங்களா மிஸ்டர் அன்வர்...?''

''கண்டுபிடிச்சுட்டோம் சார்... காகிதத்தில் எழுதப்பட்டு இருந்த முதல் 'க்ளூ' உயிரை விட்டவனின் பெயரில் 'மணி' இருக்கும். அதன்படி கொலையுண்டவனின் பெயர் ஜோதி மணி. ரெண்டாவது 'க்ளூ' பகுத்தறிவு பகலவனின் ஊர். பகுத்தறிவு பகலவன் என்பது பெரியாரைக் குறிக்கும். அவருடைய ஊர் ஈரோடு. மூன்றாவது 'க்ளூ' உன்னதமான தொழில். ஜோதி மணிக்கு ஆசிரியர் தொழில். நான்காவது 'க்ளூ' முகவரி: காவிரி ஓரம் போய்த் தேடுங்கள். காவிரி ஓரம் இருக்கிற ஊர் பள்ளிபாளையம். பள்ளிபாளையத்தில் உள்ள பள்ளிக் கூடங்களில் போய் விசாரித்தோம. ஜோதிமணி ஒரு பள்ளியில் பணி புரிவது தெரிய வந்தது. பள்ளியில் அவருடைய வீடு எங்கே என்று கேட்டோம். சொன்னார்கள். ஜோதிமணியின் வீட்டுக்குப் போனோம். வீடு பூட்டியிருந்தது. பக்கத்தில் விசாரித்த போது அவரைப் பற்றி கதை கதையாய் சொன்னார்கள்...''

''என்ன சொன்னார்கள்...?''

''ஜோதிமணிக்கு வயது 45. சொந்த ஊர் சென்னைக்கு பக்கத்தில் உள்ள திருவள்ளூர். நான்கு பெண்களைக் கல்யாணம் செய்துள்ளார். இவரோடு வாழ முடியாமல் மூன்று பெண்கள் ஓடியே போய் விட்டார்கள். ஒரு பெண் தற்கொலை செய்து கொண்டு இறந்து போயிருக்கிறாள். இவைகள் எல்லாவற்றையும் விட கொடுமை ஜோதிமணி பள்ளியில் மாணவிகளையும் விட்டு வைப்பது இல்லையாம். ஏழெட்டு பள்ளிகளில் பணிபுரிந்த இவர், எந்த பள்ளியில் பணி புரிந்தாலும் அந்தப்



பள்ளியில் ஒரு மாணவியாவது மர்மமான முறையில் இறந்து போவது வாடிக்கையாம். இவர் மீது எந்த புகார் வந்தாலும் பணத்தைக் கொடுத்து சரிக்கட்டி விடுவாராம்.''

''ஜோதிமணிக்கு ரிலேட்டிவ்ஸ் யாராவது?''

''யாரும் இல்லை சார்... பூட்டை உடைச்சு வீட்டை சோதனை பண்ணிப் பார்த்தோம். வீட்டில் பெரும்பாலும் ஆபாசப் புத்தகங்கள்: ஆபாச சிடிகள். உருப்படியாய் எதுவும் கிடைக்கலை சார்...''

''ஜோதிமணியின் பாலியல் பலாத்காரத்தால் பாதிக்கப்பட்ட யாரோ அவரைக் கொலை செய்து பழி தீர்த்து இருக்காங்க...''

''எஸ் சார்...! பட்... அந்த நான்கு குரங்குகள், தலையில் அடிக்கப்பட்ட ஆணி, இதெல்லாம் ஐந்து வருஷத்துக்கு முன்பு ஹாஃப்ளியில் கொலை செய்யப்பட்ட துரைபாண்டியனோடு ஒத்துப் போகிறதா? துரைபாண்டியனை கொலை செய்தது சௌந்தரா. ஐந்து வருஷங்களுக்குப் பின்னால் போலீஸ் விசாரணைக்காகப் போன சௌந்தராவை ஒரு இளைஞன் பட்டப் பகலில் சுட்டுக் கொன்று இருக்கிறான். அந்த இளைஞன் யார்? அவனுக்கு சௌந்தராவின் மேல் என்ன வெறுப்பு...?''

சில விநாடிகள் மௌனமாய் இருந்த டெப்டி கமிஷனர் பின் மெதுவாய் வாயைத் திறந்தார்.

''அன்வர்! நீங்கள் ஒரு வேலை செய்யுங்கள்.''

''சொல்லுங்கள் சார்...''

''ஜோதிமணி ஆசிரியராய் பணிபுரிந்த பள்ளிகளில் மாணவிகள் மர்மமான முறையில் இறந்து போனதாக சொன்னீர்கள். அந்த மாணவிகளின் பெற்றோர்கள் யார் யார் என்பதை கணக்கு எடுங்கள். அந்தப் பெற்றோர்களில் யாராவது ஒருத்தர்கூட கொலையாளியாக மாறியிருக்கலாம்.''

''மே... பி... சார்...'' அன்வர் தலையாட்டிக் கொண்டிருக்கும் போதே டெப்டி கமிஷனரின் உதவியாளர் பதட்டத்தோடு - கையில் கார்ட்லஸ் டெலிபோனோடு உள்ளே வந்தார்.

''ச... சார்...!''

''என்ன... கணேசன்...?''

''சார்...! மாத்ருபூதம் வீட்டில் செல்போன் குண்டுவெடித்து விட்டதாக தகவல்...''

## 17

**அ**ணுசக்தி என்பது ஒரு கத்தியைப் போன்றது. கத்தியால் சமையலுக்கு வேண்டிய காய்கறிகளையும் நறுக்கலாம். அதே கத்தியால் ஒரு மனிதனின் உயிரையும் முடிக்கலாம். அதே போலத்தான் அணுசக்தி ஒரு நாட்டின் ஆக்க வேலைக்கும் பயன்படும். அழிவு வேலைக்கும் பயன்படும். மூன்றாவது உலக யுத்தம் என்று வந்தால் அது அணு ஆயுதப் போராகத்தான் இருக்கும். வெற்றி பெற்றவன் சிரிக்க முடியாது. தோல்வியடைந்தவன் அழ முடியாது. காரணம் பூமி அணு ஆயுதப் போரின் காரணமாக ஒரு சாம்பல் நிறப் பந்தாய் மாறி இருக்கும்.

**ஹா**ப்ளி.

சுபாஷ் நகர் போலீஸ் ஸ்டேஷன். இருட்டான லாக்கப்புக்குள் ஜீரோ வாட்ஸ் பல்பு எரிய, அறையின் மையத்தில் ஒரு ஸ்டூலின் மேல் உட்கார்த்தி வைக்கப்பட்டிருந்தான் நாகப்பா.

எதிரில் லாட்டியோடு இன்ஸ்பெக்டர் மல்லய்யா. பக்கத்தில் அசிஸ்டெண்ட் கமிஷனர் கங்கோத்ரி. மல்லய்யா உறுமலான குரலில்



சொல்லிக் கொண்டிருந்தார்.

''இதோ பார்... நாகப்பா...! நீ உண்மையைப் பேசினால் உனக்கு எந்த தண்டனையும் கிடைக்காதபடி நான் பார்த்துக்குவேன். அஞ்சு வருஷத்துக்கு முந்தி நீ துரைபாண்டியனைப் பார்த்திருக்கே! அவரோடு பேசியிருக்கே... உண்டா... இல்லையா...?''

''ஆமா... சார்...''

''உனக்கும் அவர்க்கும் என்ன தொடர்பு...? துரைபாண்டியன் கொலை செய்யப்பட்டதுக்கு யார் காரணம்... எது காரணம்...?''

''சார்...! அவர் கொலை செய்யப்பட்டது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. துரைபாண்டியன் வீரண்ணாவோட சிற்பக் கூடத்துக்கு வந்து பழங்கால தெய்வச் சிற்பங்களை செய்து தரும்படியாக் கேட்டதும், அதுக்கு வீரண்ணா மறுப்பு சொன்னதும் எனக்குத் தெரியும். குறுக்கு வழியில் நிறைய பணம் சம்பாதிக்க ஆசைப்பட்ட நான் துரைபாண்டியனுக்கு உதவறதாய் சொன்னேன். அவரை என்னோட கிராமத்துக்குக் கூட்டிப்போய் - என்னோட கைவண்ணத்தில் உருவான பித்தளை உலோக சிற்பங்களைக் காட்டினேன். அதுல அவர்க்கு ரொம்பவும் பிடித்துப் போன சிற்பம்தான் அந்த நான்கு குரங்குகள். அந்த சிற்பத்தை நான் அவர்க்கு பரிசாய்க் கொடுத்தேன். நாளைக் கழித்து மறுநாள் என்னைப் பார்க்க வர்றதாய் சொல்லிட்டுப் போன துரைபாண்டியன் வரவேயில்லை. அவரோட ஊர் சென்னைன்னு தெரியும். ஆனா சென்னையில் எங்கேயிருக்கார்ன்னு எனக்குத் தெரியாது. ஆறுமாசம் வெயிட் பண்ணிப் பார்த்தேன். அவர் வரலை. அதுக்கப்புறம்தான் கர்நாடகா கைவினைஞர்கள் சங்கத்தில் ஏதோ வேலை காலியாய் இருக்கிறதாய் கேள்விப்பட்டு பெங்களூர்

வந்தேன். எங்க ஊர் எம்.எல்.ஏ. சிபாரிசில் வேலை கிடைச்சுது. நல்ல வேலை. கை நிறைய சம்பளம். பெங்களூரிலேயே செட்டில் ஆயிட்டேன். இந்த அஞ்சு வருஷ காலத்துல துரைபாண்டியனைப் பற்றி எப்பவாவது நினைப்பேன். அவர் இப்படி கொலை செய்யப்பட்டு இருப்பார்ன்னு நான் கொஞ்சம்கூட நினைச்சுப் பார்த்தது இல்லை சார்...''

''அப்படீன்னா... நீ துரைபாண்டியனை ஒரே ஒரு தட்வை பார்த்து பேசியதோடு சரி...?''

''ஆமா... சார்...! நான் அவர்க்கு பழங்கால சிற்பங்களை செய்து கொடுக்கிறதாய் சொன்னதும் ஒரு கட்டு பணம் எடுத்துக் கொடுத்தார். அவர் போன பிறகு பணம் எவ்வளவு இருக்குன்னு எண்ணிப் பார்த்தேன். அப்படி எண்ணிப் பார்க்கும் போது நடுவில் ஒரு பேப்பர்தான் இருந்தது. அது என்னான்னு எடுத்துப் பார்த்தேன். அதுல நிறைய போன் நெம்பர்கள் எழுதப்பட்டு இருந்தது. நாளை கழிச்சு மறுநாள் அவர் வரும் போது அந்தத் தாளைக் கொடுத்துடலாம்ன்னு என் பர்ஸ்ல எடுத்து வெச்சேன். ஆனா அவர் வரலை.''

மல்லய்யா பரபரத்தார்.

''அப்புறம் அந்த தாளை என்னடா பண்ணினே?''

''அது இன்னமும் என்கிட்டத்தான் சார் இருக்கு...'' - சொன்ன நாகப்பா தன் பேண்ட் பாக்கெட்டில் வைத்து இருந்த பர்ஸை எடுத்துப் பிரித்து உள்ளே இருந்த துண்டு காகிதங்களில் நிறம் மங்கி நைந்து போயிருந்த அந்த துண்டு பேப்பரை ஜாக்ரதையாய் எடுத்துக் கொடுத்தான்.

மல்லய்யா அதை வாங்கிப் பிரித்தார்.

பத்துக்கும் மேற்பட்ட டெலிபோன் எண்களும், இருபதுக்கும் மேற்பட்ட செல்போன் எண்களும் பால்பாயிண்ட் பேனாவால் கோணல் மாணலாய் கிறுக்கப்பட்டு தெரிந்தன.



மல்லய்யா வியப்பாய் நாகப்பாவைப் பார்த்தார்.

''வருஷம் அஞ்சாச்சு...! இந்த துண்டு பேப்பரை இவ்வளவு பத்திரமாய் வெச்சிருக்கியே... அதுக்கு என்ன காரணம்?''

''சார்...! என்னிக்காவது ஒருநாள் துரைபாண்டியன் என்னைத் தேடி வருவார்ங்கிற நம்பிக்கை எனக்கு இருந்தது. அதனால்தான் பத்திரமா வெச்சிருந்தேன். மற்றபடி எந்த காரணமும் இல்லை சார்.''

மல்லய்யா கங்கோத்ரியிடம் திரும்பினார்.

''சார்...! இந்த பேப்பரில் எழுதப்பட்டு இருக்கிற டெலிபோன் எண்கள் எல்லாம் சென்னை நெம்பர்களாய் இருக்கலாம். நான் உடனடியாய் சென்னைக்குப் போய் அங்கே உள்ள போலீஸ் அதிகாரிகளோடு கலந்து இந்த டெலிபோன் எண்களுக்கும் செல்போன் எண்களுக்கும் உரியவர்கள் யார் என்பதை ரகசியமாய் புலனாய்வு செய்ய வேண்டும். அப்படி புலனாய்வு செய்யும் போது கொலையாளியும் அந்த லிஸ்டில் இருக்கலாம்.''

''உடனே புறப்படுங்கள்...'' - என்றார் கங்கோத்ரி.

## 18

'அவனன்றி ஓர் அணுவும் அசையாது.' - இது ஒரு ஆத்திகவாதியின் கூற்று.

'அணுவின்றி இந்த அகிலமே அசையாது' - இது ஒரு நாத்திகவாதியின் கூற்று.

மாத்ருபூதத்தின் பங்களா போலீஸ் வளையத்துக்குள் இருந்தது.

செல்போன் வெடிகுண்டு வெடித்ததில்

அவருடைய அறையின் ஒரு பகுதி இடிந்து விழுந்து ஒரே புகை மண்டலமாய் காட்சியளித்தது. மாத்ருபூதம் முகம் இருண்டு போனவராய் அதிர்ச்சியிலிருந்து மீளாமல் டெப்டி கமிஷனர் ரவிகுமாரிடமும், இன்ஸ்பெக்டர் அன்வரிடமும் பேசிக் கொண்டு இருந்தார்.

''டி.சி.சார்...! கூரியர் தபாலில் எனக்கு நான்காவது குரங்கு பொம்மை வந்ததிலிருந்து நான் போலீஸோட பாதுகாப்பு வளையத்துக்குள்ளே தான் இருக்கேன். இந்த வீட்ல வேலை பார்க்கிறவங்க கூட எனக்குப் பக்கத்தில் வர்றது கிடையாது. அப்படி இருக்கும் போது வெடிகுண்டு பொருத்தப்பட்ட ஒரு செல்போன் எப்படி என்னோட அறைக்கு வந்ததுன்னு ஆச்சர்யமாயிருக்கு. நல்ல வேளை... அது வெடிக்கும் போது பக்கத்து அறையில் இருந்தேன். இல்லேன்னா... இந்நேரம் நான் கொத்துக்கறியாகியிருப்பேன்.''

''உங்களைப் பார்க்க கடைசியாய் வந்தது யாரு...?''

''கடைசியாய் வந்தது போலீஸ் கமிஷனர் மாணிக்கவாசகம்தான். அதுவும் ரெண்டு மணி நேரத்துக்கு முந்தி...!''

''அவர்க்கப்புறம் யாரும் வரலையா?''

''வரலை சார்...''

''நல்லா யோசனை பண்ணிப்பாருங்க மிஸ்டர் மாத்ருபூதம்.''

''இதுல யோசனை பண்ண ஒண்ணுமேயில்லை. எனக்கு நான்காவது குரங்கு பொம்மை பார்சலில் வந்ததிலிருந்து வெளியாட்கள் இந்த வீட்டுக்குள்ளே அனுமதிக்கப்படறதேயில்லை. போலீஸ் ஆபீஸர்ஸ்தான் உள்ளே வருவாங்க. தைரியம் சொல்லிட்டுப் போவாங்க... நான் சந்தேகப்படறதாய் இருந்தா போலீஸ் அதிகாரிகளைத்தான் சந்தேகப்படணும்...!''



''நோ... நோ...: போலீசுக்கு உங்க மேல என்ன கோபம்?''

''நான் கட்டப் பஞ்சாயத்துக்காரன், ரௌடி, அரசியல்வாதி - இந்த காரணங்கள் போதாதா...?''

''தயவு செய்து இப்படியெல்லாம் பேசாதீங்க மிஸ்டர் மாத்ருபூதம். எந்த போலீஸ் அதிகாரியும் சட்டத்தை மீறி செயல்பட மாட்டாங்க.''

ரவிகுமார் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவருடைய செல்போன் அழைத்தது. எடுத்து காதுக்கு ஒற்றினார்.

மறுமுனையில் போலீஸ் கமிஷனர் மாணிக்கவாசகம்.

''மிஸ்டர் ரவிகுமார்...! இப்ப எங்கே இருக்கீங்க...?''

''செல்போன் வெடிகுண்டு வெடித்த மாத்ருபூதம் பங்களாவில் இன்வெஸ்டிகேஷன்ல இருக்கேன் சார்...''

''ஏதாவது கண்டுபிடிக்க முடிந்ததா...?''

''இல்லை சார்... இப்பத்தான் இன்வெஸ்டிகேஷனை ஸ்டார்ட் பண்ணியிருக்கேன்...!''

''பக்கத்தில் இன்ஸ்பெக்டர் அன்வர் இருக்காரா?''

''இருக்கார் சார்...''

''அவர்கிட்டே பொறுப்பைக் கொடுத்துட்டு உடனடியாய் என்னை வந்து பாருங்க...!''

''எஸ்... சார்...!''

ரவிகுமார் செல்போனை அணைத்து பாக்கெட்டில் போட்டுக் கொண்டு மாத்ருபூதத்திடமும் அன்வரிடமும் விடைபெற்று வெளியே வந்து ஜீப்பில் ஏறினார்.

பதினைந்து நிமிடப் பயணம். கமிஷனர் அலுவலகம் வந்தது.

கமிஷனர் மாணிக்கவாசகத்தின் அறைக்குள் நுழைந்த ரவிகுமார் சல்யூட் ஒன்றை வைக்க - அவர் அதை தலையசைப்பால் ஏற்றுக் கொண்டு தனக்கு எதிரே உட்கார்ந்திருந்த மல்லய்யாவைக் காட்டி சொன்னார்.

''மிஸ்டர் ரவிகுமார்...! ஹி ஈஸ் மிஸ்டர் மல்லய்யா. இன்ஸ்பெக்டர் ஆஃப் போலீஸ்... ஹாஃப்ளி... கட்டபிரபா ஃபாரஸ்ட்டில் யானை விழுங்கிக் குளத்தில் காரோடு தள்ளி கொலை செய்யப்பட்ட துரைபாண்டியனின் கேஸை இவர்தான் இன்வெஸ்டிகேட் பண்றார். அந்தக் கேஸில் ஒரு முக்கியமான தடயம் கிடைக்கவே அதைப்பற்றி விசாரிக்க வந்திருக்கார்.''

ரவிகுமார் மல்லய்யாவின் கையைப் பற்றிக் குலுக்கிவிட்டு பக்கத்து இருக்கையில் உட்கார்ந்தார்.

''சொல்லுங்கள் மிஸ்டர் மல்லய்யா...! துரைபாண்டியன் கேஸ் விஷயமாய் உங்களுக்கு என்ன தடயம் கிடைத்தது?''

மல்லய்யா நாகப்பாவைப் பற்றியும் அவன் கொடுத்த துண்டு பேப்பரைப் பற்றியும் சொல்லிவிட்டு தான் பத்திரப்படுத்தி வைத்து இருந்த அந்த பேப்பரை எடுத்தார். ''இதில் இருக்கிற டெலிபோன் எண்கள், செல்போன் எண்கள் யார் யார்க்கு சொந்தமானது என்பதை ரகசியமாய் புலனாய்வு செய்து ஒரு லிஸ்ட் தயாரித்து வைத்து இருக்கிறேன். இந்த எண்களில் பெரும்பாலானோர் தொழில் அதிபர்கள், அவர் நண்பர்கள். இந்த லிஸ்டில் ஒரே ஒரு எண் மட்டும் என் மனதுக்கு நெருடலாக உள்ளது சார். அதைப் பற்றிப் பேசத்தான் கமிஷனரிடம் வந்தேன்.''

''உங்களுக்கு நெருடலான அந்த நெம்பர் எது மிஸ்டர் மல்லய்யா...?''



''அந்த நெம்பர்க்கு உரியவரின் பெயர் தி.நகர் தியாகு. இவன் ஒரு கூலிப்படைத் தலைவன். துரைபாண்டியனுக்கும் கூலிப்படைத் தலைவனுக்கும் என்ன தொடர்பு இருந்து இருக்க முடியும்...?''

''தி.நகர் தியாகுவிடம் இதைப்பற்றி விசாரித்தீர்களா?''

''இல்லை... இதைப்பற்றி உங்களிடம் முறையாய் அறிவித்துவிட்டு நீங்கள் அனுப்பும் ஒரு போலீஸ் அதிகாரியோடு போய் அந்த தியாகுவை விசாரணை செய்யலாம் என்று இருக்கிறேன்...!''

ரவிகுமார் எழுந்தார். ''நான் உங்களோடு வருகிறேன்... புறப்படுங்கள். இப்போதே அவனிடம் என்கொய்ரி நடத்தி விடலாம்.''

## 19

ஒரு அணு உலை மூடப்பட்டாலும் கூட அதிலிருந்து வெளிப்படும் கதிரியக்கம் 25 ஆண்டுகள் வரை வீரியத்தோடு இருக்கும்.

தொண்ணூறு கிலோ உடம்போடு ஆறடி உயரத்தில் மதமதவென்று இருந்த தி.நகர் தியாகு பான் பீடாவை மென்று கொண்டே தனக்கு எதிரே உட்கார்ந்திருந்த ரவிகுமாரையும் மல்லய்யாவையும் ஒரு கோணல் சிரிப்போடு பார்த்தான்.

''நீங்க கரெக்டா நூல் பிடிச்சுட்டு வந்துட்டீங்க சார். அஞ்சு வருஷத்துக்கு முந்தி துரைபாண்டியனுக்கும் எனக்கும் தொடர்பு இருந்தது. அவர் எனக்கு கையில் ஒரு லட்ச ரூபாயைக் கொடுத்து ஒரு வேலை கொடுத்து இருந்தார்.''

''என்ன வேலை...?''

''அவர்க்கு பிடிக்காத ஒருத்தனை போட்டுத் தள்ளற வேலை.''

''யாரவன்...?''

''அவன் பேரு கமலகுமார். ராயப்பேட்டையில் ஒரு போட்டோ ஸ்டுடியோ வெச்சிருக்கான். துரைபாண்டியனோட மனைவி சௌந்தராவுக்கும் அந்த கமல குமார்க்கும் இல்லீகல் காண்டாக்ட். துரைபாண்டியன் வெளியூர் போயிட்டா ரெண்டு பேரும் ஜாலியாய் மகாபலிபுரம் பக்கம் போயிடுவாங்க. துரைபாண்டியனுக்கு இது தெரியவந்ததும் என்னை காண்டாக்ட் பண்ணினார். ஒரு லட்ச ரூபாயைக் கையில் தந்து போட்டுத் தள்ளும்படி சொன்னார். ஆனா சௌந்தரா அதுக்குள்ளே முந்திகிட்டு கமலகுமாரை ஹனிமூன் கூட்டிப்போய் கணவனோட கதையையும், கூட இருந்த டிரைவரோட கதையையும் முடிச்சு கார்ல வெச்சு ஒரு காட்டில் இருக்கிற குளத்தில் தள்ளிவிட்டு வந்துட்டா. துரைபாண்டியனை காணோம்ன்னு பேப்பர்ல நியூஸ் வந்ததும் நான் சௌந்தராவை நேர்ல சந்திச்சு மிரட்டின போதுதான் அந்த உண்மை வெளியே வந்தது. உண்மையை போலீசுக்கு கொண்டு போகாமே இருக்கிறதுக்காக சௌந்தரா எனக்கு ரெண்டு லட்ச ரூபாய் கொடுத்தா. நானும் பணத்தை வாங்கிகிட்டு 'கள்ளக் காதல் வாழ்க!'ன்னு ஆசீர்வாதம் பண்ணிட்டு வந்துட்டேன்...! ரெண்டு நாளைக்கு முன்னாடி **சௌந்தரா ஹனிமூனில் கடப்பட்டு மரணம்** என்கிற செய்தியைப் படிச்சுட்டு உடனே கமலகுமாரைப் போய் பிடிச்சேன். 'சௌந்தராவை நான்தான் கட்டேன்'னு ஒத்துக்கிட்டான்.

'சௌந்தராவை ஏன் தீர்த்துக் கட்டினே'ன்னு கேட்டேன். 'போலீசுக்கு அவ மேல சந்தேகம் வர்ற



மாதிரி என் மனசுக்குப்பட்டது. போலீஸ் அவளைக் கைது செய்து டார்ச்சர் பண்ணி விசாரிக்கும் போது என்னைக் காட்டிக் கொடுத்துடுவான்னும் என் மனசுக்குப்பட்டது. அதனால போட்டுத் தள்ளிட்டேன்'னு சொன்னான். இந்த உண்மையும் போலீசுக்கு போகாமே இருக்கிறதுக்காக அவன் எனக்கு ரெண்டு லட்ச ரூபாய் கொடுத்தான். எனக்கென்ன சார்... பணம் கைக்கு வந்தா போதும்...! இப்ப நீங்க வந்து கேட்டீங்க. உண்மையைச் சொல்லிட்டேன். ராயப்பேட்டை போட்டோ ஸ்டுடியோவில் கமலகுமார் ஒரு அப்பாவி மாதிரி உட்கார்ந்து இருப்பான். போய் அரெஸ்ட் பண்ணுங்க. குற்றத்தை மறைச்ச குற்றத்துக்காக என்னையும் கைது பண்ணுங்க. ரெண்டு மணி நேரத்துல ஜாமீன்ல வந்துடறேன். என்மேல முப்பத்தெட்டு கேஸ் இருக்கு. இது முப்பத்தொன்பதாவது கேஸ்... எல்லாத்தையும் என் லாயர் சீனிவாசமூர்த்தி பார்த்துக்குவார். இப்ப போயிட்டு வர்றீங்களா...?'' சொல்லிவிட்டு வாயிலிருந்த பீடா எச்சிலை ஜன்னல் வழியே துப்பினான் தி.நகர் தியாகு.

## 20

மாத்ருபூதத்தின் பங்களா.

அவருடைய அறை.

மேஜையின் மேல் பத்திரிகைகள் இறைந்து கிடக்க எல்லாவற்றிலும் விதவிதமாய் செய்திகள்.

சௌந்தரா - கமலகுமார்
கள்ளக் காதல் அம்பலம்.
கமலகுமார் கைது.

**காமக் கொடூரன் பள்ளியாசிரியர்**
**ஜோதிமணியின் கோரக் கொலை.**
**துப்பு கிடைக்காமல் போலீஸ் தவிப்பு.**

**யார் அந்த நான்காவது குரங்கு...?**
**அடுத்த பலி யார்?**

**கிலியில் மாத்ருபூதம்**
**செல்போன் குண்டு**
**மறுபடியும் வெடிக்குமா?**

பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்த மாத்ருபூதத்துக்கு முன்பாய் வந்து நின்றாள் அவருடைய மனைவி துர்க்கா. காப்பியைக் கொடுத்துவிட்டு பக்கத்தில் உட்கார்ந்தாள். மெல்லிய குரலில் கேட்டாள்.

''அடுத்தது யார்ங்க...?''

''தி.நகர் தியாகு... இன்னும் ரெண்டு நாளைக்குள்ளே தியாகுவோட தலையில் ஆணி இறங்கிடும். நான்காவது குரங்கு பொம்மை அவனோட டெட்பாடிக்குப் பக்கத்துல உட்கார்ந்திருக்கும். நம்ம பாண்டுரங்கன் எல்லாத்தையும் துல்லியமா செஞ்சு முடிப்பான்.''

''போலீசுக்கு உங்க மேல சந்தேகம் வந்துடாதே?''

மாத்ருபூதம் சிரித்தார்.

''எப்படி வரும் துர்க்கா...! நம்ம வீட்டுக்கும் கூரியர்ல நான்காவது குரங்கு வந்திருக்கு. நாம வெடிக்க வெச்ச செல்போன் குண்டு நம்மை எந்த ஜென்மத்திலும் சந்தேகப்பட வைக்காதே...!''

''எதுக்கும் நாம ஜாக்கிரதையாய் இருக்கிறது நல்லதுங்க. போலீசைக் குறைச்சு எடை போட வேண்டாம்.''

''இதோ பார் துர்க்கா...! இத்தனை நாளும் பணம் சம்பாதிக்கிற வெறியில் எவ்வளவோ



அட்டூழியம் பண்ணினேன். அதற்கு பிராயச்சித்தமாத்தான் இந்த நான்காவது குரங்கை கையில் எடுத்திருக்கேன். இந்த சமூகத்தில் மனிதத்தன்மை இல்லாமே எவன் எவன் இருக்கானோ அவனையெல்லாம் கண்டுபிடிச்சு இல்லாமே பண்றதுதான் என்னோட வேலை. சின்னதா ஒரு லிஸ்ட் பண்ணியிருக்கேன் கேட்கறியா...? மருமகளை படுக்கைக்கு கூப்பிட்டு அவள் வரமாட்டேன்னு சொன்னதுக்காக அவளை தீவைத்து கொளுத்திய மாஜி துணைவேந்தர் பலராமன், கன்னியாஸ்திரிகளை பாலியல் பலாத்காரம் செய்த பாதிரியார் ஞானப் பிரகாசம், குப்பத்து குடிசைகளுக்கு தீ வைச்சு இருபதுக்கும் மேற்பட்ட குழந்தைகள் சாகக் காரணமாய் இருந்த மாஜி எம்.எல்.ஏ. மார்த்தாண்டம்... இப்படி லிஸ்ட்ல நிறைய பேர் இருக்காங்க.''

''என்னங்க...!''

''சொல்லு...!''

''உங்களை என்கௌண்ட்டர் பண்ண போலீசுக்கு ஒரு எண்ணம் இருக்காமே?''

''உண்மைதான்! எந்த நிமிஷமும் என்னைப் போட்டுத் தள்ளலாம். நான் என்ன நல்லவனா...? அக்கிரமம் பண்ணினவன்தானே! என்கௌண்ட்டர் பண்ணட்டும். செத்துட்டுப் போறேன். அதுக்குள்ளே என்னால முடிஞ்ச அளவுக்கு இந்த கிரிமினல் குப்பைகளை சுத்தம் பண்ணிட்டு போறேன்.''

துர்க்காவின் கண்களில் நீர் பளபளத்தது.

''என்ன துர்க்கா... அழுறியா...?''

''இல்லீங்க...! இது சந்தோஷத்துல வந்த கண்ணீர்...!'' சேலை தலைப்பால் கண்களை ஒற்றிக் கொண்டாள் துர்க்கா.

**முற்றும்.**